உ
சிவமயம்



# நயினாதீவு
# ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவில்

# திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர் - பாகம் II.

28-08-1983

ஞாயிற்றுக்கிழமை

University of Jaffna
235.305
NAY
183631(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
Nainativu Sri Nagapooshani Amman Kovil

நூலகம்
பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
1988
PERIODICALS DIVISION
LIBRARY

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235.302
NAY AR
2007

உ
சிவமயம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

# திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர்

பாகம் – II.

28 - 08 - 1983

183631

ARCHIVES

University of Jaffna
183631
Library

*

183631

அறங்காவலர் சபை வெளியீடு

1983

UNIVERSITY OF JAFFNA * LIBRARY *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுந்தருளி அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நாகபூஷணி

— டாக்டர். தியாகர் திருநாவுக்கரசு —
ஆர். எம். பி. (இலங்கை) எல்எல். பி. (இலங்கை), சட்டத்தரணி.
தலைவர் – அறங்காவலர் சபை

அலைகடல் மத்தியில் ஆட்சி செய்யும் எமது அம்பாள் நாகத்தால் பூஜிக்கப் பெற்ற சிறப்பால் பல ஆயிரம் ஆண்டுகளாக நாகபூஷணி என்னும் நாமம் ஏந்தி பல தினசரிலும் வாழும் அடியவர்களின் குறைகள் யாவையும் அவர்கள் விரும்பிய வாறே தீர்த்துள்ளமையை உலகத்தின் பல திக்கிலும் இருந்துவரும் காணிக்கைகள் பறை சாற்றுகின்றன.

இவ்வாலயத்தின் வரலாற்றை அன்பரும் எமது அறங்காவலர் சபைக் காரிய தரிசியுமான திருவாளர் நாகேசு சிவராசசிங்கம் விபரமாக ஆராய்ந்து உள்ளார். 1938-க்கு முன் ஒரு சிலரின் ஆதிக்கத்தில் இருந்த இத் தேவஸ்தானத்தை நயினு தீவைச் சேர்ந்த திரு. கதிரித்தம்பி கந்தையாபிள்ளை அவர்களும், ஏனைய இவ்வூரைச் சேர்ந்த நால்வரும் நம்பிக்கைச் சொத்துச் சட்டம் 102-ம் பிரிவுப்படி ஒரு நம்பிக் கைத் தர்மச் சொத்தாகப் பிரகடனம் செய்யக்கோரி 14151 வழக்கை யாழ். மா. நீதிமன்றத்தில் தாக்கல் செய்து 1949-ல் இருந்து ஒரு நம்பிக்கைச் சொத்தாக பிர கடனம் செய்ததை அடுத்து தேவஸ்தானத்தை 9 பேர் கொண்ட ஒரு தர்மபரிபா லன சபை பரிபாலித்து வருகின்றது. இது அன்பர்கள் கொடுத்து உதவும் பவுண், வெள்ளி, பணம் யாவையும் முறைப்படி பரிபாலித்து வந்துள்ளது. இதன்பின் 1975-ம் ஆண்டு வரை உள்வீதி மண்டபம், வசந்த மண்டபம், அம்பாளின் தேர், பிள்ளையார் தேர் செய்யப்பட்டமையும், 1975-ம் ஆண்டுக்குப் பின் அம்பாளுக்குப் பல நகைகள் வெள்ளித் திருவாசிகள், முருகனுக்குத் தேர், அம்பாளுக்கு மஞ்சம், தேர்க்கொட் டகை, கல்யாண மண்டபம், யாத்திரிகர் மடங்கள், தென்வாயில் இராஜகோபுரம் முதலியன அமைக்கப்பட்டமையும் யாவரும் அறிந்ததே.

14151 வழக்கில் வழங்கப்பட்ட நிர்வாகத் திட்டத்தின் சில குறைபாடுகளை நீக்க 1976-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ஆம் நாள் நானுவிதம் / 39 என்ற வழக்கை அப்போது உள்ள தலைவர் நா. க. கதிரவேற்பிள்ளை, (தற்போதய கிளிநொச்சி நீதவான்), தியாகர் திருநாவுக்கரசு, தியாகர் கந்தையா மகாலிங்கசிவம் ஆகியோர்,

1. பரமலிங்கம் கந்தசாமி
2. வே. பொன்னம்பலம்
3. வி. சபாநாதன் (மாஜி தனுதிகாரி)
4. சு. கதிரேசு (மாஜி காரியதரிசி)
5. கா. ஆறுமுகம்

என்போருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தித் தாக்கல் செய்து சுமார் மூன்றுண்டுகள் கட்சிக்காரரின் செலவில் வழக்கு நடந்தது. இதன் பயனுகப் பல ஒழுங்குகளை யாழ். மாவட்ட நீதிபதி திரு. ஆசீர்வாதம் அவர்கள் நடை முறைக்காகச் சிபார்சு செய்தார். இதை அடுத்து, பவுண் 28 மஞ்சாடிப்படி பதி வும், யாழ். வர்த்தக வங்கியில் ஒரு நடைமுறைக் கணக்கும் திறந்து உள்ளோம். இதே வேளை புங்குடுதிவு மக்கள் வங்கியிலும் நடைமுறைக் கணக்கு திறக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்த வசூல் வைப்புச் செய்யப்படுகின்றது. ரூபா 200க்கு மேற்பட்ட தொகை
கொடுப்பனவுகள் யாவும் காசோலை மூலமாக நடைபெறுகின்றன. நிறைவேற்று உத்
தியோகஸ்தர், ஒரு கணக்காளர், ஒரு தட்டெழுத்தாளர், கணக்கு லிகிதர் ஆகியோர்
நியமிக்கப்பட்டுள்ளார்கள். கணக்குகள் யாவும் நவீன முறைப்படி நடைமுறைக்கு
வந்துள்ளன. எனவே உங்கள் நாகபூஷணியின் ஆலய சொத்துக்கள் உங்கள் நன்
கொடைகளால் யாவும் தற்போது சீராகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளன. புதிதா
கக் கோவிலுக்கு தென்வாயில் இராஜகோபுரமும் புதுமுறையிலானதும் அழகானது
மான அர்த்த மண்டபமும் திருவாளர் இ. வைத்திலிங்கம் (பொறியியலாளர்) அவர்
களின் அமைப்பில் நடைபெற்று உள்ளன. இவர் ஆக்கமும், ஊக்கமும் பண
உதவி பெருமலே சகலவிதமான ஆலோசனைகளையும் வழங்கி பல கஷ்டத்தின் மத்தி
யில் எம்மை வழி நடத்தியுள்ளார். அவருக்கு எனது நன்றி சபை சார்பாக என்றும்
உள்ளதாகுக.

எனவே முறைப்படி 1975-ம் ஆண்டு நடைபெற வேண்டிய குடமுழுக்கு
(கும்பாபிஷேகம்) பல எதிர்பாராத காரணங்களால் 1983-ம் ஆண்டு ஆனி 30-ம் நாள்
(14-7-83-ல்) தான் கைகூட வந்துள்ளது. உங்கள் நாகபூஷணியின் கோவில் புது
மெருகு ஊட்டப்பட்ட அலங்கார தேவஸ்தானமாக மலர்ந்துள்ளது. தேவஸ்தா
னத்தை துப்பரவாகவும் உட்பிரகாரங்களில் கற்பூரம் கொழுத்தி அசுத்தம் செய்யா
மலும், மிகுதி சந்தனம், குங்குமம் சுவரில் பூசாமல் தவிர்த்தும் உதவுமாறு வேண்டு
கின்றேம். ஏனைய சகோதர தர்மகர்த்தாக்கள், தேவஸ்தான குருமார்கள், தொழி
லாளிகளின் ஒத்துழைப்புக்கும் ஆக்கபூர்வமான ஆலோசனை வழங்கிய பெருமக்களுக்
கும், ஏனையோருக்கும் எல்லாம் வல்ல நாகபூஷணி நலம் யாவும் ஈந்து அருள்
பாலிக்க வேண்டுகின்றேன். இந்தத் தர்மச் சொத்தை உலகெங்கும் வாழும் இந்துக்
களாகிய அனைவரும் விழிப்பாக இருந்து இந்தக் கோவிலின் நிர்வாக அலுவல்களில்
பங்கு கொண்டு ஆக்கபூர்வமான அறிவுரைகளைத் தந்து உதவி உங்கள் நாகபூஷணி
யின் சிறப்புக்கு மெருகூட்ட வேண்டிய பணியை உங்கள்முன் சமர்ப்பிக்கின்றேன்.

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகேஸ்வரம்

நா. சிவராசசிங்கம் (செயலாளர், அறங்காவலர் சபை)

## நயினாதீவு : அமைவிடம் - சென்றடையும் வழி.

இலங்கைத் தீவின் வட புறத்தே யாழ்ப்பாண மாநகரில் (JAFFNA) இருந்து தென் மேற்கில் 23 மைல் (சுமார் 35 கிலோ மீற்றர்) தொலைவில் அலைகடல் நடுவே அழகுற அமைந்திருப்பது நயினாதீவு. யாழ்ப்பாண மாநகரில் இருந்து புங்குடுதீவுக் கிராமத்தின் தென்மேற்கு எல்லையிலுள்ள குறிகாட்டுவான் (KURIKADDUVAN) எனும் இடத்திலுள்ள இறங்குதுறை வரை, வடபிராந்திய போக்குவரத்துச் சபையினராலும், தனியாராலும் பேருந்து வண்டிச்சேவை நடாத்தப்பட்டு வருகின்றது. குறிகாட்டுவானிலிருந்து சுமார் ஒரு மைல் மேற்கே கடல் நடுவே அமைந்துள்ள நயினாதீவிலுள்ள ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலின் முன்பாக அமைந்திருக்கும் இறங்குதுறையை அடைவதற்கு யாழ்ப்பாண மாவட்ட அபிவருத்திச் சபையின் கட்டுப்பாட்டின் கீழ் பயணப் படகுச் சேவை நடாத்தப்படுகிறது.

நயினாதீவில் கோவிலிற்கு முன்பாக உள்ள இறங்குதுறையில் பயணப் படகில் இருந்து இறங்கி வருபவரை ஆசீர்வதித்து நல்வரவு கூறுபவள் போன்று நீலத்திரைக் கடல் ஓரத்தில் கோவில் கொண்டு உறைகிறாள் நயினை நாகபூசணி அம்மை. வட கிழக்கு மூலையில் நாகபூசணி அம்மையின் எழில் மிகு கோவில் அமையப்பெற்ற நயினாதீவு, வடக்குத் தெற்காக ஏறக்குறைய 3 மைல் நீளமும், கிழக்கு மேற்காக சுமார் 1 மைல் அகலமும் உடையதும், பெருநிலப் பகுதியுடன் சிறிதும் இணையப் பெறாது முற்றாகத் துண்டிக்கப்பட்டதுமான சின்னஞ் சிறு தீவாகும். தமிழ் நாட்டின் மிகக் கிட்டிய இடத்திலிருந்து இத் தீவு ஏறக்குறைய 30 மைல் தொலைவில் உள்ளது.

## நயினை மக்கள்

இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும், மீன்பிடித் தொழிலிலும் முன்னேற்றம் காணப்படுகிறது. நயினாதீவு வாசிகள் பொதுவாக விவேகமும், கணித தமிழ் மொழி அறிவும், தமிழ் இலக்கியப் பயிற்சியும், அழகான கையெழுத்தும் இயல்பாகவே வரப் பெற்றவர்கள். அரசாங்கத் திணைக்களங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் இவர்களில் பலர் மிகுந்த செல்வாக்குடன் பணியாற்றி வருகின்றனர். இன்று இத்தீவு ஒரு சர்வ மத சந்நிதியாக பரிமளிக்கின்றது. பௌத்த விகாரம், கிறீஸ்தவ தேவாலயம், பள்ளிவாசல் முதலியனவும் இச் சிறு தீவில் அமையப்பெற்று விளங்குகின்றன. தீவில் வசிக்கும் சுமார் 4500 பேரில் 95 வீதம் இந்துக்கள் ஆவர். எஞ்சிய 5 வீதத்துள் முஸ்லீம்களும்; கிறீஸ்தவர்களும் அடங்குவர். இங்கு பௌத்த சமயிகள் எவரும் இல்லை. விகாரையில் உள்ள பிக்குவுடன் அவரது உதவியாளர் இரண்டொருவர் வசிக்கின்றனர். நன்னீர் அருகிவரும் காரணத்தினாலும் உயர்கல்வியை விரும்பியும், விவசாய முன்னேற்றம் நாடியும், நாகரீக வாழ்வைத் தேடியும் நயினை மக்களில் 5 முதல் 10 குடும்பங்கள் வரை யாழ்ப்பாணப் பட்டணத்தை அண்டிய பகுதிக்கு ஆண்டுதோறும் இடம்பெயர்கின்றனர். யாழ்நகரை அண்டிய பகுதிகளில் காணிகளின் விலை சமீப காலத்தில் பன்மடங்கு அதிகரித்துள்ளமை இவ்விடப்பெயர்ச்சியைத் தற்போது கட்டுப்படுத்தியுள்ளது. நல்ல குடிநீர், நீர் மின்சக்தி, கல்வி வசதி முதலியன இத்தீவு மக்களிற்கு கிடைக்க ஆவன செய்யாவிட்டால் எதிர்காலத்தில் இக் குடிப் பெயர்ச்சியைத் தடுப்பது கடினமாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகேஸ்வரி ஆலயம்

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் எப்போது தோன்றியது; எவ்வாறு வளர்ந்து புகழ்பெற்றது என்ற வினுக்களுக்கு ஆதாரபூர்வமான விடை தரத்தக்க சரித்திர நூல்களோ, குறிப்புக்களோ கிடைத்தில. எனினும், இரண்டாயிரத்துக்கு மேல் பத்தாயிரம் ஆண்டுகள் வரை இவ்வாலயம் பழமை வாய்ந்ததாக இருக்கக்கூடும் என, இவ்வாலய மூலத்தானத்துள் அமைந்த கருங்கல்லிலான ஐந்தலை நாக உருவை ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். முதலில் நாக வழிபாடு ஆக ஆரம்பித்து, நாக வழிபாடு கைவிடப்பட்ட பிற்காலத்தில், அம்மன் சிலையும் மூலத்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கலாம். மூலத்தானத்துள் அமைந்த நாக உருவின் வால் பகுதி நிலத்துள் பல அடி ஆழத்துக்குத் தோண்டிப் பார்த்த போதும் முற்றுப் பெறுது வளர்ந்து சென்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் நுனிப்பகுதியே அயலிலுள்ள புளியந்தீவு அல்லது புலியேத்தி என்னுமிடத்தில் உள்ள நாகதம்பிரான் கோவிலின் மூலத்தானத்தில் சிவலிங்கமாக வெளிக்கிளம்பியுள்ளதாக ஒரு நம்பிக்கையும் மக்கள் மத்தியில் எவ்வாறே ஏற்பட்டு வலுப்பெற்றுள்ளது.

## ஆலயத்தின் பிற்கால வரலாறு

யாழ்ப்பாணக் கச்சேரியில் உள்ள சைவக் கோவில்கள் பதிவு செய்வதற்கான பழையதொரு இடாப்பில் இக்கோவிலைப் பற்றிய பின்வரும் குறிப்பு காணப்படுகின்றது; இந்தப் பதிவேடு நூறு ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்டது.

### நாகபூஷணி அம்மன் கோவில்

*இராமலிங்கர் இராமச்சந்திரர் 1788 ல் கட்டியது.*

**மனேச்சர் :** *இராமலிங்கர் கார்த்திகேசரும் பிறரும். கல்லுக் கட்டடம்.*

**திருவிழா ;** *ஆண்டுக்கொருமுறை ஆனி 10 ம் தேதி தொடக்கம் 20 ம் தேதி வரை 10 நாள் திருவிழா. கோவில் வீதியில் அம்பாளைக் காவிக் கொண்டு வலம் வருதல் அல்லது தேரில் வலம் வருதல்.*

**திருவிழாக்** *காலங்களில் 10,000 பேர் வரை வருகின்றனர், யாழ்ப்பாணத்திலும் அயலிலுள்ள தீவுகளிலும் இருந்து யாத்திரீகர் வருகின்றனர்.*

1856 ம் ஆண்டு யூலை மாதம் 18 ம் திகதி காரைதீவு பிரசித்த நொத்தாரிஸ் சி. கந்தர் என்பவர் முகதாவில் 340 ம் இலக்கத்தில் முடிந்த உறுதிச் சாதனப்படி, '' கோவிலின் முதலாம் பராபரிப்பு (அறங்காவலர்) கதிரித்தம்பி சின்னத்தம்பி, இரண்டாம் பராபரிப்பு முத்துக்குமாரு ஆறுமுகம், மூன்ரும் பராபரிப்பு இராமலிங்கம் சின்னத்தம்பி, நான்காம் பராபரிப்பு இராமலிங்கர் கார்த்திகேசர், இவர்களின் மேற்பராபரிப்பு எசமாஞக கோப்பாய்க்குடி கார்த்திகேசக் குருக்கள் பரமசுவாமிக் குருக்களும், ஆக ஐவரும், அவர்களாலும், வேறும் நயினைவாசிகள் சிலராலும் நியமிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. மேற்கூறிய உறுதிசாதனப்படி கோவிலை நிர்வகிக்க நியமிக்கப்பட்ட பஞ்சாயத்தார்கள், அதே நொத்தாரிஸ் முகதாவில், அதே திகதியில் 341 ம் இலக்கத்தில் முடிந்த உறுதிச் சாதனப்படி, நயிஞதீவு வாசிகளான கணேசஐயர் குமாரசாமிஐயர், சங்கரிஐயர் ஐயாக்குட்டிஐயர் ஆகிய இரு பிராமணர்களையும் '' நாளொன்றிற்கு இரண்டு படி அரிசியும், அதற்கடுத்த பூசைச் சாமான்களும் தர ஏற்றுக்கொண்டு, மாதமொன்றிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து, பதினைந்து நாள் விதமாக காலாதிகாலங்களுக்குப் பூசைபண்ண" நியமித்தனர். இவ்விருவரதும் சந்ததியாரே தற்போது கோவிலில் நித்திய பூசை செய்யும் குருக்கள்மாராவர். நொத்தாரிஸ் க. விசுவலிங்கம் முகதாவில் 5, 1. 1878 ம் தேதி அன்று 275 ம் இலக்கத்தில் முடிந்த மற்றுமோர் சாதனப்படிக்கு சின்னத்தம்பி வேலாயுதர், நாகனுதர் வேலுப்பிள்ளை, இரகுநாதர் சரவணமுத்து, கார்த்திகேசர் இராமலிங்கர் ஆகியோர் பராபரிப்புக் காரராகவும், இவர்களின் மேற்பராபரிப்புக் காரராக இராமலிங்கர் கார்த்திகேசர், கதிரித்தம்பி இராமச்சந்திரர், கோப்பாய் பரமசுவாமிக் குருக்கள் வைரவநாதக் குருக்களும் நியமிக்கப்பட்டனர். நியமிக்கப்பட்டவர்கள் யாவரும் பராபரிப்புக்காரரகவே ( நிருவாகிகள் ) நியமிக்கப்பட்டதிலிருந்து கோவில் அக்கால முதலே பொதுச் சொத்தாக இருந்து வந்துள்ளது தெளிவு. 1897 ம் வருடம் யூன் மாதம் 28ஆம் நாள்யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் 24476 ம் இலக்க வழக்கில் வழங்கப்பட்டதீர்ப்பும் அத்தீர்ப்புப்படி பதவியேற்ற நிர்வாகிகளில் பலரிறக்க, நீதிமன்றக் கட்டளையோ வழிபடுவோரது சம்மதமோ இல்லாது, இறந்தோரது பிள்ளைகள் நிருவாகத்தை முறையீனமாகத் தாமபகரித்ததன் காரணமாக, நயினைவாசிகள் 33 பேர் சமர்ப்பித்த 10. 5. 1938 ம் தேதிய முறைப்பாட்டில் குறித்த விடயங்களை விசாரிக்க வடமாகாண அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையும், அவ்வாணைக்குழு விசாரணையின் தொடர்பாக முறைப்பாட்டாளரில் ஐவர் தொடுத்த யாழ். மாவட்ட நீதிமன்றத்தின் 14151 ம் இலக்க வழக்கில் வழங்கப்பட்ட நிர்வாகத் திட்டமும், உரித்தாக்கற் கட்டளையும், இம் மலரின் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன, இவற்றிலிருந்து கடந்த நூற்றுண்டு காலக் கோவில் நிருவாக வரலாறு ஓரளவுக்கு ஆதாரபூர்வமாக அறியத்தக்கதாக உள்ளது. இக் காலத்துள் ஐந்தாண்டு காலம் ஒப்பந்த அடிப்படையில் கோவில்முகாமை, நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் கையிலுமிருந்துள்ளது. நொத்தாரிஸ் வே. சிவப்பிரகாசம் முகதாவில் 3. 8. 1927 ம் தேதியன்று 4780 ம் இலக்கத்தில் முடிந்த ஒப்பந்த உறுதிசாதனப் படிக்கு, அப்போது கோவிலின் பிரதான நிர்வாகப் பொறுப்பிலிருந்த கோப்பாய் வடக்கு முத்துக் குருக்கள் வயிரவநாத ஐயரின் மனேச்சராகிய வேதக்குட்டிக் குருக்கள் பரமசாமிக்குருக்களும், நயினுதீவு முத்துக்குமாரு பரமலிங்கம், நாராணபிள்ளை வைத்திலிங்கம் ஆகியவர்களும், உப நிர்வாகிகளாகவிருந்த இரகுநாதர் சரவணமுத்து, இராமலிங்கம் முருகேசு, நாகநாதர் வேலுப்பிள்ளை, கதிரித்தம்பி கந்தையாபிள்ளை ஆகியோரும், வண்ணார்பண்ணை கிழக்கில் வசித்த எம். கே. பெரியகஸ்தூரிநாயுடு, வேலுப்பிள்ளை வல்லிபுரம் என்போர்வசம், குறித்ததேதி தொடக்கம் ஐந்தாண்டுகளுக்குக் கோவிலை நிர்வகிக்கும் உரிமையைக் கொடுத்தனர். ஒப்பந்த விதிகளை இருசாராரும் சரிவரப் பின்பற்றுவதைக் கவனிக்கும் அதிகாரம் தீவுப்பகுதி மணியகாரன் முத்தையாபிள்ளை சோமசுந்தரம்பிள்ளைக்குச் இச் சாதனப்படி கொடுபட்டிருந்தது. இதன்படி கோவில் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றவர்களே கோவில் திருப்பணிகள் பலவற்றையும் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கோவிலின் வளர்ச்சிக்கு உறுதுணையாயமைந்தனர்.

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் 14151-ம் இலக்க வழக்கெழு காரணம் - வழக்கு விபரம்

இக் கோவிலின் நிர்வாக நடவடிக்கைகளில் சாதாரண வழிபாட்டாளர்களுக்கு எவ்வித உரிமையுமில்லாத நிலையை ஒழித்து, வழிபாட்டாளர்களது பிரதிநிதிகளும் கோவில் நிர்வாகத்தில் பங்குபெறத்தக்க மிக முக்கியமானதொரு திருப்பத்தை ஏற்படுத்தக் காரணமாயிருந்தது யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் 14151ம் இலக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குத் தீர்ப்பாகும். பரம்பரை அறங்காவலர்களில் ஒருவராகக் கருதப்பட்டபோதும் தமதுரிமையையும் துறந்து, "கோவில் ஓரிருவருக்குச் சொந்தமல்ல, ஊர்ப்பொதுவே" என்ற உயர்ந்த சிந்தனை சார்ந்த சுலோகத்தை சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே முன்வைத்து நீதிமன்றத்திலும், பொதுமக்கள் மத்தியிலும், இக்கொள்கைக்கு வெற்றிகிட்ட அயராது போராடிய பெருமகன் அமரர் கதிரித்தம்பி கந்தையாபிள்ளை (கேயர்) அவர்களாவர். அவரது முயற்சிக்கு ஊக்கமும், உற்சாகமும் பொருளுதவியும் வழங்கியவர் நால்வர். அமரர் கணபதிப்பிள்ளை வேலாயுதம்பிள்ளை, அமரர் ஆறுமுகம் நாகலிங்கம், திருவாளர் ச. நாகநாதர் கந்தையா, அமரர் சின்னத்தம்பி துரைசாமி ஆகியோரே இந்நால்வர்ஆவர், மகாபாரத காவியத்தில் 'ஐவர்' என்பது எவ்விதம் பஞ்சபாண்டவரைக் குறிக்குமோ அவ்வாறே "நாகபூசணி அம்மன் கோவில் வரலாற்றுக் காவியத்தின்" ஐவராக எண்ணப்படத்தக்கோர் இவர்களேயாவர். ஐம்பது ஆண்டுகளுக்கு முந்திய, போக்குவரத்துக் கஷ்டம் நிறைந்த, காலகட்டத்தில் நயினாதீவிலிருந்து போய் பத்தாண்டுகள் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் வழக்காடியது ஒரு மாபெருஞ் சாதனையாகும். அவர்களுக்கு 100% வெற்றி கிட்டவில்லையாயினும், ஒன்பது உறுப்பினர் கொண்ட அறங்காவலர் சபையில் ஐவர் பொதுமக்களால் தெரிவு செய்யப்படத்தக்க நிலையேற்பட்டது. மேலும், நீதிமன்றம் வழங்கிய ஒரு நிர்வாகத் திட்டத்திற்கு அமைவாகவே கோவிலை நிர்வகிக்கும் கட்டாயமிருப்பதால் ஓரளவு கட்டுப்பாடும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டன. அனைத்துக்கும் மேலாக, 1917ம் ஆண்டின் 9 ம் இலக்க நம்பிக்கைச் சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் 99 ம் பிரிவின் கீழ் ஓர் பொதுத் தர்ம நம்பிக்கைச் சொத்தாக இக் கோவில் பிரகடனம் செய்யப்பட்டது. கோவிலுக்கு அரும்பணியாற்றிய அமரர் ம. ஸ்ரீகாந்தா போன்ற, நயினாதீவுக்கு வெளியே தோன்றிய பெரியோர்களும் அறங்காவலர் சபை உறுப்பினர்களாக வரக்கூடிய முறையில் கதவைத் திறந்துவிட்ட இவ்வைந்து பேரது சேவைகளை மறைக்க முயல்பவர் கொடும்பாவிகள் ஆவர்.

## மணிமேகலையும் நயினாதீவும்

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகிய மணிமேகலையில் குறிக்கப்படும் மணிபல்லவத் தீவே நயினாதீவு எனச் சிலர் கருதுகின்றனர். மணிபல்லவத்தீவில் காணப்பட்டதும், தேவர்கோனாகிய இந்திரனால் இடப்பட்டதுமாகிய மணி ஆசனத்தைத் தமதாக்கிக்கொள்ள எண்ணிய நாக நாட்டரசர் இருவர் தமக்குள் கடும் போரிட்டனர். அந்நாள், புத்தர் பிரான், அவர்தம் போரை நிறுத்தி, சமாதானம் செய்து, அம்மணிஆசனத்தமர்ந்து அறவுரை செய்ததாக மணிமேகலை எனும் காப்பியத்தில் வரும் கீழ்க்காணும் கவிதை வரிகள் தெரிவிக்கின்றன:

" விரிந்திலங் கவிரொளி சிறந்து கதிர் பரப்பி
உரைபெறு முழ்முழ நிலமிசை யோங்கித்
திசைதொறு மொன்பான் முழநில மகன்று
விதிமா ணடியின் வட்டங் குயின்று
பதும சதுர பீமிசை விளங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவோற் கமைந்த வாசன மென்றே
நறுமல ரல்லது பிறமரஞ் சொரியாது
பறவையு முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனம்
கீழ் நிலை மருங்கி னாகநா டாளும்
இருவர் மன்னவ ரொருவழித் தோன்றி
எமதீ தென்றே யெடுக்க லாற்றார்.
தமபெரும் பற்று நீங்கலு நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிநாள்
இருஞ்செரு வொழிமி னெமதீ தென்றே
பெருந்தவ முனிவ னிருந்தற முரைக்கும்
பொருவறு சிறப்பிற் புரையோ ரேத்தும்
தருமபீடிகை தோன்றிய தாங்கென்''.

(மணிமேகலை: 8வது காதை - 44-63 வரிகள்)

இதே போன்றதொரு கதை புத்தபிக்கு மகாநாகரின் பாளி நூலாகிய மகாவம்சத்திலும் கூறப்பட்டுள்ளது. மகாவம்சம் சம்பவம் நடந்த இடத்தை நாகதீபம் எனக் கூறுகின்றது. அன்று மணிபல்லவம் எனப்பட்டதோ, அல்லது நாகதீபம் எனப்பட்டதோ, இன்றைய நயினாதீவுதானா என்பது தெளிவுற நிறுவப்படாதது ஒருபுறம் இருக்க,

'' தேவர்கோன் (இந்திரன்) இட்ட மாமணிப் பீடிகை ''

(எட்டாவது காதை - 52வது வரி)

'' பழுது இல் காட்சியிந் நன்மணிப் பீடிகை
தேவர்கோன் ஏவலில் காவல் பூண்டேன் ''

(பதினொராவது காதை - 27-28 வரிகள்)

'' பெரியவன் (புத்தன்) தோன்றா முன்னர் இப் பீடிகை
கரியவன் ( இந்திரன் ) இட்ட காரணந்தானும் ''

( இருபத்தைந்தாவது காதை - 54 - 55 வரிகள் )

என்று பௌத்த நூலாகிய மணிமேகலையிலேயே குறிக்கப்படுவதனால், குறித்த மணியாசனத்திற்கும் அது அமைந்திருந்ததாகக் கருதப்படும் மணிபல்லவத் தீவிற்கும் அல்லது நாகதீபத்திற்கும் ( அது நயினாதீவாக இருப்பின் நயினாதீவிற்கும் ) '' இடையில் வந்து அமர்ந்த '' புத்தர்களிற்கு எந்த விதமான உரிமையும் கிடையாது என்பதும், தேவர்கோனாகிய இந்திரனிற்கும், இந்துக்களுக்குமே அவற்றில் என்றும் மாறா உரித்துண்டு என்பதும் சந்தேகமறப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் "நாகதீபம் எது?" என்ற விடயத்தையிட்டு சிங்கள ஆராய்ச்சியாளர்களான முதலியார் ஏ. எம். குணசேகரா, கலாநிதி போல் பீரிஸ், கலாநிதி பரணவித்தான ஆகியோர் தெரிவித்துள்ள கருத்துக்களும், ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக உள்ளன. "நாகதீபம் எங்கே உள்ளது?" என்பதையிட்டு ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் ஏகோபித்த கருத்து நிலவவில்லை*. ஆயினும் புத்தர் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படும் கதைகள் வெறும் ஆதாரமற்ற கட்டுக் கதைகள் என்றவிடயத்தில் அறிஞர் பலர் கருத்தொற்றுமை கொண்டிருப்பதை அறிய முடிகிறது°. இவ்வளவிற்கும் மேலாக, பௌத்தர்களிற்கு இத்தீவில் எள்ளளவு உரிமையேனும் இருப்பதாக யாராவது கூற முயல்வாராகிலும், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பௌத்த சமயத்தவர்களாக வாழ்ந்த தமிழர்க்கன்றி சிங்கள பௌத்தர்களுக்கே அவ்வுரிமை உண்டாமெனக் கூறத் துணியமாட்டார். ஆதலின், இந்த மண் நமது சொந்த மண்; நமது முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடித்த மண்; எங்கள் அன்னையர் தோன்றி மழலைகள் கூறி அறிந்த மண். அவர்கன்னியராகி நிலவினிலாடிக் களித்த மண்; "இதை எமது கையினின்றும் நழுவிச் செல்ல விடமாட்டோம்". என நயினை மக்கள் அனைவருமே உறுதி ஏற்க வேண்டும். இங்கு வந்த புத்தர்பெருமான், நாக நாட்டரசர்களின் சண்டையை நிறுத்திச் சமாதானம் செய்து வைத்ததாகக் கூறப்பட்டபோதும், அவரது கொள்கை வழி நடப்பவர்கள் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் சிலர் சமாதானத்தைக் குலைத்து சிங்கள – தமிழ்க் கலவரங்களை மீண்டும் மீண்டும் தூண்டும் நோக்குடன் 1958 கலவர கால நிகழ்ச்சிகளைப் பெரிதுபடுத்தித் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். 1958-ல் சிங்களப் பகுதிகளிலுள்ள இந்துக்கோவில்கள் மற்றும் தமிழர் சொத்துக்களுக்கும், அவர்தம் உயிர்களுக்கும் விளைந்த சேதத்தோடு ஒப்பு நோக்குகையில், அற்பம் எனத்தகு அளவில், இங்குள்ள புத்த கோயிலுக்கு சேதம் ஏற்பட்டது. அதற்குப் பழிவாங்கும் முறையில் அரசின் ஆயுதப் படைகள் இத்தீவில் பல வீடுகள், கடைகள், நாகபூஷணி அம்மன் கோவிலைச் சூழவிருந்த மடங்கள், கோவிலின் தேர், சப்பரம், வாகனங்களைத் தீயிட்டு எரித்ததோடு பல ஊரவர்களை அடித்து நொருக்கிச் சித்திரவதை செய்திருந்தும், 1958-ல் புத்தகோவிலுக்கு நிகழ்ந்த சேதத்தை மட்டும் பெரிதுபடுத்தித் தொடர்ந்தும் பிரசாரம் செய்து வருவது புத்தபிரானுடைய புனிதக் கொள்கைகளை அவமதிக்கும் செயலென்றே கூறவேண்டும். சம்பந்தப்பட்ட நபர்கள், தமது செயல் காரணமாக அப்பாவி மக்களுக்கு நேரக்கூடிய தீங்கினை உணர்ந்து, எதிர்காலத்திலாவது இத்தகைய நடவடிக்கைகளைக் கைவிடுவார்களென்று நம்புகிறேன்.

---

* முதலியார் குல. சபாநாதன் அவர்கள் எழுதிய "நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த்திருப்பணிச் சபை மலர்" பக்கங்கள் 18, 19 பார்க்க.

° "Problems of Ceylon History" by Dr. G. C. Mendis - pages 72 - 75.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணையும் தொழும் தெய்வமும்

– ஆ. தியாகராசா,
(தர்மகர்த்தா சபை உறுப்பினர்)

அன்னையின் மந்திரத்திற்கு ஸ்ரீவித்யை என்று பெயர். அதைக் கண்டுபிடித்து உலகிற்கு உணர்த்தியவர்கள் பன்னிருவர். அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாக அந்த மந்திரத்தை வெளியிட்டார்கள், அப்படிப் பன்னிரு மந்திரங்கள் அமைந்தன. அந்தப் பன்னிருவரும் சிவபெருமான், முருகன், இந்திரன், சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், மன்மதன், மது, அகஸ்தியர், துர்வாசர், லோபாமுத்திரை என்று புராணங்கள் கூறுகின்றன. இவர்கள் அம்பிகையை வழிபட்டுப் பேறுபெற்றவர்களில் சிறந்தவர்கள். அபிராமிப் பட்டர் இப்பன்னிருவரில் மனு, துர்வாசர், லோபாமுத்திரை என்னும் மூவருக்கும் பதிலாக பிரமன், திருமால், கணபதி என்னும் மூவரைச் சொல்லுகின்றார். அத்தோடு இவர்கள் முதலாக எண் இல்லாதவர்கள் அம்பிகையை வழிபட்டுப் பேறு பெற்றார் என்றும் கூறுகின்றார்.

புராரியாகிய சிவபெருமான் அம்பிகையைப் போற்றி அருள் பெற்ற இடங்கள் பல என்று அபிராமிப்பட்டர் கூறியிருக்கின்றார். சிவராத்யா, மகா பைரவ பூஜிதா என்பன சிவபெருமானால் ஆராதிக்கப்படுபவள் என்பதைப் புலப்படுத்தும் திருநாமங்கள். முரனை அழித்தவனாகிய திருமால் அம்பிகையை வழிபடுவதை கமலாட்ஷநிஷேஜிதா என்னும் திருநாமம் காட்டும். குமார கணநாதாம்பா என்னும் திருநாமம் குமாரனுக்கும் கணநாதனுக்கும் தாயாக இருக்கும் செய்தியைச் சொல்லுகின்றது. இவ்விருவரும் அன்னையைப் போற்றி அருள் பெறுவதும் இயல்பே, அன்னையைப் பூசிப்பதில் முக்கிய இடத்தை வகிப்பவர் காமன். காமராசனாகிய மன்மதனால் அன்னை பூசிக்கப்பட்டதால் காமபூஜிதா, காமஷேவிதா என்ற திருநாமங்களையும் பெறுகின்றாள். இவ்வாறான அருட்திறம் நல்கும் அன்னையின் அடிபரவி நலம் பெற்ற புண்ணிய மூர்த்திகள் எண்ணில் அடங்கார். தேவர்கள், முனிவர்கள், அரசர்கள், கற்புடை மகளிர் எனப் பலவகையினரும் வழிபட்டதோடு கந்தர்வர்களாலும் அன்னை சேவிக்கப்பட்டாள். இதனால் அன்னைக்கு கந்தர்வஷேவிதா என்றும், மனு பூசித்தமையால் மனுவிதிபா என்று நாமங்கள் இருக்கின்றன. அரம்பை முதலியோர் அன்னையைப் பூசித்ததால் அறம்பாதி வந்திதா என்றும் லோபா முத்திரை அர்ச்சித்ததால் லோபாமுத்திராட்ஷதா என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை புகழப்படுகின்றாள். இவ்வாறெல்லாம் எண்ணிலர் போற்றுகின்ற அருட்கடலாகிய தையலை பாலாம்பிகை என்றும், நாகபூஷணி என்றும், நாகபூஷணுத்தி என்றும் நாகேஸ்வரி என்றும் நல்லடியார் போற்றி நிற்கின்றனர்.

பலராலும் போற்றிப்பரவப்படும் அன்னைக்கு எல்லாவற்றையும் சமர்ப்பணம் செய்துவிட்டு இன்ப துன்பங்கள் எதுவந்தாலும் உனக்கே அடைக்கலம் என்று அவளிடம் நாம் இன்று முதல் விட்டுவிட்டால் எல்லோருக்கும் தாயாக இருக்கும் எம்பெருமாட்டி எவரையும் புறக்கணிக்காமல் அனைவரையும் இரட்சித்துக் காப்பாற்றுவாள். அதனுல் அன்றோ அவளுக்குச் "சர்வலோக ஜனனி" என்ற திருநாமம் கிடைக்கப்பெற்றது; எங்களால் இயன்ற அளவுக்கு வழிபட்டால் பயனுண்டு. நாங்கள் சிற்றறிவும், சிறுசெயலும் உடையவர்கள். நாங்கள் செய்யும் வழிபாடும் சிறியதாகத்தானே இருக்கும். அப்படியானுல் எங்களுக்கு மிகவும் சிறிய லாபம் தானே கிடைக்கும் என்று எமது உள்ளம் கலங்கும்.

ஒரு தாய்க்கு வெவ்வேறு பருவத்தில் உள்ள குழந்தைகள் பலர் இருக்கின்றுர்கள். பிராயத்தாலும், அறிவிஞலும் வேறுபட்டவர்கள் அவர்கள். அவர்கள், தம் தாயினிடம் அன்பு செய்கின்றுர்கள். வயது வந்த பிள்ளைக்குப் புடவை வாங்கிக் கொடுக்கின்றுள். சின்னப் பிள்ளைக்கு சட்டை வாங்கிக் கொடுக்கின்றுள். சிறு குழந்தைக்கு யாரோ கொடுத்த பழத்தைக் கொடுக்கின்றுள். இவ்வாறு அவரவர் சக்திக்கு ஏற்றபடி பிள்ளைகளுக்குப் பண்டங்களைத் தருகின்றுள் அந்தத் தாய். பண்டங்களின் உயர்வு தாழ்வை அந்தத் தாய் பார்க்கவில்லை. குழந்தைகள் அந்தத் தாயினிடத்து அன்பையே பார்க்கின்றுர்கள். அவள் அவர்களை ஆசீர்வதிக்கின்றுள். அவ்வண்ணமே ஸ்ரீமாதாவாகிய உலக அன்னை ஸ்ரீ நாகபூஷணி தன்னை எவ்வளவு தானும் தியானிப்பவர்களுக்கு என்றும் நன்மையே தருவாள்.

இவ்வாறு தன்னைச் சரணடைந்த பக்தர்களுக்கு இன்ப வாழ்வை அருளும் எம்பெருமாட்டி எங்கே இருக்கின்றுள். அவள் தனக்கென்று அமைத்துக் கொண்ட இடம் எங்கே இருக்கின்றது என்று கேட்போர் பலர். அவள் வேறெங்கும் இல்லை. அண்ட சராசரங்களையெல்லாம் ஈன்று அவற்றோடு ஒன்றி அவற்றையே பாதுகாத்துக் கொண்டிருக்கின்றுள். காஞ்சியில் "காமாட்சியாகவும்" மதுரையில் "மீனுட்சியாகவும்" காசியில் "விசாலாட்சியாகவும்" நயினையில் "நாகபூஷணியாகவும், புவனேஸ்வரியாகவும்" வீற்றிருந்து தன்னை நாடி வரும் அடியவர்களுக்கெல்லாம் அருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறுள். பிரபஞ்சத்தை உண்டாக்கி அங்கே உயிர்களைக் குடியேற்ற வேண்டுமென்னும் நோக்கோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமனிடம் படைத்தல் தொழிலே யும், அவனுக்குத் துணையாகக் கலைமகளையும் அளித்திருக்கின்றாள். அறிவின் திருவுரு. அறிவில்லா விடின் எதையும் படைக்க இய லாது. அதனாலன்றோ அறிவாற்றல் மிக்கவளாகிய கலைமகளை பிரமனின் துணையாக்கினாள் எம்பெருமாட்டி. படைப்புத் தொழில் நடப்பதற்கு உதவிய அன்னை காத்தல் தொழி லுக்கும் ஆவன செய்கின்றாள். அத னைப் புரிபவர் திருமால். அவருக்கு உறுதுணையாக இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய பொருட் செல்வத்தை அருளும் பொருட்டு திருமகளைத் துணையாக வைத்தார்.

வீட்டைக் கட்டி நன்றாக விளங் கும்படி பாதுகாத்து உரிய காலத் தில் அதை அடித்துத் திருத்தி அதில் நல்ல விளக்குகளை ஏற்றி வைத்து நன்மை புரிகிற ஒருத்தி யைப் போல அம்பிகை இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து, காத்து அழித்துத் தொழிற்படும் காரண மாக இருந்து வெவ்வேறு கோலங் களில் வெவ்வேறு இடத்தில் அமர்ந் திருந்து இக்காரியங்களைச் செய்து வருகின்றாள். பக்தர்கள் அகந் தையை விட்டு எப்போதும் பணி வுடன் இருப்பார்கள். ஏனென்றால் தலையில் அம்பிகையின் திருவடி இருப்பதால் நிமிர மாட்டார்கள். தேவர்களுக்கும் பணிவுக்கும் நெடுந் தூரம். இதனால் அவர்கள் தலை குனிவதில்லை. பணிவதில்லை. பணிந் தால் தானே பயன் கிடைக்கும். யார் தலை அடக்கத்தோடு தலை குனிகின்றதோ அந்தத் தலையில் அம்பிகை தன் திருவடியை வைக் கின்றாள். அவர்களும் அந்த நோக் கத்தோடு தானே தம் தலையைப் பணிகின்றார்கள். இவ்வாறு தலை பணிந்தவர்களின் சிரம்மேல் தான் தன் திருவடிகளை அன்னை வைப் பாள். "அல்லாதாரின் சிரங்கள் மேல் அன்னையின் திருவடி திட்சை இடம்பெறமாட்டாது. எல்லோரும் அறிய அடியார் தலை மேல் தன் சீரடியை வைத்த அன்னை மகாதேவனாகிய சிவபெருமானு டைய தலையில் மிக மிக இரகசிய மாகவே திருவடியை வைக்கின்று ளாம். இது மிகவும் அந்தரங்க மான செய்தியாக இருந்தாலும் அன்னையின் அடியார்க்கு இவை யெல்லாம் அந்தரங்கம் அல்லவே, காமேஸ்வரியாகிய தேவியைச் சிவ பெருமான் வணங்கி நின்று தன் ஊடல் தணித்துக் கொண்டானும் என்று பிரபுலிங்க லீலை சொல்லு கின்றது. "ஆதி பகவன் தன தூடல் தணிப்பான் பணிய" "சரணர விந்தம் எம்பிரான் முடிக் கண்ணியதே பணிமாமலர்ப் பாதம் வைக்க கொன்றைவார் சடையின் மேலினும் கைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்கு" என்றும் அபிராமிப்பட்டர் கூறுகின்றார். இவ் வாறெல்லாம் அவள் அடியைத் தம் சிரமேல் சூடுவதற்கு சிவபெரு மான் வேண்டி நின்றார்.

நமக்கு உடல், பொருள், ஆவி என்ற மூன்றும் உடைமைப்பொருள். இந்த மூன்றையும் விடாமல் பிடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொண்டிருக்கின்றோம். இவற்றால் வரும் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றோம். இன்பம் மட்டும் இருந்தால் குற்றமில்லை. துன்பமும் அல்லவா கூட இருக்கின்றது. அதிலும் துன்பம் தானே அதிகமாக இருக்கின்றது. இந்தத் துன்பத்தை நீக்க என்ன வழி? உடலை விட்டு விடுவதா; உயிரைத் தியாகம் செய்வதா? இதனை இன்று சிந்திப்போம். குழந்தை என்றால் தாய் இருக்கவேண்டும். சேயும் தாயும் ஒருவகை இணைப்பு. நாம் ஆண்டு முதிர்ந்த இந்த உடம்பைத் தந்த தாயை இழந்திருப்போம். நமக்கே குழந்தைகள் இருப்பார்கள். இந்த நிலையில் நாம் தாய்க்கு எங்கே போவது? நாம் எப்படிக் குழந்தையாவது. இந்த உடம்புக்குத் தாயாக இருந்தவள் இறந்து போய் இருக்கலாம். ஆனால் நம் உயிருக்குத் தாயாக இருக்கிறாள் ஒருத்தி. அவள் என்றும் அழியாதவள். அவளுடைய தாய்த் தன்மையாகிய கருணை என்றும் அழியாது. அவளைப் பற்றிக்கொண்டு நம்முடைய பொறுப்புக்களையெல்லாம் அவளிடம் சமர்ப்பித்துவிட்டு நாம் அவளுக்குக் குழந்தையாகிவிட்டால் இப்போதிருந்தே நமக்குக் கவலையே இல்லை. ஆற்றைக் கடக்கிறவன் அதில் நடந்து செல்ல நினைத்தால் எத்தனை ஆழம் இருக்கிறதென்று ஆராயவேண்டும். தன் உயரத்திற்கு மேலே ஆழம் இருந்தால் அதனை நீந்தியும், குறைவாக இருந்தால் நடந்தும் போகவேண்டும், ஆனால் ஒரு தோணி கிடைத்து விட்டால் ஆறு எவ்வளவு ஆழமாக இருந்தாலும் அவன் நடக்கவேண்டியது மில்லை. நீந்தவேண்டியதுமில்லை. சுகமாக தோணியில் உட்கார்ந்தே கடந்துவிடலாம். இவ்வாறே ஸ்ரீமாதாவாகிய அம்பிகையிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டால் அவளுடைய கருணைத்தோணியில் ஏறி அமர்ந்து விட்டால் நாம் இப்பிறவியிலும், மறுபிறவியிலும் வேண்டியதைப் பெற்று நல்லபடி வாழலாம். அன்னை அனந்தகல்யாண குணங்களை உடையவள். குணங்கள் எல்லாம் சேர்ந்த மலை போல இருக்கின்றாள் அவள். அத்தகைய குணக்குன்றில் நாம் ஏறி நின்றால் கீழ் என்ன நடந்தால் எமக்கென்ன? குன்றின் மேல் நின்றவன் யானைக் கூட்டத்தைக் கண்டு எவ்வாறு அஞ்சாமல் நிற்பானோ அவ்வாறே அழியாத குணக்குன்றாகிய அன்னையின் பாதங்களைப் பற்றிக் கொண்டவர்க்கு இப்பிரபஞ்சத்தில் எந்தவிதமான துன்பமும் பற்றமாட்டாது. அத்தகைய கருணைக்கடலாகிய உலக மாதாவை நயினைத் தாயை சிந்தையில் இருத்தி உய்வோமாக.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு

நாகபூஷணியம்பாள் கோவிற்

# தீர்ப்பு.

இவ்வாலயம் ஊர்ப்பொது

ஒருவரிருவருக்குச் சொந்தமல்ல

இந்துக்கள் யாபேருக்கும் உரிமையுண்டு

புதிய பஞ்சாயத்தார்

நியமனம் வேண்டும்

மகாசபை கூட்டுங்கள்.

சிலேவ் ஐலெண்ட் பிரஸ், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24476.

# அம்பாள்கோவிற் தீர்வை
# யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்

**பரமசாமிக்குருக்கள் வைரவநாதக்குருக்கள் (வழக்காளி)**

1. **நாகநாதர் வேலுப்பிள்ளை**
2. **இரகுநாதர் சரவணமுத்து**
3. **கார்த்திகேசு இராமலிங்கம்**
4. **இராமலிங்கர் கார்த்திகேசு**
5. **இராமச்சந்திரர் முத்துக்குமாரு, நயினாதீவு- (எதிரிகள்)**

குறிக்கப்பட்ட வழக்கு 1897-ம் ஆண்டு மே மீ 4-ம் திகதி யாழ்ப்பாணம் டிஸ்றிக் நீதிபதி திரு. சாமுவேல் ஹோட்டன் முன்பாக வழக்காளி சார்பில் நியாயவாதி கனகசபையும் பிறக்ரர் ஸ்ரான்டன் பேக்கும் எதிரிகள் சார்பில் நியாயவாதி அளகக்கோனும், பிறக்டர்கள் காசிப்பிள்ளையும், கதிரவேலுவும், வழக்காளி எதிரிகள் முகதாவில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும், வழக்காளி, எதிரிகள் இரு தரப்பினரின் நியாய துரந்தரர்கள் முதலியோரின் சம்மதத்துடன், A. I. இரகுநாத முதலியார் மணியகாரன் வலிகாமம் மேற்கு, யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டுத் துவிபாஷகர் P. முதலியார் இலங்கைநாயகம், யாழ்ப்பாணம் கச்சேரி சிருப்பர், V. அம்பலவாண முதலியார் முதலியோரை மத்தியஸ்தராய்க்கொண்ட சபைக்கு விடப்பட்டு, மறுபடியும் இவ்வழக்கு யாழ்ப்பாணம் டிஸ்றிக் நீதிபதி முன்னிலையில் 1897-ம் ஆண்டு ஜூன் மீ 28-ம் திகதி மத்தியஸ்தரின் தீர்ப்புச் சமர்ப்பிக்கப்பட்டு இரு தரப்பினரின் சம்மதத்துடன் கையொப்பமிட்டு 1897-ம் ஆண்டு ஜூன் மீ 28-ம் திகதி குறிக்கப்பட்ட மத்தியஸ்தரின் தீர்ப்பே முடிவானதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்ப்பின் விபரம் பின் வருமாறு :**

வழக்காளி பரமசாமி குருக்கள், வயிரவனுதக் குருக்கள், 4-ம் எதிரி இராமலிங்கர் கார்த்திகேசர், 5-ம் எதிரி இராமச்சந்திரர் முத்துக்குமாரு ஆகிய மூவரும் நயினுதீவு பப்பரவன்சல்லியென்னும் காணியிலிருக்கும் இந்து சமயக் கோவில், நாகபூஷணி அம்மன் கோவிலுக்குப் பிரதம மனேஜர்களாக இத்தால் நியமிக்கப்படுகிருர்கள். வழக்காளி குறிக்கப்பட்ட கோவிற் பிரதம குருக்களாகவும் 4-ம் எதிரி இராமலிங்கர் கார்த்திகேசர் தனுதிகாரியாகவும் 1-ம எதிரி நாகனுதர் வேலுப்பிள்ளையும், 2-ம் எதிரி இரகுநாதர் சரவணமுத்துவும், 3-ம் எதிரி கார்த்திகேசர் இராமலிங்கமும், வேலாயுதர் கதிரித்தம்பியும் உப மனேஜர்களாகவும், குறிக்கப்பட்ட கோவிலுக்கு இத்தால் நியமிக்கப்படுகிருர்கள்.

**இத்துடன் பின்வருவனவும் தீர்ப்பிற் கூறப்பட்டுள்ளன:—**

(A) பிரதம உப மனேஜர்கள் மாதமொன்றுக்கு பதினைந்து ரூபாவுக்கு மேற்படாத சம்பளத்தில் ஒருவரைக் கணக்குப்பிள்ளையாக நியமித்து, அவரால் குறிக்கப்பட்ட கோவில் வரும்படிகள், செலவுகள் முதலிய கணக்குகள் முறைமையாய் இலக்கமிடப்பட்ட புத்தகத்தில் பதியப்படல் வேண்டும்.

(B) உப மனேஜர்கள் குறிக்கப்பட்ட கோவிலில் தங்கள் கடமையை மேலே காணப்பட்ட அவர்களின் வரிசைக் கிரமப்படி மூன்று மாதத்திற்குத் தொடர்ச்சியாகப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு உப மனேஜரும் அவர்கட்கு குறிக்கப்பட்ட காலத்தில் கோவிலுக்குரிய வரும்படியை வசூல் செய்வதும், நித்திய பூசைக்குரிய செலவுகளைக் கொடுப்பதும், இவைகட்குப் பிரத்தியேகமாக கணக்கு வைத்து, அவர்கட்குக் குறிக்கப்பட்ட காலமுடிவில், கைவசமிருக்கும் மிகுதிப் பணத்தைத் தனுதிகாரி வசம் ஒப்படைத்துத் தனுதிகாரி கணக்குப்பிள்ளையின் கணக்குப் புத்தகங்களுடன் பரிசோதனை செய்து அவரின் (தனுதிகாரி) கையொப்பத்துடனும் கணக்குப்பிள்ளையின் சாட்சி ஒப்பத்துடனும் றசீது பெறவேண்டும்.

(C) ஆனி மாதம் வரும் (திரு) ஷெ கோவில் உற்சவ காலத்தில் கடமையாற்றும் உப மனேஜர் அல்லது உப மனேஜர்கள் உற்சவகாலத்திலுள்ள வரும்படிகள், செலவுகள் முதலியவற்றிற்குப் பிரத்தியேகமான கணக்குப் பதிந்து உற்சவ காலம் முடிந்தவுடன் ஷெ கணக்கும், அவரின் அல்லது அவர்களின் கைவசமிருக்கும் பணமும், நேர்த்திக்கடன் காரர்களால் கோவிலுக்குக் கொடுக்கப்பட்ட பெறுமதியான காணிக்கைப் பொருள்களும், பிரதம மனேஜர்களிடம் ஒப்படைத்து, அவர்களிடமிருந்து கணக்குப்பிள்ளையின் சாட்சி ஒப்பத்துடன் கூடிய றசீது பெற வேண்டும். கோவில் கணக்குப்பிள்ளையால் அவரின் கணக்குப் புத்தகங்களில் கோவில் உற்சவ காலத்திலுள்ள ஷெ கணக்கு விபரங்களும் பிரதம மனேஜர்களிடம் ஒப்படைத்த பண விபரமும் பதியப்பட வேண்டும்.

(D) கோவில் நிர்வாகம் பிரதம மனேஜர்களின் அதிகாரத்தின் கீழும், மேற்பார்வையின் கீழுமிருக்கவேண்டும். இவர்களுக்கிடையில், பிணக்கேற்படும் காலத்தில் சுயேச்சையான கௌரவமுடைய மூவரைத் தெரிவு செய்து அவர்களின் அல்லது அவர்களில் பெரும்பான்மையோரின் தீர்ப்புப்படி நடக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(E) பிரதம உப மனேஜர்கள் சேர்ந்து, இதிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் எல்லா ஆபரணங்கள், செப்புப் பாத்திரங்கள், மற்றும் சாமான்கள், தளபாடச் சாமான்கள், கோவிலுக்குச் சொந்தமான அசைவுள்ள சாமான்கள், அவைகளின் பெறுமதி நிறையின்படி பெறுமதியுடைய சாமான்களின் நிறை, முதலிய விபரங்களடங்கிய அட்டவணை தயார் செய்து, ஏழு மனேஜர்களும், ஒவ்வொருவரும் மேற்சொல்லப்பட்ட பிரகாரம் தயார் செய்த எல்லா மனேஜர்களின் கையொப்பத்தோடு கூடிய, அட்டவணைப் பிரதிகள் வைத்திருக்க வேண்டும். கோவில் விலாசம் ந. நா. அ. சாமான்களுக்கிடப்பட வேண்டும்.

(F) கோவிலுக்குச் சொந்தமான தினே பாவிப்பிற்குரிய சாமான்கள் ஆபரணங்கள் முதலியன பூசகரிடத்தில் கொடுத்து, றசீது பெற்றுக் கொள்ள வேண்டும். மற்றைய ஆபரணங்கள் எல்லாம் சேமிப்பறையில், அல்லது களஞ்சியத்தில் வைக்கப்படல் வேண்டும், ஆபரணப்பெட்டிச் சாவி 4-ம் எதிரி கார்த்திகேசர் வசமிருக்க வேண்டும். ஆபரணப் பெட்டி வைக்கும் பெட்டகம் அல்லது டிறங் (Trunk) கின் சாவி 2-ம் எதிரி சரவணமுத்து வசம் இருக்க வேண்டும். பெட்டகம் அல்லது டிறங் (Trunk) வைத்திருக்கும் உள்ளறையின் சாவி 3-ம் எதிரி இராமலிங்கம் வசமிருக்க வேண்டும். இதற்கு அருகாமையிலுள்ள அறையின் சாவி 5-ம் எதிரி முத்துக்குமாரு வசமிருக்க வேண்டும். சொல்லப்பட்ட களஞ்சியத்து வெளியறையின் சாவி 1-ம் எதிரி வேலுப்பிள்ளை வசமிருக்கவேண்டும்.

(G) பிரதம குரு, பிரதம மனேஜர்களில் ஒருவராயிருந்தாலும் குருத்துவ கடமை பார்க்கும் காலத்தில், ஏனைய பிரதம மனேஜர்கள் இருவரின் கட்டளைப் படியும், அவர்களின் மேற்பார்வையின் கீழும், கடமை செய்ய வேண்டும். ஏனைய இரு மனேஜர்களும் தங்களுடைய அதிகாரத்தைப் பிரயோகிக்கும் நோக்கமாகவோ அல்லது குருவின் கௌரவத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கமாகவோ, அல்லாமல் விவகாரத்தின் சந்தர்ப்பத்திற்குத் தகுந்ததாய் சிறிய தொகை அபராதமாய் விதிக்க அதிகாரமுண்டு இவை ஒழுங்கீனம்; விரும்பத்தகாத நடத்தை, அல்லது ஒழுங்குக்குக் கீழ்ப்படியாமை முதலிய காரணங்கள் பற்றிச் செய்யலாம். டிை தீர்ப்புப் பிரதம குருவிற்குத் திருப்தியில்லையாயின் அவரால் (குரு) நியமிக்சப்பட்ட கௌரவமான மூன்று பேருடன் ஏனைய இரு மனேஜர்களினிடத்திலும் டிை தீர்ப்பை மனுப்பண்ணி அவர்களின் தீர்ப்பே முடிவானதாகக் கொள்ளவேண்டும்.

(H) பிரதம மனேஜர்கள், உப மனேஜர்கள், வருடாந்த உற்சவ காலத்திலுள்ள வருப்படி செலவு கணக்குகளைப் பார்வையிட்டு மிகுதி இருப்புப்பணம் அல்லது அதின் ஓர் பகுதியைக் கோவில் திருப்பணிக்கு, அல்லது புதிய கட்டிடத்திற்கு, அல்லது காணி வாங்க அல்லது வேறு எவ்விதமாகவோ கோவிலின் நன்மைக்காக மனேஜர்களின் ஆலோசனைப்படி செய்யலாம்.

(I) ஒருவர் அல்லது ஒருவர்க்கு மேற்பட்ட மனேஜர்கள், எந்த மனேஜரையாகுதல் முறையீனமான செய்கை அல்லது அபகரிக்கும் நோக்கமான நடத்தையாகிய குற்றம் சாட்டினால் மனேஜர்கள், அல்லது குற்றம் சாட்டப்படாத மனேஜர்கள் கூடி குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகளைத் தகுந்தமுறையாய் விசாரணை செய்து தீர்ப்புச் செய்யவேண்டியது கடமை. அவர்கள் அப்படிச் செய்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாதெனக் கண்டால் கோவில் நன்மைக்கான முறையில் அவர்கள் இதிற் சம்பந் தப்படாத ஐந்து அல்லது ஏழு கௌரவமுடையோர்களை நியமித்துப் பிரஸ்தாபக் குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகளை மத்தியஸ்தராய் விசாரணை செய்து தீர்ப் புச் செய்யவேண்டியது. இவர்களின் தீர்ப்பின்படி அல்லது இவர்களில் பெரும்பான்மை யோரின் தீர்ப்புப்படி குற்றம் சாட்டப்பட்ட மனேஜரை நீக்கவோ அல்லது தற்காலிக மாக நீக்கவோ அல்லது அபராதம் விதிக்கவோ, மத்தியஸ்தரின் தீர்ப்புப்படி காலி யான இடத்திற்கு வேறொருவரை நியமிக்கவோ செய்யலாம்.

( ) குறிக்கப்பட்ட பிரதம குரு பரமசாமிக்குருக்கள் வயிரவனாதக் குருக்கள், ஆனி மாதம் வரும் வருடாந்த உற்சவகாலத்தில் பிரதம குருவாய்க் கடமை பார்க் குங்கால் பின்வரும் வரும்படி, ஆதாயம், இனும் முதலியவற்றிற்கு உரிமையுடையார்.

1. உற்சவநாயகி அரிச்சனையில் ரூபா 20/– ம் மிகுதியில் ¾ தினசரிப் பூசகர் களுக்கும் ¼ கோவில் பொக்கிஷத்திற்கும் உரியது.

2. உற்சவம் நடாத்துபவர்களால் ஷியாருக்குக் கொடுக்கப்படும் மேல்வரும் படி ஆதாயம் முதலியவற்றிற்கும் உரிமையுள்ளார்.

இரு தரப்பாரின் செலவு தொகை முதலாக அவரவர் பொறுப்பெனவும் தீர்ப்பளிக்கப்பட்டது

**சாமுவேல் ஹோட்டன்**
டிஸ்டிறிக் நீதிபதி

*1897–ம் ஞு யூன் மீ 28–ம் திகதி.*

# வேண்டுகோள்

தற்போது நாகபூஷணியம்பாள் கோவில் மனேஜர்மாருள் ஆறுபேர் காலஞ் சென்றபடியாலும், தற்காலம் நடாத்தும் பராபரிப்புக்காரர் கோவிலை சரிவரக் கிரமமாய் நடத்தாமல் வருவாய்களை நல்ல முறையிற் செலவு செய்யாததினுலும் மத்தியட்சர் ஒருவர் இல்லாததினுலும், இக் கோவிலுக்கு அவசியம் பஞ்சகர்த்தாக் கள் நியமிக்க வேண்டும். பஞ்சகர்த்தாக்கள் இல்லாமல் எந்த நொத்தாரீசாவது சாதனம் செய்யக்கூடாது.

இக் கோவிலுக்கு தருமசாதனம் பதினுறுண்டு, இதில் மூன்று சாதனங்கள் பிறர் ஆட்சியில் இருப்பதால் நயினுதீவு இராமச்சந்திரர், இராமலிங்கம் ஒற்றி வைத் ததும், 1852-ம் ஞு வாங்கிய தருமசாதனம் இரண்டு மேற்கண்ட மூன்று சாதனங் களையும் அதன் ஆட்சியையும் காட்டும்படி கேட்கின்றேன். கதிரித்தம்பி சின்னத்தம்பி புங்குடுதீவு மேற்கில் தன்பேரில் வெந்தீசில் 70 பரப்பு வாங்கி கோவில் உறுதி அத்தாட்சியின்படி மூன்று சாதனங்கள் விடப்பட்டிருக்கிருர்.

இதற்கு சைவசமய பகாஜனங்களுக்கு இன்றியமையாத திருவருள் பரிபாலிக் கும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவிலை, சைவ சமயாபிமானம் பூண்ட பக்த ஜனங் கள் அனைவரும், இச்சிவ கைங்கரியத்தில் பங்குபற்றி முன்னேற்றத்துக்குக் கொண்டு வருவார்கள் என்ற முழு நம்பிக்கை கொண்டே இதனை வெளியிடலானேன்.

இப்படிக்கு
**க. கந்தையாபிள்ளை**
(மனேஜர்மாருளொருவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிலுக்கு வரப்பட்ட வருமானங்களின் வகைகள்

## மீசுவரி நெல்லு

அம்பாளின் நித்திய பூசைக்காகப் பட்டினப் பக்கங்களில் இருக்கும் சைவாபிமானிகள் தங்கள் தகுதிக்கு ஏற்றவாறு மீசுவரி கொடுத்து வருகிறார்கள். அதன் பெறுமதி விலை ரூபா ஆயிரம்.

## வாடகை

திருவிழாவின் போது கோவில் நிலத்தில் கொட்டகைபோடும் வியாபாரிமாரிடம் வசூலாக்கப்படும் வாடகைப் பணம் ரூபா நானூறு.

## வலைஞர் வரி

கடற்பிழைப்புத் தொழில் செய்வோர் தங்கள் வருவாயில் பத்திலொரு பங்கை அம்பாளுக்காகக் கொடுத்து வருகின்றனர்.

## உண்டியல் வருவாய்

திருவிழாவின் போது உண்டியலில் விழும் தொகை சுமார் ரூபா ஐயாயிரத்துக்கு மேலாக வந்து சேருகின்றது.

## நேர் கடன்கள்

பொன், வெள்ளி யாபரணுதிகளும் சோடசோபசாரப் பொருட்களும் பித்தளைச் சாமான்களும் பிறவும் நீங்கலாயுள்ளன.

## சேகரித்த பணம்

கோபுர வேலைக்கென்று உள்ளூரிலும் பிறவூர்களிலும் சேகரித்த பணமோ பெருந்தொகை அதைப்பற்றிய விபரம் இந்நாள் வரையிற் தெரியவராது.

## கோவில் நிலங்கள்

புங்குடுதீவு, நயினதீவு, வேலணை, அராலி, பட்டணம், பறங்கித்தெரு முதலான இடங்களில் நிலம்புலங்களும், கிட்டங்கிகளும் இருக்கின்றன. தேடுவார் இல்லாமையால் அதன் வருவாயை ஊரவர்களே அனுபவித்து வருகின்றனர், சிலர் இக்காணிகளுக்குப் பொய்ச்சாதனங்களையும் பிறப்பித்து ஆட்சிபுரிகின்றனர்.

## குத்தகை ஆதாயம்

கோவில் ஆதனங்களின் ஒரு பகுதியை இவ்வூர் உடையார் இ. சரவணமுத்து என்பார் குத்தகையாகக் கொடுத்து எண்ணூற்றுச் சொச்ச ரூபாவைக் கோவிலுக்கு ஆதாய வரும்படியாகக் காட்டியிருக்கிறார். இன்னும் முயற்சி செய்தால் மேலதிகமாய்க் கொடுக்க இடமுண்டு.

## ஓர் பெரும் நிதி

சென்ற வருடத் திருவிழாவை தீவுப்பற்று மணியகாரன் தம்முடைய பாதுகாப்பில் நடாத்தி கோவிலுக்கு மிச்சப்பணம் மேலதிகமாக ரூபா ஆயிரம் காண்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிழாக்கள்

இக்கோவிலில் நடைபெறவேண்டிய திருவிழாக்களைப் பற்பலவூர்களிலுமுள்ள சைவாபிமானிகள் பெரும் பொருட்செலவுடன் விமரிசையாகச் செய்துவருகின்றனர். இதிற் கோவிலுக்கு அதிக பொறுப்பு ஒன்றுமில்லை.

## நகரத்தார் நிர்வாகம்

மு. க. பெ. ரி. முத்தையா செட்டியார் இக்கோவில் நிர்வாகத்தை வகித்து 5 வருட காலத்துள் அரும்பெரும் செயல்களைச் செய்து கோவிற்றிருப்பணிகள் எல்லாவற்றையும் வைரக்கல்லால் இயற்றுவித்து 3 காலப் பூசையை 4 காலப் பூசையாக ஏற்படுத்தி கோவிலைக் கூடிய வரையில் நன்னிலைக்குக் கொணர்ந்து வருடாவருடம் கோவிலுக்கு ஆதாய மொத்தம் ரூபா பதினாயிரம் காண்பித்து கணக்குக்களையும் ஒழுங்காக வைத்துச் சென்றனர். இதன் பிறகு கோவில் நிர்வாகம் அலங்கோலமாயிற்று.

## அசைவற்ற பொருட்கள்

கோவிலுக்குரிய ஆதனங்களின் பெறுமதி ஏறக்குறைய ரூபா ஐம்பதினாயிரத்துக்கு மேற்படுமென்றே சொல்லலாம்.

## அசைவுள்ள பொருட்கள்

தற்போது கோவிலிலுள்ள வாகனங்கள், விளக்குகள், பாத்திரங்கள் மற்றுமுண்டான தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் ஏறக்குறைய ரூபா இருபத்தையாயிரத்துக்கு மேற்படுமென்றே சொல்லலாம்.

## யாருடைய கோவில்?

இப் புராதனவாலயம் சைவ நன்மக்களுக்குப் பொதுவானதோ அல்லது ஒரு சிலருக்கு மாத்திரம் சொந்தமானதோ என்ற ஆசங்கை எல்லார் மனத்தையும் வாட்டுவதால் கோவிலையும் ஆஸ்திகளையும் சொந்தமெனப் பாராட்டுவோர் தங்கள் சாதனங்களுடன் வெளிவந்து நிரூபித்தல் வேண்டும்.

## இப்போதுள்ள நிலமை

தற்போது கோவில் நிர்வாகமோ சரியில்லை, நித்திய நைமித்தியங்களோ சரிவர நடைபெறவில்லை. வருவாய்க் கணக்குவழக்குக்களோ சரியானபடியில்லை. வருவாயோவென்றால் துர்விநியோகமாகின்றது.

## இனிச் செய்யவேண்டிய ஒழுங்கு

இப்படியெல்லாமிருப்பதால், யாழ்ப்பாணத்தில் மிகப் புராதனமாயுள்ள இவ்வாலயத்தை அதிக வரும்படியோடுகூடிய க்ஷேத்திரத்தை இனிமேல் சைவசமயாபிமானிகளாகிய கனவான்கள் கவனியாதிருக்கப்படாது அவசியம் முன்வந்து ஏற்ற ஒழுங்குகள் செய்து கோவிலைச் சீர்பெற நடாத்துதல் வேண்டும். இன்றேல் அரசாங்கத்தாருடைய பப்ளிக்டிரஸ்டி கையில் ஒப்படைத்தல் வேண்டும். இதுவே மரபாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரம்பரைப் பூசகர்கள்

தலைமுறை தத்துவமாகவும் பாரம்பரியமாகவுமிருந்து இக் கோவிலிற் பூசை செய்துவரும் ஐயாக்குட்டிக் குருக்களவர்களின் பிள்ளைகளும், தம் மூதாதையர்களைப் போல் நித்தியநைமித்தியங்கள் திறம்பாது செவ்வனே நடாத்தி வருகின்றனர், இவர்களின் சேவையே சிறந்த சேவை எனலாம்.

## தோம்பு பப்பரவன்சல்லி விபரம்

(நிர். 7) கோவிலிருக்கின்ற நிலத்தின் விபரம், இளையதம்பி பெண் வேலாசியும் அருணாசலம் ஐயனும் பங்காளரும் தோம்பு பப்பரவன்சல்லி நீளம் 22, அகலம் 2, பர. 3.

(நிர். 9) இராமலிங்கம் இராமச்சந்திரரும், இராமச்சந்திரர் கதிரித்தம்பியும் வையாளி இளையதம்பியும், கதிரன் கந்தனும் பங்கு. பப்ரவன்சல்லி நீளம் 22 அகலம் 2½. பரப்பு மூன்றேகாலே அரைக்கால்,

(நிர். 20) முருகப்பன் பெண் வள்ளியார், பப்பரவன்சல்லி நீளம் 22, அகலம் 5, பரப்பு 6½ ⅛. விசுவன் கதிரன் மாதாவின் சீதனம் பப்பரவன்சல்லி நீளம் 22, அகலம் 1⅓, பர. 2. இளையதம்பி மகன் இரகுநாதன் பெண் பெருமாததை, பப்பரவன்சல்லி நீளம் 22, அகலம் 2½, பர. 1½. ஷை தோம்பு நீளம் 18, அகலம் 1½, பர, 1⅛. சிதேவி நாயகியும் இளையதம்பி சேதனும் இரகுநாதன் பெண் பெருமாத்தையும் கந்தர் தியாகனும் பங்கு. பப்பரவன்சல்லி நீளம் 22, அகலம் 2½ பர. 3½ ⅛. ஷை பப்பரவன்சல்லி நீளம் 18, அகலம் 1½, பர. 1½.

(நிர். 57) சுந்தரர் மகள் தியாகர் பெண் குழந்தையர் வசம் நீளம் 23, அகலம் ஒன்றேமுக்கால், பர. 2,

(நிர். 60) தியாகர் பெண் புவனியார் வசம் நீளம் 22, அகலம் 3½, பர. நாலே அரைக்கால் ஷை நீளம் 18, அகலம் 1, பர. 1

(நிர். 66) செங்கால் அம்பலவனும் நாச்சி கந்தனும் வசம் நீளம் 18, அகலம் 6, பர. 6. ஷை நீளம் 22, அகலம் 2, பரப்பு ஒன்றேகால்.

(நிர். 69) கந்தன் கதிரன் வசம் நீளம் 22, அகலம் 8, பர. 11

(நிர். 83) கந்தப்பன் பெண் தையலம்மை தோம்பு நீளம் 36, அகலம் 2, பரப்பு 2

இதிற் சொல்லப்பட்ட நிலத்துக்கு உரிமையுடையோர் இன்றே முன்வரலாம். சும்மாவிருக்கப்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY

## Nainatheevu Nagapooshani Ammen Kovil

# DECREE No. 24476
# In the District Court of Jaffna.

Paramasamykurukkal Vairavanathakurukkal
of Kopay North — *Plaintiff*

— *vs* —

1. **Naganathar Velupillai**
2. **Ragunathar Saravanamuttu**
3. **Karthigesar Ramaliagam**
4. **Ramalingar Karthigesar and**
5. **Ramasandirar Muttukumaru**

residing at Nainatheevu — ***Defendants***

This action coming on for disposal before Samuel Houghton Esquire District Judge on the 4th day of May 1897 in the presence of Mr. Advocate Kankasabai with Mr. C. Strantenberg Proctor on the part of the plaintiff and of Mr Advocate Alagakoone with Messrs. Casipillai and Cathiravelu Proctors on the part of the defendants and in the presence of the plaintiff and defendants and that all matters in dispute between the parties in this action having then been referred by consent of parties and their counsel to the arbitration and award of A. I. Iragunathar Mudaliyar Maniagar of Valigamam west P. Mudaliyar Ilankanayagam Mudaliar Interpreter District Court Jaffna and V. Ampalavana Muda-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

liar Shroff of the Jaffna Kachcheri and this action coming again for final disposal before Samuel Haughton Esquire Dissrict Judge on the 20th day of June 1897 and the abritrators filed their award and the parties being present and having no objection to the terms of the award which they have signed it is ordered and decreed in terms of the award of the arbitrators dated the 28th June 1897 marked Lr Z and of the paper of settlement marked Letter A............... filed with the award that the plaintiff Paramaswamikurukkal Vairavanathakurukkal, the 4th defendant Iramalingar Karthigesar and the 5th defendant Ramachandirar Muttukumaru be and they are hereby declared the chief Managers of the Hindu Temple standing on the land Papparavanchally at Nainatheevu called Nagapooshaniammen kovil the plaintiff be and he is hereby declared to be the High Priest of the said temple the 4th defendant Ramalingar Karthigesar be and he is hereby declared to be the Treasurer of the said temple, the 1st defendant Naganathar Velupillai 2nd defendant Irakunathar Saravanamuthu the 3rd defendant Karthigesar Ramalingar and Velauthar Kathirithambi of Nainatheevu be and they are hereby declared to be the sub managers of the said temple.

**It is further decreed as follows :-**

(a) The Chief and the sub managers are to nominate and appoint a person to keep the accounts of all the incomes and expenditures of the said temple on a monthly pay of a sum not exceeding Rs. 15-00 and the said accountant shall keep the accounts in paper books bound paged and numbered.

(b) The sub managers are to do their duties in the said temple for the term of three months each successively in the order in which they have been named above and each sub manager is to recover during his said term all the income of the said temple and defray all the expenses required for the daily poojah ceremony of the said temple and keep a seperate account and deliver over the balance in hand at the end of the term into the hands of the Treasurer who shall examine the said account and compare the same with the accounts of the accountant and shall give a receipt signed by himself (Treasurer) and attested by the accountant.

133631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(c) The sub manager or sub managers during whose term the annual festival of the month of June (Ani) shall fall are to keep a separate account of the receipts and expenditure for the festival period and at the close of the festival deliver to the Chief Managers the account with balance amount remaining in his or their hands and such offerings of permanent value as may have been made to the temple by worshippers in performing their vows and obtain receipts from the Chief Managers such receipt being attested by the accountant of the temple who shall enter in his own books the items appearing in the account for that period of festival and state therein the balance paid to the Chief Managers.

(d) The management of the temple is to be under the control and supervision of the Chief Managers, who shall in case of any differences between them nominate three other independant and respectable persons and abide by and act according to their decision or the decision of the majority of them.

(e) The Chief and the sub managers shall jointly make a list within two months from this day of all the jewels brass wares and other articles & furniture & movable property belonging to the temple stating their approximate value and giving the weight of such articles as are usually weighed for valuation. And all the seven managers shall each keep a copy of the list so prepared and such copy shall be signed by all the managers and the articles should bear the initials of the temple Nana Navanaa Ana (ந. நா. அ.)

(f) The utensils and ornaments belonging to the temple which are wanted for daily use should be left in the hands of Poosakar and a receipt must be obtained from him and all the other jewels must remain in the store room or Kalanchiyam. The key of the box containing the jewels must be in the charge of Karthigesar the 4th defendant The key of the Chest or trunk in which the box of jewels is to be kept to be with Saravanamuttu the 2nd defendant The key of the innermost room wherein the said chest or trunk is kept to be in charge of Ramalingam the 3rd defendant.

The key of the room next to with Muttukumaru the 5th to defendant and the key of the outermost room of the said Kalanchiyam be with Velupillai the first defendant.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(g) Though the high priest is one of the chief managers whenever he has to perform his priestly duties in the temple, he shall have to do such duties under the orders and supervision of the other two chief managers who shall have power to impose a short fine according to the circumstances of the case and not with a view of vindicating their authority nor to lower him in the estimation of the Public. This is done in case of gross irregulority misconduct or insubordination. Should the High Priest be dissatisfied with the fine imposed he may appeal to three respectable men selected by himself and the other two managers and their decision will be final.

(h) The Chief Managers and the submanagers shall examine particularly the accounts of the receipts and expenditure during the period of the annual festivals and apply the balance or any part thereof for necessary repairs of the temple or erection of new buildings or invest the same wholly or in part in the purchase of lands or in any other way for the benefit of the temple as the managers may think proper.

(i) Whenever any one or more of the managers have reason to charge any of the managers with improper or fraudulent conduct it shall be the duty of the managers or of such managers as shall not be charged to convene a meeting of the managers and to endeavour to dispose of the matter of the charge or charges in a reasonable way; should they find it impossible to do so due regard being had to the interest of the temple they shall request five or seven disinterested and respectable men to arbitrate and decide on the matter of the charge or charges so preferred; and upon their decision or that of a majority of them the managers who may have been charged may be dismissed or suspended for a time or fined and appoint another in the place vacated according to the decision of the arbitrators.

(j) The said Chief Priest Paramaswamikurukkal Vairavanatha-kurukkal is entitled to the following remunerations perquisites and emoluments when he officiates as the High Priest of the temple during the annual festivals in the month of June (Ani).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Rs. 20 00 out of the collection made at the cermony called Utsavanayagi arichanai (உற்சவநாயகி அரிச்சனை) leaving the balance to be divided into four parts. $\frac{3}{4}$ of it to be given to the daily officiating priest. $\frac{1}{4}$th to be deposited in the Treasury of the temple.

2. The whole of the collections made up of the fees Arichchanai (அரிச்சனை) performed at the ceremonies called Ter Arichchanai (தேர் அரிச்சனை) and Theertha Arichchanai (தீர்த்த அரிச்சனை)

3. He the chief priest is to have also the allowances and perquisites which are made to him by persons contributing to the expenses of the annual festivals.

It is further ordered tnat parties do bear their own costs of this action.

**SAMUEL HAUGHTON**
**District Judge**

28th June 1897

True Copy of Decree in Case No. 24476 D. C. Jaffna of 1897 issued (Page 1-6)

*Signature of D C. Secy.*

Jaffna. 22-9-36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு- 2.

உ

சிவமயம்



# நயினாதீவு

## நாகபூஷணியம்மன் கோவில்

## நிர்வாக விசாரணைக் கொமிஷனரின்

## அறிக்கை.

# கோவில் சொந்தமல்ல

# ஊர்ப் பொதுவே.

வீரகேசரிப் பிரஸ், 192, செட்டியார் தெரு, கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவில் நிர்வாக விசாரணைக் கொமிஷனரின் அறிக்கை.

---

திரு. சி: இரகுநாதன், திரு. வி. வீரசிங்கம், திரு. சி. அருளம்பலம் ஆகியோர், 1937-ம் வருட நம்பிக்கைச் சட்டத்தின் 9-ம் இலக்க (Trusts Ordinance No. 9 of 1937) 102-ம் பிரிவின் 3-ம் உப பிரிவின்படி, நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலைப் பற்றிய விபரங்களை விசாரிப்பதற்கும், முப்பத்து மூன்று (33) நயினாதீவு வாசிகளால் கைச்சாத்திடப்பட்டு 1938-ம் வருடம் வைகாசி மீ' 10-ந் திகதி வட மாகாண அரசாட்சித் தலைவருக்கு (G A. N. P.) அனுப்பப்பட்ட பெட்டிசத்திலுள்ள விஷயங்களை விசேடமாக விசாரணை செய்வதற்குமாகக் ''கொமிஷனர்'' களாக நியமிக்கப்பட்டனர்.

2 இவர்கள் 1938-ம் வருடம் ஆனி மீ' 29-ந் திகதி (29-6-38) 'கொமிஷனர்' களாக நியமிக்கப்பட்டு, 1938-ம் வருட ஆவணி மீ' முடிவுக்குள் தங்களறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேற்கூறிய காலவெல்லைக்குள் விசாரணை முடிக்க முடியாமையினால் காலத்துக்குக்காலம் பின்போடப்பட்டு, ஈற்றில் 1938-ம் வருடக் கார்த்திகை மீ' (November 1938) கடைசிக்குள் விசாரணை முடிவுற்றது.

## கொமிஷனரின் அறிக்கை

3. நாங்கள் 1938-ம் வருடம் ஐப்பசி மீ' (October 1938) 8-ம், 9-ம் தேதிகளில் பல சாட்சிகளின் வாக்குமூலத்தை நயினாதீவிலும், தீவுப்பகுதி மணியகாரனின் வாக்குமூலத்தைப் பிரத்தியேகமாக வேலணையில் 1938-ம் வருடம் கார்த்திகை மாதம் (November 1938) 12-ம் திகதியும் பதிவு செய்தோம். நயினாதீவில் சாட்சிகளை நாங்கள் பதிவு செய்யுமுன் விசாரணையின் இயல்பும் திகதியும், எங்களது நாமங்கள் கீழே பதியப்பெற்ற அச்சு விளம்பரங்கள் எங்கும் பரப்பி, பகிரங்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டது. ஒவ்வொரு பெட்டிசக்காரருக்கும் எதிரிகளுக்கும் தனித்தனியே ஒவ்வோர் அறிவித்தற் பத்திரங் கொடுக்கப்பட்டது. அன்றியும் விசாரணையைப் பற்றி நயினாதீவு முழுவதும் பறைசாற்றி அறிவிக்கப்பட்டது.

4. எல்லா சாட்சிகளும் சாட்சியங் கொடுக்குமுன் சத்தியஞ் செய்யப்பட்டனர்.

5. **பெட்டிசம் :** இவ் விசாரணை மேற்காட்டிய பெட்டிசத்தின் நிமித்தமெழுந்ததாதலால், இப்பெட்டிசக்காரரின் குறைகளைக் குறிப்பிடுதல் சிறப்புடைத்து. நயினாதீவு வாசிகளும், ஒழுங்காக இக்கோவிலில் வணங்குவோர்களுமாகிய இவர்களின் பெட்டிசத்தில், 1897-ம் வருடம் யாழ்ப்பாணம் பெரிய கோட்டில் தொடர்ந்த ஓர் வழக்கின் (D. C. Jaffna 24476) தீர்ப்பின் (28-6-1897) நிமிர்த்தம், கோட்டால் நியமிக்கப்பட்ட சில மத்தியட்சர்கள், அவ்வழக்கிற் சம்பந்தப்பட்ட பல பகுதிகளுக்கும் உடன்பாடான ஓர் நிர்வாக திட்டத்தை ஒழுங்கு செய்தனர். அத்தீர்வையின் படி, அவ்வழக்கின் வழக்காளியும் வேறிருவரும் பிரதம மனேஜர்களாகவும், வேறு நால்வர் உப மனேஜர்களாகவும் நியமிக்கப்பட்டனர். அத்தீர்வையிற் கூறப்பட்ட மனேஜர்களில் தற்போது ஆக ஒரு உப மனேஜரே உயிருடனிருக்கின்றார், அம் மனேஜர்கள் ஒவ்வொருவரும் இறந்தபோது, அவர்களின் மைந்தர்கள் நிர்வாகத்தைத் தாங்களபகரித்தனர். அத்தீர்வையிற் கூறப்பட்ட மனேஜர்மார் இறந்தவுடன் கோவில் நிர்வாகமெப்படியாக வேண்டுமென்று, அத்தீர்வையிலொன்றுங் காட்டப்படவில்லை. தற்போதைய மனேஜர்களுள், அத்தீர்ப்பிலுள்ள உப மனேஜருள் ஒருவரும், தற்போதைய நயினாதீவு உடையாருமாகிய இரகுநாதர் சரவணமுத்துவைத் தவிர்ந்த மற்றெல்லோரும், கோட்டின் உத்தரவோ அல்லது பொதுமக்களின் சம்மதமோ ஒன்றும் இல்லாமல் நிர்வாகத்தைத் தங்களுக்குள் அபகரித்தனர்.

6. தற்போதைய மனேஜர்மார், கோவிலில் வணங்குவோரின் திருப்திக்கேற்ப கோவில் நிர்வாகத்தை நடத்தவில்லையென்றும் கோவிலின் வருமானத்தைத் தங்கள் சொந்தப் பாவிப்புக்கும் தகாத வழிகளிலும் செலவிடுகிறார்களென்றும், தக்க முறையில் கோவிலின் நாள்வீதப் பூசை நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளில்லையென்றும், கோவிலின் வரவு செலவுகளைப் பற்றி முறையான கணக்குகளில்லையென்றும், இப்பெட்டிசங் கூறுகிறது; அல்லாமலும் வருடாந்தத் திருவிழாக் காலத்தில் கோவிலுக்குப் பணமாக 10.000 ரூபாயும் பொன் வெள்ளியாக 5000 ரூபாயும் வருமானமுண்டென்றுங் கூறுகின்றது. ஆனால் வருடாந்த விழாக்கால வருமானத்தோடு மற்றைய வருடாந்த வருமானம் யாவுஞ் சேர்ந்தாற்றான் மேற்கூறிய தொகை வருமென, விசாரணையின்போது யாமறிந்தோம்.

7. எங்களாற் பதியப்பட்ட சாட்சியங்களிலிருந்து, கோவில் பொதுக்கோவிலென்பதும், ஆகவே அதன் நிர்வாகத்துக்குப் பொதுமக்களுரிமை உடையவரென்பதுமே பொதுஜனங்களிடத்துள்ள ஒரேயபிப்பிராயமென்று சந்தேகமின்றிக் கூறுகிறோம்.

8. மேற்கூறப்பட்ட பெரிய கோட்டுத்தீர்வையுள் காட்டப்பட்ட உப மனேஜர்களுள் உயிருடனிருப்பவரும், நயினாதீவு உடையாருமாகிய இரகுநாதர் சரவணமுத்துவின் வாக்குமூலத்துக்குத் தனிக் கவனஞ் செலுத்த வேண்டும். அவர் கோவில் பொதுவென்றும், மனேஜர்கள் நிர்வாக உரிமையைத் தங்கள் மைந்தருக்கு மாற்றும் முறை சீரிய நிர்வாகத்துக்குப் பங்கமுடைத்தென்றும் ஒத்துக்கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. எங்களது அபிப்பிராயத்தின்படி, மிகப்பிரதானமானது தீவுப்பகுதி மணிய காரன் திரு. மு. சோமசுந்தரமவர்களினது வாக்குமூலமே. அவர் இக் கோவிலுக் கும் தனது குடும்பத்துக்கும் 1866-ம் வருடந் தொடக்கந் தொடர்பிருந்ததென்றும், அவரது பாட்டனும், தகப்பனும், தானும் ஒருவராகிலும் கோவில் நிர்வாகந் தன தென உரிமை பேசாவிட்டாலும் நிர்வாகத்தை மேற்பார்வை பார்த்து வந்ததாக வுங் கூறினர். அன்றியும் அவர் கோவில் பொதுக் கோவிலென்றும் பொதுமக்க ளாற் தெரியப்பட்ட பஞ்சாயத்தாரால் ஒரு காலத்தில் நிருவகிக்கப்பட்டதெனவும் இயம்பியுள்ளார். அவரது வாக்குமூலப்படி, தற்போதய மனேஜர்கட்கு அவர்களின் தந்தைமார் மூலமுள்ள உரிமையைத் தவிர, வேறெவ்வித உரிமையுமில்லையென்றும் அவர்களது தந்தையருக்கு கோவில் நிர்வாகத்தைத் தங்கள் பின்னேருக்குக் கொடுப் பதற்கு மேற்காட்டிய கோட்டுத் தீர்வையோ அல்லது பொதுமக்களோ ஒருவித உரிமையுங் கொடுக்கவில்லை என்றுங் கூறினர்.

10. ஆகவே, இக்கோவில் பொதுக்கோவிலென்னும் முடிவுக்கு வருவதற்கு எங்கட்கு ஒருவித சந்தேகமுமில்லை. கோவிலின் வருமானம் கோவிலின் நன்மைக் கான வழிகளில் செலவிடப்படுகிறதில்லையென அநேக சாட்சிகள் வாக்குமூலங் கொடுத்துள்ளார்கள். தீவுப்பகுதி மணியகாரன், தற்போதைய மனேஜர்மார் கட்டுப் பாடில்லாமல் தகாத வழிகளில் கோவில் வருமானத்தைச் செலவு செய்வதற்குத் தான் உடன்பட முடியாமையினல் 1937-ம் ஆண்டு கோவிலிற்றனது தொடர்பை நிராகரிக்க வேண்டியதாயிற்றென்ருர். அன்றியும் கோவில் உண்டியற்பெட்டி 1927-ம் ஆண்டு ஆனி மீ ஒரு முறையும், 1928-ம் ஆண்டு பங்குனி மீ ஒரு முறையும் உடைக் கப்பட்டு அதற்குளிருந்த பொருள்கள் களவாடப்பட்டதாகச் சாட்சியிற் சொல்லப் பட்டது. களவாடியவரை அறவே கண்டுபிடிக்கவில்லை. ஆனல் ஒரு மனேச்சராவது அவ்வூர் விதானைக்கு இக்களவையறிவிக்க முயலவில்லை. இது நாங்கள் பதிந்த விதானை யின் வாக்குமூலத்தாற் புலனாயிற்று.

11. தொடர்பாக எழுதப்பெற்ற ஒரு கணக்குப் புத்தகம் எங்கட்ககப்படா மையின், கோவிலின் வரவு செலவுக் கணக்கு முறைப்படி பதியப்படவில்லையென் னும் முடிவுக்கு நாங்கள் வருகிருேம்.

12. கோவிலுக்குச் சொந்தமான ஆபரணங்களை நாங்கள் பார்வையிட்டோம். ஒரு நகையைத் தவிர்ந்த மற்றவை யாவும் நகைப்பெட்டி வைக்குமறையின் பொறுப் பாளர்களால் எங்கட்குக் கொடுக்கப்பட்ட கணக்குடன் ஒத்திருந்தன. அவ்வாபர ணங்கள் கவனமாகப் பார்க்கப் படவில்லையென்பது அவைகளைப் பார்த்தவுடன் புலனனது. அன்றியும் அவைகள் பதியப்பட்டிருந்த புத்தகத்தில், அவற்றின் பெறு மதியும், யாரால் எப்போ உபகரிக்கப்பட்டதென்றுங் காட்டப்படவில்லை. சில பாகங் கள் உடைந்துங் குறைந்தும் இருப்பதால், அநேக ஆபரணங்கள் பாவிப்புக்கேற்றன வாயில்லை. அதிகங்கூடிய விலைமதித்தாலும், எமது அபிப்பிராயத்தில் இவை 2,000 ரூபாய்க்கு மேல் விலை மதிக்கப்படா. சுவாமி எழுந்தருளுந் தருணம் வழமையாக எடுத்துச் செல்லப்படும். பொற்குடையொன்று காணப்படவில்லை; அதன் மறைவுக் குக் காரணமுங் காட்டப்படவில்லை. அதனை இக் 'கொமிஷனரில்' ஒருவர் சில தடவைகளிற் பார்வையிட்டிருந்தாராம். அக்குடையை விற்றிருந்தால் இம்மனேஜர் கள் அதன் பெறுமதியைக் கூறியிருக்க வேண்டும்: ஆனல் அவர்களால் அது கூற முடியவில்லை. கோவிலின் நகைகட்கும் மற்றுஞ் சாமான்கட்கும் பொறுப்பாயிருந் தோர், இவைகள் கோவிலுக்குப் பொதுஜனங்களாற் கொடுபடவில்லையென்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனேஜர்களாலேயே வாங்கப்பட்டதுமெனக் கூறினார்கள். மணியகாரன், தனது சாட்சியத்தில் இவ்வாபரணங்களும் மற்றுஞ் சாமான்களும் பொதுமக்களாலேயே அளிக்கப்பட்டனவென்றார். நாங்களும் அவரைப்போலவே அபிப்பிராயப்படுகிறோம். இக்கோவிலிலும் சிறிய கோவில்கட்கு, இக்கோவிலிலுள்ள ஆபரணங்களிலும் அதி கங்கூடிய விலை மதிப்புள்ள ஆபரணங்களைப் பொது மக்களளித்திருப்பதை யாமறிவோம். ஆகவே பலபாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கானோர் செல்லும் இக்கோவிலுக்குப் பொதுஜனங்களால் ஒரு ஆபரணமும் அளிக்கப்படவில்லையெனக் கூறுவது நியாயமின்மையும் மடமையுமாகும். யாழ்ப்பாணத்திலுள்ள கோவில்களெல்லாவற்றிலும், நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவிலுக்கே விலையுயர்ந்த காணிக்கைகள் செலுத்தப்படுவதென்பது மலைமேல் விளக்கு.

13. மணியகாரனும் அவரது முன்னோர்களும் இக்கோவில் நிர்வாக மேற்பார்வையில் நெருங்கிய தொடர்புள்ளோராயிருந்தனராதலால் அவரது அபிப்பிராயம் மிகவும் பிரதானமானது. அவர் இக்கோவில் நிர்வாக உரிமை சந்ததி சந்ததியாக மாற்றப்படக் கூடாதென்கிறார். நாங்களும் அப்படியே அபிப்பிராயப்படுகிறோம். நாங்கள் இக்கோவிலின் தற்போதைய மனேஜர்மாருடன், கோவிலைக் கோவிலின் அபிவிருத்திக்கான முறைகளில் நடாத்தும்படிகூறி ஓர் ஒழுங்கு செய்ய முயன்றும், அவர்கள் அதற்குச் செவிடாயிருந்தமையால், எமது முயற்சி பயன்தரவில்லை நாங்கள் கோவிலைப் பார்வையிட்டபோது கோவிற் கட்டடங்கள் தேர் முதலிய மற்றைய பொருள்கள் யாவும் மிகவும் விசனத்துக்கிடமான கேவலமான நிலைமையிலிருந்தன.

14. இந்த மனேஜர்மார் ஐவரும் கோவிலுக்குத் தாங்களே முழு உரித்தாளிகளென்றும், அதனது நிர்வாக உரிமை தங்கள் சந்ததிக்கே உரியதென்றும் வாதாடினர். ஆனால் அவர்களாற் காட்டப்பட்ட சாதனங்களிலும் மற்றுஞ் சாட்சியங்களிலுமிருந்து, அவர்களது உரிமை ஆதாரமற்றதென நாங்கள் காண்கிறோம். அப்படியாதேனுஞ் சாதனமிருந்தால், மேற்கூறிய கோட்டுத் தீர்வை அதைக் காட்டியிருக்கும். இதன் நிர்வாகம் சந்ததி உரிமைபற்றியதாயிருந்தால் இவர்களைப் போலுரிமையுள்ளோர் இன்னும் அனேகருண்டு.

15. தற்போது திருவிழா நடாத்துங் குருக்கள், அத்தீர்வையிற் காட்டிய குருக்களின் சந்ததியிலில்லாதவராகவும், கோவிலின் நிர்வாகத்தைச் சீர்பெற நடத்தச் சிறிதுஞ் சிரத்தை எடாதவராகவும் இருப்பதால் இவர் அத்தீர்வையிற் காட்டிய ஒருவித உரிமைக்கும் அருகரல்லர். இவர், ஆகத் திருவிழாக் காலத்திற்றான் இவ்வூருக்கு வருகிறவராம். இக் குருக்களுக்கு இவ்வித விசேட வருமானமும் உரிமைகளும் வருடந்தோறுங் கொடுக்கப்படுவதற்குக் காரணம் எமக்குப் புலப்படவில்லை. இம் மனேஜர்களும் குருக்களும் இக்கோவிலைத் தாங்கள் விளையாடுவதற்காக அமைத்த ஓர் பொன் நீரூற்றாகக் கருதுகிறார்களென்பதே எங்களது ஒரே முடிவு.

16. ஆகவே கோவிலின் அபிவிருத்திக்கேற்ற ஓர் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென நாங்கள் உணருகின்றோம். இத்திட்டத்தில் ஒரு மனேஜர் இறந்தாலோ அல்லது கடமையாற்ற முடியாதவராக வந்தாலோ, அவரது இடத்திற்கு இன்னொருவரை நியமிக்க விதியமைத்தல் வேண்டும். விபரமாக எழுதப்பெற்ற வரவு செலவுக் கணக்குகள் ஆறுமாதத்துக்கு ஒருமுறை கோட்டில் ஒப்படைக்கவும், அக் கணக்குகளை யாத்திரிகர்கள் பார்வைக்கு வைக்கவும் இத் திட்டத்தில் விதிகளிருத்தல் வேண்டும். நயினாதீவு முழுவதும் அறிவித்தல் செய்து கூடிய ஓர் கூட்டத்தில் நியமிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட தராதரமுள்ள ஓர் கணக்குப் பரிசோதகரால் இக்கணக்குகள் பரிசோதிக்கப்படல் வேண்டும்; கோவிலுக்குச் சேர்ந்த நகை முதலிய அசைவுள்ள ஆதனங்களின் அட்டவணை ஒன்று ஆறுமாதத்திற்கொருமுறை தயார் செய்யப்பட்டுப் பரிசோதகரால் பார்வையிடப்படல் வேண்டும். இத்திட்டத்தில், இறக்கும் அல்லது இயலாதவராக வரும் ஒரு மனேஜரினிடத்திற்கு நயினாதீவு முழுவதுமறிவித்து நயினாதீவுச் சைவ சமயிகள் கூடிய பகிரங்கக் கூட்டத்தில் மனேஜர்களைத் தெரிவு செய்யும் முறை அமைக்கப்படல் வேண்டும்.

17. நாங்கள் கீழ்க்காணும் நிர்வாகத்திட்டத்தை ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கிறோம்:-

(1) வட மாகாண அரசாட்சித் தலைவரின் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரின் தலைமையில் நயினாதீவு வாசிகளால்முறைப்படி கூடப்பட்ட ஓர் பகிரங்கக் கூட்டத்தில் ஐந்து அங்கத்தவர் சேர்ந்த ஓர் நிர்வாகசபை தெரியப்படல் வேண்டும். இதுவே முதல் நிர்வாகசபையாகும். இவர்களில் இறக்கும், அல்லது கடமையாற்ற இயலாமல் வருபவரினிடத்துக்கு முன்போன்ற ஓர் பொதுக்கூட்டத்திற் பொது சனங்கள் மூவரைத் தெரிந்து, அம்மூவரில் ஒருவரை மற்றைய எஞ்சிய நிர்வாக சபையங்கத்தினர் நியமித்தல் வேண்டும்.

(2) இந் நிர்வாகசபை வருடந்தோறும் முறையே ஒவ்வொரு வரை மனேச்சராக நியமிக்கவேண்டும்.

(3) காலத்துக்குக்காலம் கோவிலுக்குச் செய்யவேண்டிய திருத்தங்களையும் மாற்றங்களையும் இந் நிர்வாக சபை நிச்சயிக்க வேண்டும்.

(4) ஒழுங்கான கணக்கு வைத்திருப்பதற்கு இந்நிர்வாக சபையினரே பொறுப்பாளிகளாவர்.

(5) இந்நிர்வாகசபை ஆதனப்பிணை 1000 ரூபா அல்லது ரொக்கப்பிணை 500 ரூபா கட்டிய ஓர் கணக்கப்பிள்ளையை மாதம் 25 ரூபா வேதனத்தில் நியமிக்க வேண்டும்.

(6) இந்நிர்வாகசபை பரிசோதிக்கப்பட்ட அவ்வாறு மாசக்கணக்கை பங்குனி மீ 31-ந் தேதியும் (31st March) புரட்டாதி மீ 30-ந் தேதியும் (30th September) யாழ்ப்பாணப் பெரிய கோட்டிற் சமர்ப்பிக்க வேண்டும். இக் கணக்குகள் பொது சனங்களாற் பார்வையிடத் தக்கதாக வைக்கப்படல் வேண்டும்.

(7) வருடாந்த விழாக் காலக் கணக்கு மற்றக் கணக்குடனில்லாமல் வேறாக இருத்தல் வேண்டும்.

(8) நிர்வாகசபை, கீழ்க்காட்டப்படும் விதமாக ஓர் தனிப் பதிவுப்புத்தகத்திற் கோவிலுக்குபகரிக்கப்படும் காணிக்கைகளைப் பதிவு செய்தற் கொழுங்கு செய்தல் வேண்டும்:-

I. உபகரிக்கப்பட்ட தேதி    II. உபகரிப்பவரின் பெயரும் விலாசமும்

III. உபகரிக்கப்பட்ட பொருளின் விபரமும் பெறுமதியும்

IV. எப்படி, எத்தொகைக்குப் பொருள் செலவிடப்பட்டது.

(9) கோவிக்குபகரிக்கப்படும் பொன் வெள்ளிச் சாமான்கட்கோ அல்லது மற்றைய பொருள்கட்கோ வரிசைக் கிரமமாக இலக்கமிடப்பட்ட பற்றுச் சீட்டுக் கொடுப்பதற்கு நிர்வாகசபையாரே பொறுப்பாளிகளாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10) வருடாந்தத் திருவிழா நடாத்துங் குருக்களுக்கு நாள் விதம் 10 ரூபா காசும் அவரின் போஷிப்புக்கு நாளொன்றுக்கு 3 ரூபாவுக்கு மேற்படாமல் பணமாகவோ அல்லது பொருளாகவோ கொடுக்க வேண்டும்.

(11) நாளாந்தப் பூசகர்கள், பொருளாக வரும் மற்றைய வருமானத்துடன் அர்ச்சனைப் பணத்தில் ஐந்திலொன்றுக்கு உரித்துடையராவர். மற்றைய வருமானம் யாவுங் கோவிலுக்கே சேரவேண்டும்.

(12) நிர்வாக சபையாரால், வருடந்தோறும், தெரியப்படும் மனேஜர் எல்லாக் கணக்குகளையும் பற்றுச் சீட்டுகளையும் முறையாயும் சரியாயும் வைத்திருப்பதற்குப் பொறுப்பாளியாவார். அவர் கோவிலின் நாடோறு மேற்படுந் தேவைகட்கு ஏற்ற ஒழுங்குகளமைக்க வேண்டும். அன்றியும் அவர் பஞ்சாங்கத்திலுள்ளபடி வருடம் முழுவதுமுள்ள விழாக்களையெல்லாம் வணங்குவோரின் திருப்திக்கேற்க கிரமமாகச் செய்வித்தல் வேண்டும். அவர், தான் மனேஜராயுள்ள காலத்துக் கணக்குகளை நிர்வாக சபைக்கு ஒப்படைக்க வேண்டும். அவ்வக்காலத்துள்ள மனேஜரே சங்கற்பத்துக்குரிமை உடையவராவர்.

(13) முன்கூறியுள்ளபடி எங்களது இத்திட்டத்தின்படி கோவில் நிர்வாகத்தை நடத்தும்படி இவ்வெதிரிகளுடன் நாங்கள் தெண்டித்தும் அவர்கள் சம்மதப்படவில்லை. ஆகவே இப்பெட்டிசக்காரர் நியாயஸ்தல மூலமாகத் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யவும்.

ஒப்பம்

சி. இரகுநாதன்
வி. வீரசிங்கம்
சி. அருளம்பலம்
விசாரணைக் கமிஷனேஸ்

6-12-38

**நயினை வாசிகளே !** **சைவசமயாபிமானிகளே !**

பட்சபாதமற்ற அறிவிற்சிறந்த ஓர் விசாரணைக் 'கொமிஷனரின்' அறிக்கையைச் சற்றுக் கவனியுங்கள்! ஊர்ப்பொதுவாகிய கோவிலைச் சொந்தமாகப் பாவித்த அட்டூழியத்தை உற்றுநோக்குங்கள்! உங்களொவ்வொருவருக்கும் உரிமையான கோவிலின் உரிமைக்கு வாதாட முன்வாருங்கள்! இதிற் சிரத்தையெடுத்துழைக்கும் தொண்டருக்கு உற்சாகமூட்டுங்கள்! நீதிக்கும் உரிமைக்கும் வாதாடுங்கள்! அநியாயத்தையும் அக்கிரமத்தையும் அகற்றுங்கள்! கோவிலின் முன்னேற்றத்துக் கேற்ற வழிகளை நாடுங்கள்! எழுமின்! விழிமின்! இன்னும் அயர்ந்து தூங்காதீர்கள்! அப்பொழுதே வெற்றி உங்களது!.

பொது நன்மையே தம் நன்மையாய்க்கொண்டு சிரமத்தை நோக்காது நயினையுற்று விசாரணை செய்து ''சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க்கணி'' என்னும் செந்நாப் போகார் திருவாக்கிற்கிணங்க உண்மையை உள்ளவாறே தீர்த்து எங்கட் கார்வமூட்டிய கொமிஷனர்கட்கும் சாட்சி கூறியவர்களுக்கும் நயினை வாசிகளின் குன்றா நன்றி என்று முரித்தாகுக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு - 3

# தீர்வை

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்.**

1. கதிரித்தம்பி கந்தையாபிள்ளை
2. கணபதிப்பிள்ளை வேலாயுதம்பிள்ளை
3. ஆறுமுகம் நாகலிங்கம்
4. சண்முகம் நாகநாதர் கந்தையா
5. சின்னத்தம்பி துரைச்சாமி

அனைவரும் நயினாதீவு

# வழக்காளிகள்

**இல. 14151** எதிராக

1. நாராணபிள்ளை வைத்திலிங்கம்
2. முத்துக்குமாரு காசிப்பிள்ளை
3. பரமலிங்கம் கந்தசாமி
4. காசிப்பிள்ளை ஆறுமுகம்
5. வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

அனைவரும் நயினாதீவு

6. முருகேசு நாகலிங்கம், நெடுந்தீவு
7. முருகேசு கார்த்திகேசு
8. இரகுநாதர் சரவணமுத்து
9. சரவணமுத்து இரகுப்பிள்ளை

அனைவரும் நயினாதீவு

*( இறந்த 4 வது எதிர்வாதிக்காகப் பதிலிடப்பட்டார் )*

# எதிர் வாதிகள்

*1948ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ம் நாளாகிய இன்று வழக்காளிகளின் வழக்கறிஞராகிய திரு. அல்பிரட் சுவாம்பிள்ளையின் அனுசரணையுடன் ஆஜராகும் வழக்குரைஞர் திரு. கே. கே. சுப்பிரமணியம், 1 ம் எதிர்வாதியின் வழக்கறிஞர் திரு. ஆர். நல்லையா, 2 ம் 4 ம் எதிர்வாதிகளின் வழக்கறிஞர் திரு கே. நடராஜா, 3 ம் 9 ம் எதிர்வாதிகளின் வழக்கறிஞர் திரு. வி. நவரத்தினராஜா, 5 ம் எதிர்வாதியின் வழக்கறிஞர் திரு. ரீ. வன்னியநாதன் ஆகியோர் முகதாவில், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திருவாளர் ஆர். ஆர். செல்லத்துரை முன்னிலையில் இறுதி முடிவுக்காக இவ் வழக்கு நடவடிக்கை கொணரப்பட்டது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1942 ம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ம் தேதியிட்ட கட்சிக்காரர்களது சம்மதத்தின் பேரில் வழங்கப்பட்ட கட்டளைப்படியும் **1944 ம் ஆண்டு** ஆகஸ்ட் மாதம் 4 ம் தேதிய சமாதான முடிவின் பிரகாரமும், இலங்கை, வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதிப்பிரிவு நயினாதீவில் உள்ள "பப்பரவன்சல்லியும் மறுபிரிவுகளும்" எனப்பட்ட காணியில் தாபிக்கப்பட்டிருப்பதும் இந்துமத பொது வழிபாட்டிடமாக தாபிக்கப்பட்டு அவ்வாறே விடப்பட்டதுமான "நாகபூசணி அம்மன் கோவில்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமாகிய இந்துக் கோவிலானது அதற்குச் சேர்ந்த வழிபடுதலங்கள், விக்கிரகங்கள், மண்டபங்கள், மடாலயங்கள், சுற்றுப்பிரகாரங்கள், கிணறுகள், மடப்பள்ளிகள், நந்தவனங்கள் முதலானவற்றுடனும் அதற்குரிய பிறவற்றுடனும் இதன்கீழான அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள கோவிலைச் சார்ந்தவற்றுடனும் 1917 ம் ஆண்டின் 9 ம் இலக்க நம்பிக்கைச் சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் 99 ம் பிரிவின் கீழ் ஒரு பொதுத் தர்ம நம்பிக்கைச் சொத்தென இத்தால் கட்டளையிட்டுத் தீர்வையளிக்கப் படுவதுடன் அவ்வாறே பிரகடனப்படுத்தவும் படுகின்றது.

2 ம், 3 ம், 5 ம் எதிர்வாதிகளும் 8 ம் எதிர்வாதிக்காகப் பதிலிடப்பட்ட 9 ம் எதிர்வாதியும் பரம்பரை அறங்காவலர்களாக பிரகடனப்படுத்தப்படுதற்குரியவர்களென இத்தால் மேலும் கட்டளையிட்டுத் தீர்வையளிக்கப்படுகிறது.

1948 ம் ஆண்டு டிசம்பர் 16 ம் தேதியிட்டு இவ் வழக்கில் கோவை செய்யப்பட்டுள்ள நிர்வாகத்திட்டத்திற் குறிக்கப்பட்டுள்ள அறங்காவலர் சபை ஒன்றின் வழிகாட்டலிலும் மேற்பார்வையிலும் இக் கோவிலும் கோவிலைச் சார்ந்தவைகளும் இருத்தல் வேண்டுமெனவும் கோவிலையும் கோவிலைச் சார்ந்தவைகளையும் சகல அசைவுள்ள அசைவற்ற சொத்துக்களையும் அந்த அறங்காவலர் சபையினர்க்கு உரித்தாக்கும் உரித்தாக்கற் கட்டளையொன்று பதியப்பட வேண்டுமெனவும் குறித்த கோவிலதும் அதைச் சார்ந்தவைகளதும் நிருவாகம் குறித்த நிருவாகத்திட்டத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய 1917 ம் ஆண்டின் 9 ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 112 ம் பிரிவின் கீழ் குறித்த அறங்காவலர் சபைக்குரித்தாகக் கடவது எனவும் இத்தால் மேலும் கட்டளையிடப்படுகிறது.

கட்சிக்காரர்கள் தத்தமது வழக்குச் செலவுகளைத் ,தாமே பொறுப்பேற்க வேண்டுமெனவும் மேலும் கட்டளையிடப்படுகிறது.

1949 ம் ஆண்டு பெப்ருவரி 21 ம் நாளாகிய இன்று.

ஒப்பம்: ஆர். ஆர் செல்லத்துரை
மாவட்ட நீதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்குறித்த அட்டவணை

இலங்கை, வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் தீவுப்பகுதி நயினு தீவில் ஏறக்குறைய150 நிலப்பரப்பு விஸ்தீரணமுள்ள ''பப்பரவன்சல்லியும் மறுபிரிவுகளும்'' எனப்படும் காணித்துண்டு முழுவதும் இதற்கெல்லை கிழக்கு கடற்கரை. வடக்கு கடற்கரையும் குணரத்தினம் கந்தையாவிற்கும் மறுபே ருக்குமுரிய வாதனமும். மேற்கு நாகலிங்கக் குருக்கள் சாமிநாதக் குருக் களுக்கும் மறு பேருக்கும் உரிய வாதனம். தெற்கு – ஒழுங்கையும் ரேட்டு முகப்பும் ஒழுங்கையும். நாகபூசணி அம்மன் கோவில் மற்றும் கோவில்கள், விக்கிரகங்கள், மடாலயங்கள், தேர் முட்டி சுற்றுப் பிரகாரங்கள் மற்றும் கட்டிடங்கள், கிணறுகள், வான்பயிர் செய் பயிர்கள் மற்றும் அதற்குண்டா னவைகளும் கோவிலைச் சார்ந்தவைகளும்.

ஒப்பம் : ஆர். ஆர். செல்லத்துரை
மாவட்ட நீதிபதி

வரைந்தவர் :

ஒப்பம் : அல்பிரட் சுவாம்பிள்ளை
வழக்காளிகளின் வழக்கறிஞர்

## நிர்வாகத்திட்டம்

1. இந்துப் பொதுமக்களின் மதவழிபாட்டிற்கெனத் தாபித்து விடப்பட்டுள்ளதும், இலங்கை வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதிப்பிரிவு நயினுதீவில் அமைந்துள்ளதும், சுமார் 150 நிலப்பரப்பு விஸ்தீரணமுள்ள "பப்பரவன் சல்லியும் மறுபிரிவுகளும்" எனப்படும் காணியில் தாபிக்கப்பட்டதும் "நாகபூஷணி அம்மன் கோவில்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமாகிய இந்துக் கோவிலும் அதனைச் சேர்ந்த எல்லாக் கோவில்கள், விக்கிரகங்கள், மண்டபங்கள், மடால யங்கள், முற்றங்கள், கிணறுகள், மடப்பள்ளிகள், நந்தவனங்கள், மற்றும் அதற்குரியவைகளும், அதைச் சார்ந்த அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்களும் 1917 ம் ஆண்டின் 9 ம் இலக்க பொதுநம்பிக்கைச் சொத் துக்கள் கட்டளைச் சட்டத்தின் 99 ம் பிரிவின் பொருளுக்குட்பட்ட பொதுத் தர்ம நம்பிக்கைச் சொத்தொன்ருக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இவ்வழக்கில் பதியப்பட்டுள்ள 4. 8. 1944ம் தேதியிட்ட உடன் படிக்கையின்படி, அறங்காவலர்சபை ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டதாயிருத்தல் வேண்டும். இவ்வொன்பது உறுப்பினர்களில், பின்வரும் நால்வரும் பரம்பரை அங்கத்துவத்துக்குரியவர்களாய் இருப்பர்:

| | | |
|---|---|---|
| 1. | முத்துக்குமாரு காசிப்பிள்ளை | ( 2ம் பிரதிவாதி ) |
| 2. | பரமலிங்கம் கந்தசாமி | ( 3ம் ,, ) |
| 3. | வேலுப்பிள்ளை பொன்னம்பலம் | ( 5ம் ,, ) |
| 4. | சரவணமுத்து இரகுப்பிள்ளை | ( 9ம் ,, ) |

இவர்களில் எவரும் தமது பின்னுரித்தாளரை நியமிக்க உரிமையற்றவர். ஆனால் நீதிமன்றம் ஒவ்வொருவரின் விடயமாகவும், அவரது ஆண் வாரிசுகளில் தக்கவரும் பொருத்தமானவருமான ஒருவரை நியமிக்கும். அவ்வாறான ஆண்வாரிசுகளில்லாதவிடத்து ஆண்வழிச் சந்ததியாரில் ஒருவரை அல்லது ஆண்வழிச் சந்ததிகளின் வாரிசுகளில் ஒருவரை நீதிமன்றம் நியமிக்க வேண்டும். அறங்காவலர் சபையின் மற்றய ஐந்து உறுப்பினர்களும் இதன்கீழ் விதிக்கப்பட்டபடி கோவிலின் வாக்காளர் மகாசபையினால் தெரிவு செய்யப்பட வேண்டும்.

3. தீயநடத்தை, கடமையை உதாசீனம் செய்தல் அல்லது அறங்காவலர் ஒருவரை விலக்குவதற்குச் சட்டத்தால் நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் வேறுகாரணத்தின் பொருட்டுத் தெரிவு செய்யப்பட்ட அறங்காவலர் ஒருவரையோ, அல்லது பரம்பரை அறங்காவலர் ஒருவரையோ விலக்குவதற்கு நீதிமன்றத்திற்கு எப்போதும் உரிமை உண்டு.

4. முதலாவது அறங்காவலர்சபையாக இவ் வழக்கின் வழக்காளிகளும் நான்கு பரம்பரை அறங்காவலர்களும் அமைவர்.

5. முதலாவது அறங்காவலர்சபை, இதன்கீழ் குறிக்கப்பட்ட தகுதிகளின் பிரகாரம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளத் தகுதியுள்ளவர்களது பெயர்களைப் பதிவுசெய்து ஒருவாக்காளர் இடாப்பைத் தயாரித்தல் வேண்டும். 1949ம் ஆண்டு யூன் மாதம் 30ம் தேதி அல்லது அதற்கு முன்னர் கோவிலில் துலாம்பாரமான ஒரு இடத்தில் அத்தகைய இடாப்பு காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். தகுதியிருந்தும் தமது பெயர் பதிவு செய்யப்படாததால் அல்லது தகுதியில்லாத ஒருவரது பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பதால் பாதிப்புறும் ஒருவர், விடயத்துக்கேற்ப ஒரு பெயரைச் சேர்க்கும்படி அல்லது நீக்கும்படி செயலாளருக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதகாலத்துள் விண்ணப்பிக்கமுடியும். அறங்காவலர்சபை இத்தகைய மனுக்களை ஆராய்ந்து இடாப்பை மீளாய்வு செய்து மீள அமைக்கப்பட்ட இடாப்பைக் கோவிலில் துலாம்பரமான ஒரு இடத்தில் 31. 8. 49 அன்று அல்லது அதற்கு முன்பு காட்சிக்கு வைத்தல் வேண்டும். இந்த இடாப்பில் அறங்காவலர்சபைச் செயலாளரின் ஒப்பம் இருத்தல் வேண்டும். இவ்வாக்காளர் இடாப்பு ஆண்டு தோறும் யூலாய், ஓகஸ்டு மாதங்களில் மீளமைக்கப்படுதல் வேண்டும்.

6. பின்வரும் ஆட்கள் தமது பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்துகொள்ள உரிமையுடையவர்கள் ஆவர். இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்களாய், 21 வயதிற்கு மேற்பட்டவர்களாய், யாழ்ப்பாணக் குடாநாட்டில் வழமையாக வதிபவர்களாய் உள்ளவர்களும் இந்த அற நிலையத்தின் வேலைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் அக்கறையுள்ளவர்களும் ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட குற்றமெதற்கும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படாதவராயுள்ளவர்களும் ஆகிய ஆட்கள் 1949 யூன் மாதம் 30ம் தேதிக்கு முன்னர் தலைக்குப் பத்து ரூபா வருடாந்தச் சந்தாவைச் செலுத்துமிடத்து உறுப்பினராகலாம்.

7. முதலாவது அறங்காவலர்சபை 30. 9. 1949 வரை பதவியிலிருக்கும். 1949 செப்டெம்பர் மாதத்தில் அறங்காவலர் சபையின் ஒரு கூட்டம் நடாத்தப்படவேண்டும். அக் கூட்டத்தில் திருவுளச்சீட்டு இழுத்து வழக்காளிகளில் எவர் பதவி விலகுவதெனத் தீர்மானிக்கப்படும். அவ்விதம் தீர்மானிக்கப்படும் நபர் 1949 செப்டெம்பர் 30ம் தேதி தொடக்கம் பதவி விலகியவராதல் வேண்டும். அத்துடன் அவர் அதன்பின் மூன்று வருடங்களுக்குப் பதவிவகிக்கும் உரிமையற்றவராவர். அறங்காவலர் சபையின் எஞ்சிய உறுப்பினர்களும், வாக்காளர் இடாப்பிலுள்ளவர்களது கூட்டமொன்றில் அவர்கள் தமக்குள் தெரிவுசெய்யும் புதிய அறங்காவலர் ஒருவரும் சேர்ந்து இரண்டாவது அறங்காவலர் சபையாக அமைவர். குறித்த கூட்டம் அறங்காவலர் சபையின் எஞ்சிய உறுப்பினர்களால் 1949 செப்டெம்பர் மாதத்தில் கூட்டப்பட வேண்டும்.

8. இதேவிதம், 1950 ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திலும், அறங்காவலர் சபையின் கூட்டமொன்று நடத்தப்பட்டு, எஞ்சியுள்ள வழக்காளிகளில் யார் பதவி விலகவேண்டுமென்பது திருவுளச் சீட்டிழுப்பு மூலம் தீர்மானிக்கப்படும். அவரது இடத்துக்கு மேற்கூறிய விதமாகப் புதிய ஒரு அறங்காவலர் தெரிவு செய்யப்பட வேண்டும். வருடா வருடம் இதே நடைமுறை திரும்பத்திரும்ப எல்லா வழக்காளிகளும் பதவி விலகும்வரை செயற்படுத்தப்படும். அதன்பின்பு ஆண்டு தோறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர் மாதத்தில் ஆகக் கூடிய காலம் பதவி வகித்த அறங்காவலர் பதவி விலக வேண்டும். அவரின் இடத்துக்கு, வாக்காளர் இடாப்பில் பெயர் பதியப்பட்டுள்ளவர்களின் கூட்டமொன்றில் அவர்கள் தம்முள்ளிருந்து அறங்காவலர் ஒருவரை செப்டெம்பர் மாதத்தில் தெரிவு செய்வர். பதவி விலகும் எந்த ஒரு அறங்காவலரும் மூன்று வருட காலம் கழியுமுன்பு மீண்டும் தெரிவு செய்யப்பட உரிமையற்றவர்களாவர்.

9. அறங்காவலர் சபை குறைந்தது ஆறு மாதத்திற்கு ஒரு தடவையாவது கோவில் வளவில் கருமச் செயற்பாட்டுக்காகக் கூடுதல் வேண்டும். அவர்கள் வருடாவருடம் தம்முள் ஒரு தவிசாளரையும், பொருளாளரையும், செயலாளரையும் தெரிவு செய்தல் வேண்டும்.

10. சபையின் கூட்டங்களில் அறங்காவலர் சபைத் தலைவர் தலைமை தாங்குதல் வேண்டும். சுகவீனம் அல்லது வேறு தக்க காரணங்களால் தலைவர் வருவதற்கு முடியாவிட்டால் அந்தக் கூட்டத்திற்கு மாத்திரம் தலைமை வகிப்பதற்கு அறங்காவலர்களுள் ஒருவரைக் கூட்டத்திலுள்ளோர் தெரிவு செய்தல் வேண்டும்.

11. செயலாளர், அறங்காவலர்சபை நடத்தும் கூட்டங்கள் அனைத்தினதும், கூட்டக் குறிப்புக்களை வைத்திருப்பதோடு கோவிலின் எல்லா அலுவல்களையும் நிர்வகிப்பதற்கான சபையின் எல்லா அறிக்கைகள் தீர்மானங்கள், விதிகள் ஒழுங்குவிதிகளுக்குப் பொறுப்பாயிருக்கவும், எல்லாக்கடிதத் தொடர்புகளுக்கும் பொறுப்பாயிருக்கவும் வாக்காளர் இடாப்புக்குப் பொறுப்பாயிருக்கவும் வேண்டும்,

12. பொருளாளர் எல்லாக் கணக்குகளுக்கும் பொறுப்பாய் இருப்பதுடன், நம்பிக்கைச் சொத்துக்குரியதான எல்லா நன்கொடைகள்; காணிக்கைகள், பணத் தொகைகளை ஏற்றுக் கொண்டு அவற்றைப் பாதுகாத்து வைத்திருத்தற்கும் பொறுப்பாவர், தமது குருத்துவக் கடமைகளைச் செய்யுங்கால் குருமார்கள், வழிபடுவோரிடமிருந்து பாரம் பரியமாகப் பெறும் பொருட்களைப் பெறும் விடயத்தில் பொருளாளர் தலையிடலாகாது.

13. நவீன கணக்கு முறைகளுக்கேற்ப ஒழுங்கான கணக்குகளை அறங்காவலர் சபை பொருளாளர் ஊடாக வைத்திருத்தல் வேண்டும். வருடாந்தம் புதிய அறங்காவலரைத் தெரிவு செய்வதற்கென வாக்காளர் இடாப்பிலுள்ளவர்களின் கூட்டம் நடத்தப்படுவதற்கு முன்னதாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியில் வெளியாகும் உள்ளூர்ச் செய்திப் பத்திரிகையொன்றில் முறைப்படி கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்று பிரசுரிக்கப்பட வேண்டும்.

14. அறங்காவலர் சபை இலங்கை வங்கியில் அல்லது யாழ்ப்பாணத்தில் தொழிற்படும் வேறேதும் வங்கியில் ஒரு கணக்கைத் திறந்து தமது கைக்கு வரும் எல்லாப் பணத் தொகைகளையும் அதில் வைப்பில் இடுதல் வேண்டும். ஆயினும் பொருளாளர், எவ்வேளையிலும் ரூ. 100க்கு மேற்படாத தொகையையும், திருவிழா நாட்களில் ரூ. 500க்கு மேற்படாத தொகையையும் தமது கைவசம் வைத்திருக்கலாம்.

15. இந்த அறநிலையத்தின் நிர்வாகத்துக்கு அவசியப்படும் எல்லா ஊழியர்களையும் வேலையாட்களையும் வேலைக்கமர்த்தவும் நியமிக்கவும் இடைநிறுத்தவும், வேலைநீக்கவும் பதில் நியமனங்கள் செய்யவும் அறங்காவலர் சபைக்கு அதிகாரமுண்டு. அத்தகைய வேலையாட்களும் ஊழியர்களும் அறங்காவலர் சபையால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படும் அத்தகைய சம்பளங்கள் வேதனங்களுக்குரியவராவர்.

16. அறங்காவலர் சபை இவ் அறநிலையத்தின் எல்லா அலுவல்களையும் கட்டுப்படுத்தி நிர்வகிப்பதற்குரிய நடைமுறை விதிகளை ஆக்கலாம். அத்தகைய விதிகள் முறையான குறிப்புப் புத்தகம் ஒன்றில் எழுதப்பட்டு அறங்காவலர் சபைச் செயலாளர் வசம் இருப்பதுடன் பகல் வேளைகளில் இந்துக்களான பொதுமக்கள் எந்நேரத்திலும் பார்வையிடப் பெறத்தக்கனவாக இருத்தல் வேண்டும்.

183631

17. அறங்காவலர் சபைக் கூட்டமெதிலும் பெரும்பான்மையோர் எடுக்கும் முடிவே அறங்காவலர் சபையின் முடிவாகக் கொள்ளப்படுதல் வேண்டும். அம்முடிவுகள் யாவும் செயலாளரால் குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைக்கப்பட வேண்டும்.

18. பின்வருவனவற்றுக்கு முறையானவையும் உண்மையானவையுமான இருப்புப் பொருட் பட்டியல்களை அறங்காவலர்கள் பேணிவருதல் வேண்டும்.

(அ) எல்லாத் தங்க, வெள்ளி ஏனைய காணிக்கைகளும் திருவாபரணங்கள் மற்றும் அலங்காரப் பொருட்கள் முதலியவையும் அவற்றின் சரியானவையும் உண்மையானவையுமான பெறுமதிகளுடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) முறையான விஸ்தீரணம், எல்லைகள், அமைவிடம் முதலிய வற்றுடன் எல்லாக் கோவிலுக்குரிய காணிகளும்.

(இ) கோவிலுக்குச் சேர்ந்த சகல அசைவுள்ள சொத்துக்களும், உதாரணம் : தேர்கள், வாகனங்கள், வெள்ளியிலும், செம் பிலும், பித்தளையிலுமான பாத்திரங்கள் தளபாடங்களும் மற்றும் சகல பொருட்களும்,

19. அறங்காவலர்கள் தம்மால் பூசைக்காகவும் மற்றும் கிரியை களை நிறைவேற்றும் பொருட்டும் பெறப்படுகின்ற அரிசி, நெல், மற்றும் பல சரக்குச் சாமான்களின் இருப்புப் புத்தகம் ஒன்றை வைத்திருக்க வேண்டும். அத்துடன் அவை குறித்த கோவிலில் எவ்விதம் செலவா கின்றன என்பதற்கான கணக்கையும் காட்டவேண்டும். அத்தகைய இருப்புப் பொருட்கள் யாவும் கோவில் வளவில் ஒரு களஞ்சிய அறையுள் வைக்கப்படுதல் வேண்டும். பொதுசனங்களிடமிருந்து பெறப்பட்டும் விலைக்கு வாங்கப்பட்டும் கோவில் தேவைக்காகச் செலவு செய்யப்படும் பொருட்களின் பெறுமதிகளுக்குப் பேரேட்டில் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

20. அறங்காவலர்கள் கோவிற் சொத்துக்கள் யாவற்றையும் தமது பொறுப்பிலும் ஆட்சியிலும் வைத்திருப்பதுடன் அவற்றின் பாதுகாப் பிற்கும் கோவிலில் அவை உபயோகிக்கப்படுவதற்கும் பொறுப்பாயிருத் தல் வேண்டும்.

21. பூநகரி, துணுக்காய், வன்னி மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்வேறு கிராமங்களிலுள்ள இந்துக்களால் நன்கொடை வழங் கப்படும் நெல், தானியங்கள் மற்றும் விளைபொருட்களைச் சேகரிக்கும் உரிமையை அறங்காவலர்கள் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய லாம். அவ்வாறான விற்பனை மூலம் கிடைத்த தொகைகள் புத்தகங்க ளில் கணக்கு வைக்கப்படல் வேண்டும்.

22. மிருகங்கள், பறவைகள், செடிகள் முதலியனவாகப் பெறப் படும் எல்லாக் காணிக்கைகளையும் அறங்காவலர்கள் ஏற்றுக் கோவில் வளவில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யலாம். இவ் விற் பனை மூலம் பெறப்படும் வருவாய் புத்தகத்தில் கணக்கு வைக்கப்பட வேண்டும்.

23. திருவிழாக் காலங்களில் நாவிதர்கள் முடிவெட்டுதற்கும், தேனீர்க்கடைகள், சோற்றுக் கடைகள் நடத்துவதற்கும், பழங்கள், சில்லறைப் பொருட்களை விற்பனை செய்வதற்கும், கோவில் முற்றத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ள காணிகளை ஆட்சிப்படுத்தும் அல்லது உபயோகிக்கும் உரிமையைப் பகிரங்க ஏலத்தில் அறங்காவலர்கள் விற்பனை செய்தல் வேண்டும். அத்துடன், அவ்விற்பனவின் மூலம் பெறும் வருவாய்க்குக் கணக்கு வைத்தலும் வேண்டும்.

24. அறங்காவலர்கள், நொத்தாரிஸ் ஒருவரால் அத்தாட்சிப் படுத்தப்படும் சாதனமொன்றின் மூலம், மூன்று வருடங்களுக் குட்பட்ட காலத்துக்குக் கோவிற்காணிகளைக் குத்தகை கொடுத்தோ, அல்லது நல்ல விவசாயிகளை வேலைக்கமர்த்திக் காணிகளைச் செய்கை பண்ணியோ குத்தகைக் கூலியை, அல்லது வருவாயை எல்லாக் காணிகளிலிருந்தும் அறவாக்குவதோடு காணிகளை நல்ல நிலையிலும் தமது ஆட்சியிலும் வைத்திருப்பதோடு கோவிலுக்குரிய காணிகளைப் பேணவும், நல்லநிலையில் வைத்திருக்கவும் செலவழிக்கப்பட்ட அவசியமான செலவுகளினதும் அவற்றிலிருந்து பெறப்பட்ட வருவாய்களினதும் கணக்கு ஒன்றையும் வைத்திருக்க வேண்டும்.

25. அறங்காவலர்சபை தீர்மானமூலம் தம்முள் ஒருவரைச் சபை சார்பாக ஆவணங்களை நிறைவேற்றுவதற்கு நியமித்து, எல்லா அறங்காவலர்கள் சார்பாகவும் ஒரு அறங்காவலரால் வலுவுடையதாக நிறைவேற்றத்தக்க எந்த ஆவ்ணத்தையும், நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யலாம்:

26. அறங்காவலர்கள், தம்மால் செய்யப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளுக்கும் உறுதிச்சீட்டுகள் தயாரித்துப் பற்றுச் சீட்டுகள் பெற்றுக் கணக்காய்வு நோக்கத்திற்காக அவற்றைப் பாதுகாத்தல் வேண்டும். தம்மால் பெறப்பட்டவற்றுக்குப் பணமாயினும் சரி, பொருளாயினும் சரி அவர்கள் பற்றுச்சீட்டு வழங்க வேண்டும். அப்பற்றுச்சீட்டுகள் அடிக்கட்டையுடன் கூடிய எந்திரத்தால் இலக்கம் பொறிக்கப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகங்களிலிருந்து கொடுபடவேண்டும்.

27. வழிபடுவோரால் தெய்வ் உருவுக்கென விசேடமாக கொடுக்கப்படும் நன்கொடைகள் கொடுப்பனவுகள் யாவும், பணமாயினும் சரி, பொருட்கள், திருவாபரணங்கள், அலங்காரப் பொருட்கள், பட்டுக் குடைகள், மற்றும் அன்பளிப்புகளாயினும் சரி, அறங்காவலர்களால் பெறப்பட்டு அவர்களால் முறையான கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான கொடுப்பனவுகளை அல்லது நன்கொடைகளை அளிப்போருக்கு அவற்றிற்குரிய பற்றுச் சீட்டுக்களைப் பொருளாளர் வழங்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. தெய்வஉருவங்களுக்கு அல்லது கோவிலில் உபயோகிப்பதற்கு அவசியப்படும் எல்லாத் திருவாபரணங்கள், அலங்காரப் பொருட்கள், மற்றும் சகல பாத்திரங்களும் பொருட்களும் கோவில் வளவில் ஒரு பாதுகாப்பான அறையில் வைக்கப்பட்டு கோவிலில் உபயோகிப்பதற்குக் குருமாரிடம் அல்லது ஊழியரிடம் கொடுக்கப்படுதல் வேண்டும். அவற்றின் உபயோகத்தின்பின்பு பொருளாளரால் அவை மீளப் பெறப்பட்டுப் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட வேண்டும்.

29. அறங்காவலர் மாதாந்தம் கோவிலின் வருமானம், செலவினம் சம்பந்தப்பட்ட கூற்று ஒன்றைத் தயார் செய்து அதன் சுருக்கப் பிரதி ஒன்றை ஸ்தம்ப மண்டபத்தில் விளம்பரப் பலகையொன்றில் கோவிலின் வழிபடுவோர்கள் அல்லது இந்துக்களாகவுள்ள எவரும் பார்வையிடத் தக்கமுறையில் காட்சிக்கு வைக்க வேண்டும்.

30. ஒவ்வோராண்டும் யூலை 30ம் தேதி வரையுள்ள கணக்குகள் யாவற்றையும் கணக்காய்வு செய்வித்து அவ்வவ்வாண்டின் ஆகஸ்டு மாத 31ம் தேதி அல்லது அதன் முன்னர், கோவில் விளம்பரப் பலகையில் அவ்வாண்டில் அறங்காவலர்களால் பெறப்பட்ட சகல வருமானங்களையும் அவர்களால் செய்யப்பட்ட எல்லாச் செலவினங்களையும் வங்கியிலிடப்பட்ட மீதித் தொகையையும் காட்டும் முழுமையான கூற்று ஒன்றைக் காட்சிக்கு வைத்தல் வேண்டும். இவ்வாறான மாதாந்த, வருடாந்தக் கணக்கு கூற்றுக்கள் இரண்டு மாதங்கள் விளம்பரப் பலகையில் காட்சிக்கு விடப்படுவதைக் கவனித்தல் அறங்காவலர் சபையாரின் பொறுப்பாகும்.

31. அறங்காவலர்கள், கோவிலின் உபயோகத்துக்காக அறங்காவலர் சபைக் கூட்டத் தீர்மானத்தின்படி, வங்கியிலிருந்து பணம் மீளப்பெற உரிமையுடையவர்களாவர். எல்லாக் காசோலைகளும் தலைவராலும் அத்துடன் பொருளாளர் அல்லது செயலாளராலும் ஒப்பமிடப்படவேண்டும்.

32. ஒரு அறங்காவலர் இறந்தால் அல்லது சுயவிருப்பின் பேரில் பதவி துறந்தால் அல்லது வேறு வகையில் அறங்காவலருக்குரிய தமது கடமைகளை ஆற்றமுடியாதவராகினல், அறங்காவலர் சபை. வாக்காளர் பட்டியலில் பெயர் பதியப்பட்டுள்ளவர்களிலிருந்து ஒருவரை அவரின் இடத்துக்குத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அறங்காவலர் சபையின் எவராயினும் ஒரு உறுப்பினருக்கெதிராக, அவ்வுறுப்பினர் அறங்காவலர் ஒருவருடைய அந்தஸ்த்துக்கொவ்வாத நடத்தையிலீடுபட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என யாராயினும் ஒரு ஆள் முறைப்பாடு செய்யுமிடத்து முறையான விசாரணையின் பின்னர் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவுபெற்ற தீர்மானத்தினுல் சம்பந்தப்பட்ட உறுப்பினரைச் சபையிலிருந்து நீக்க அறங்காவலர் சபைக்கு அதிகாரமுண்டு. அவ்விதம் நீக்கப்பட்ட அறங் காவலரின் இடத்துக்கு. வாக்காளர் பட்டியலில் பெயர் பதியப்பட்ட வர்களுள் இருந்து ஒருவரைச் சபை தெரிவுசெய்து கொள்ளலாம். ஆயினும், அவ்வித முறைப்பாடு யாருக்கெதிராகச் செய்யப்பட்டதோ அவர் பரம்பரை அறங்காவலர்களுள் ஒருவராக இருக்குமிடத்து, அறங் காவலர் சபை அவரை நீக்காமல் அவரது நடத்தை பற்றி நீதிமன்றத் துக்கு அறிவிக்க வேண்டும். நீதிமன்றத்துக்கு மட்டுமே, சமாதான உடன்படிக்கையின் 5 ம் பிரிவின் பிரகாரம், அவரை வெளியேற்றும் தனி உரிமை உண்டு.

*33.* வாக்காளர் பதிவேட்டில் அல்லது பட்டியலில் பெயர் பதி யப்பட்டுள்ள வாக்காளர் மகாசபையின் எவராயினும் பத்து உறுப்பினர் கள் குறித்த கோவிலின் அலுவல்கள் அல்லது நிர்வாகம் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயத்தை ஆராய்ந்து முடிவு செய்வதற்காக அறங்காவலர் சபைக் கூட்டமொன்றைக் கூட்டுமாறு எழுத்தில் வேண்டுகோள் விடுத் தால் அவ்வறிவித்தல் கிடைத்த பத்து நாட்களுள் ஒரு கூட்டத்தைக் கூட்டுவது செயலாளரது கடமையாகும்.

நாகேஸ்வரி ஆலயத்தில் சிறந்த கோபுரமும் இருநிலை விமானமும் கட்டப்பெற்றுள்ளன. ஆனால் அம்பாள் நெடுங்காலமாகப் பழையதொரு தேரிலேயே திருவிழாவின்போது பக்தர்களுக்குக் காட்சியளித்து வந்தாள். அந்தத்தேர் இழுபடும்பொழுதே ஈடாடத் தொடங்கியதைக் கண்டு பக்தர் பலர் கவன்றனர். இந்தக் கவலை தேர்த் திருவிழாவுக்குச் சென்றிருந்த பலரிடம் தோன்றியது. திருவருள் கூட்டி வைக்க, பக்தர் பலர் ஒன்று கூடி அம்பாளுக்குப் புதியதொரு தேர் அமைத்து இழுக்கும் வரை உறங்க மாட்டோம் எனக் கங்கணம் கட்டினர். வடமாகாண அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா அவர்களைத் தலைவராகக் கொண்டு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேர்த் திருப்பணிச்சபை ஒன்று அமைக்கப்படலாயிற்று. இச் சபைக்கு ஊர்காவற்றுறை காரியாதிகாரி திரு. செ. சிவஞானம், திரு. ஆ. கந்தையா ஆகியோர் தனாதிகாரிகளாகவும், திரு. வே. சுந்தரம் பிள்ளை, திரு. வே. செல்வநாயகம், திரு. கா. ஆறுமுகம் ஆகியோர் செயலாளராகவும் கடமையாற்றினர். இத்திருப்பணியில் ஆரம்பத்திலிருந்து அருந் தொண்டாற்றிய விவேகானந்தா அச்சக அதிபர் திரு. வே. சுந்தரம்பிள்ளை அவர்கள் 27-3-1957-இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். திருப்பெருந் திரு. குன்றக்குடி அடிகளாரின் ஆலோசனையின் பேரில் நாகர்கோவில் திரு. என். குமாரசுவாமி ஆசாரியார் அவர்கள் நயினாதீவு நாகேஸ்வரியின் திருத் தேர்ப்பணியைக் கையேற்றார்கள். திரு. குமாரசுவாமி ஆசாரியார் தேர்ச்சி பெற்ற நுண்டொழில் வல்லுனர் சிலரையும் தம்முடன் கூட்டி வந்து தேர்த் திருப்பணிச் சபைக் காரியதரிசியாகவிருந்த திரு. வே. சுந்தரம்பிள்ளையவர்களுடைய வளவில் தேர்த்திருப்பணியை ஆரம்பித்தார்கள். முதன் முதலில் அவர்கள் மூஷிக வாகன விக்கினேஸ்வரருடைய திருவுருவத்தைப் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கினார்கள். பின்னர் இவ்வாண்டில் நாகபூஷணி அம்பாளைப் புதிய தேரில் உலா வரச் செய்ய வேண்டுமென்ற ஆவலுடன் அல்லும் பகலும் உழைத்து வந்தார்கள். அவர்களுடைய பணி அம்பாள் அருளினால் முட்டின்றி நிறைவேறிவிட்டது. இரதோற்சவம் சிருட்டி முதலிய பஞ்ச கிருத்தியங்களுள் சங்காரத்தைக் குறிக்குமென ஆகமங்கள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்வகைத் தேர் :**

தேர்கள் பல வகைப்பட்டன வாயினும் அவற்றின் உருவ அமைப் பில் அதிக உருவ வேற்றுமை காணப் படவில்லை.

" தேர்கள் : மரத்தேர், வெள் ளித்தேர், தங்கத்தேர் முதலியவை உண்டு. தேர்களில் மிகச் சிறந்த சிற்பவேலை செய்து பதிக்கப் பெறும் உருளை நான்கு முதல் பத்து உருளைவரை இருப்பது உண்டு. திரு வாரூர்த் தேர் மிகப் புகழ் பெற்றது. ஸ்ரீ வில்லிபுத்தூர்த் தேர் மிகப் பெரியதென்பர். தேர் ஓட்டுதல் ஒரு சிறந்த கலை, எல்லாராலும் முடி யாது. புறப்பட்டபிறகு நிலைக்குச் சேர்ப்பித்தல் மிகக் கடினம். ஆயிரக் கணக்கான மக்கள் அதனை இழுக்க வேண்டும். தெப்பத்தேர், நீர்மேல் மிதக்குந்தேர். இது இக் காலத்தில் மின்சார விளக்குகளால் அலங்கரிக் கப்பட்டு வெகு சிறப்பாகச் செய்யப் படுகிறது. வெள்ளித் தேர்கள் திரு வண்ணமலை, பழனி முதலிய இடங் களில் உண்டு. வாகனம், தேர் இவை களைச் செய்யுந் தொழிலும் ஒரு சிறந்த தொழிலாகும்." என்று கூறு கிறார்கள் இராவ்பாதூர் சி. எம். இராமச்சந்திரச் செட்டியார் அவர் கள்.

தேர்களைப் பெரும்பாலும் தாமரை மொட்டு வடிவிலேயே அமைத்தனர் என ஊகிக்க இட முண்டு. மேலும் கொடுஞ்சி என்ற ஓர் உறுப்பும் தேர்களிலே அமைக் கப் பெற்றிருந்தமை நோக்கற்பா லது.

**சித்திரத்தேரின் வெள்ளோட்டமும் மலர் வெளியீடும்**

நவமாயமைக்கப் பெற்ற சித்தி ரத்தேரின் வெள்ளோட்ட வைபவம் 8-7-57-ல் நயினாதீவில் நடைபெறும் எனத் தேர்த்திருப்பணிச் சபை அறி வித்தது. அங்கே யாத்திரை செய் வதற்கேற்ற போக்குவரவு வசதிகளை யும் உணவு வசதிகளையும் திருப்பணிச் சபை செய்து வைத்தது. பெருந் தொகைப் பணச் செலவிற் புதிய தொரு சித்திரத் தேர்த் திருப் பணியை நிறைவேற்றிய தேர்த் திருப்பணிச் சபையினர் தேரின் வெள் ளோட்ட வைபவத்தின் போது சிறந்த மலர் ஒன்றினை வெளியிடக் கருதி அதனை எழுதித் தருமாறு என் னைக் கேட்டுக் கொண்டனர். இரு வாரங்கட்கிடையே எழுதித் தர வேண்டும் என்றனர். இதனைக் குறித்த தினத்தில் வெளியிடுவதில் திரு. வே. கிருஷ்ணபிள்ளையும், திரு. வே. கந்தசாமியும், திரு. வே. செல்வ நாயகமும் பெருமுயற்சி செய்தனர். ஒரு மாத காலத்துள் இதன் இரண் டாம் பதிப்பு வெளிவரலாயிற்று. திருவாரூர்த் தேரழகும் திருவிடை மருதூர் வீதியழகும் என்ற முது மொழியொன்றுண்டு. ஆனால் சென்ற ஆடி மாதம் தொடக்கம் திரு நயி னைத் தேரழகும், திருவிடைமருதூர் வீதியழகும் என்ற மொழியே பலர் வாயிலும் வழங்குகின்றது. ஈழநாட் டிலே இத்தகைய சிறப்பு வாய்ந்த சித்திரத்தேர் இதுவரை அமைக்கப் படவில்லை என்றுதான் கூறவேண் டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாட்டில்

"நம்முடைய ஈழநாட்டிலும் பழைய தேர்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட சித்திரங்கள் நிறைந்த மரத் தேர்கள் பல காணப்படுகின்றன. மாவிட்ட புரம், பருளாய், சுதுமலை முதலிய இடங்களிலுள்ள தேர்களின் சித்தி ரங்கள் ஒத்த அழகும் அமைப்பும் பொருந்தியனவாய் விளங்குகின் றன." மாதகல் நுணசை முருக மூர்த்தி கோயிலில் உள்ள தேரும், பருளாயிலுள்ள தேரும் ஒரே காலத் தன என்றும் அவை சண்முகசேகர முதலியார் என்ற பிரதானி ஒருவ ராற் செய்யப்பட்டனவென்றும் என் நண்பர் ஒருவர் குறிப்பிட்டார். நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மருதடி விநாயகர் கோயில் முதலிய ஆலயங்களிலுஞ் சித்திர வேலைப்பா டமைந்த தேர்கள் உண்டு.

இத்தகைய கீர்த்திவாய்ந்த தேர் வரிசையில் நயினாதீவு நர்கபூஷணி அம்மன் கோயில் தேர் முக்கிய இடம் வகிக்கும் என்பதற்கையமில்லை. இந்த அழகிய தேரைப் பார்க்கவே பலர் நயினாதீவுக்கு யாத்திரை செய்வர் என்று அவுஸ்திரேலிய மரவேலை நிபுணர் திரு. ஹேப்ட் குறிப்பிட்டுள் ளார். இந்தத் தேர் வேலை நடை பெற்றுக் கொண்டிருக்கும் பொழுது கண்டு மகிழ்ந்த இவ்வறிஞர் இத் தொழிலாளரை மனமாரப் புகழ்ந் துள்ளார். அவர் அளித்த நற்சாட்சிப் பத்திரம் இது.

**தமிழாக்கம்**

| | |
|---|---|
| ஓ. டி. ஹேப்ட் | 109-ஆம் நம்பர் அறை |
| (கொழும்புத் திட்ட நிபுணர்) | ஹோல்பேஸ் ஹோட்டல் |
| கிராமாபிவிருத்தி, குடிசைக் | |
| கைத்தொழிற் பகுதி | |
| கொழும்பு-7 | |

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் தேர் நிர்மாண வேலைத் தலத்திற்கு விஜயம் செய்தபோது, அங்கு வேலை செய்யும் கலைஞர்களின் திறமையை யும், மிக நுட்பமான பாகங்களை எல்லாம் மிகவும் இலகுவில் அவர் கள் தயாரிக்கும் விதத்தையுங் கண்டு மிகவும் வியந்தேன். அவர்களின் வேலையைப் பார்த்துக் கொண்டிருப் பதே ஒரு படிப்பாகும். பூர்த்தியான தேரைப் பார்க்க முடியுமானால் நான் மிகவும் ஆனந்தமடைவேன்.

நான் பல தேசங்களைச் சுற்றி வந்திருக்கிறேன். ஆனால் இதுபோன்ற கலையில், நான் இங்கு கண்டதுடன் ஒப்பிடத்தக்க பெருந்திறனை வேறெங் கும் கண்டதில்லை. யாத்திரீக வசதி நிலையம் இவ் வேலைக்கு மிகவும் அதிக விளம்பரத்தை நல்க வேண்டும் என் றும் அதன் மூலம் வெளிநாட்டிலி ருந்து வருவோர்கள் நுட்ப மிகுந்த இத்தேர் வேலையைப் பார்க்கச் சந் தர்ப்பம் அளிக்க வேண்டுமென்றும் ஆலோசனை கூற விரும்புகின்றேன்.

ஓ. டி. ஹேப்ட்
ஆஸ்திரேலிய நிபுணர்,
(கிராமாபிருத்தியும், குடிசைக் கைத்தொ ழிலும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேரின் உறுப்புக்கள்**

தேரின் உறுப்புக்களாகிய பூதப்பார், கன்னிலப்பார், முதலாவது நிலம், கபோதப்பார், ஆணைத்தொட்டிப்பார், அச்சப்பார், அச்சப்பூத்தலைப்பார், பூத்தலைப்பார், இரண்டாவது நிலம், சிம்மப்பூத்தலைப்பார், மூன்ருவது நிலம், நாகத்தலைப்பார், விஸ்தாரப்பார், தேவாசனம், சிம்மாசனம், கம்பங்கள், பண்டிகை, கர்ணக்குடம், மணிமுடி முதலியன சிற்ப சாத்திர முறைப்படி செவ்வனே அமைக்கப் பெற்றுள்ளன. நயினுதீவுக் கோயில்களைப்பற்றிய ஐதீகங்கள் சரித்திரத் தொடர்புள்ள சம்பவங்கள், கிருஷ்ண லீலைகள், அட்டமங்களம், அட்டதிக்குப் பாலக சக்திகள் அட்டலக்குமிகள் அம்பாளின் உருவ பேதங்களாகிய உருத்திர சக்திகள் பதினென்றும் அவர்களுக்குரிய வாகனம், ஆயுதம் முதலியவற்றுடன் சிற்ப முறைக்கமையத் திறம்படப் பொறிக்கப்பெற்றுள்ளன. நாகம் ஒன்று புளியந்தீவில் இருந்து பூப் பறித்துக் கொண்டு வரும் வழியில் கருடனுல் தாக்கப்பட்ட வரலாறு மிக அற்புதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

**சக்திக்குரிய தேர் : வழிகாட்டி**

அல்லியரசாணி ஆட்சி செய்த பொழுது அவளுக்கு மந்திரி, பிரதானி பணியாளர், எல்லாரும் பெண்களாகவே இருந்தார்களாம். ஆண்கள் அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவும் முடியாதாம். அதுபோலவே உலக மாதாவாகிய நாகேஸ்வரி எழுந்தருளி வீதிவலம் வருவதற்குரிய சித்திரத் தேரிலும் சக்திகளுக்கே முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே சுவாமி எழுந்தருளும் தேருக்கும் தேவி எழுந்தருளும் தேருக்குமுள்ள பிரதான வேற்றுமை இதுவேயாகும் என்பதை மனத்திற் பதித்துக்கொள்ளல் வேண்டும்.

இநதத் தேரில் நான்கு அழகிய குதிரைகள் இருக்கின்றன அல்லவா? நான்கு வேதங்களாகிய குதிரைகளை ஓட்டுபவள் பிரமாணி (பிரமாவின் மனைவி) எனும் சக்தியாவள். இந்தக் குதிரைகள் இருக்கிற பக்கம் கிழக்கு முகமாக அல்லது தேரின் கிழக்குப் பக்கமாகக் கருதப்படும். எனவே குதிரைகள் உள்ள பக்கத்தைக் கிழக்குப் பக்கமாகக் கருதினுல், முதலில் அந்தப் பக்கத்தைத்தானே பார்க்க வேண்டும். நீங்கள் தேரிலுள்ள சித்திரங்களையெல்லாம் விக்கினமின்றிப் பார்த்து முடிக்க விநாயகர் துணையை நாடத்தானே வேண்டும். எனவே ஆகக் கீழேயுள்ள வரிசையில் கிழக்குப் பக்கத்தில் மூஷிக வாகன விக்கினேஸ்வரர் எங்கே இருக்கின்ருர் 'என்று தேடிக் கண்டுபிடியுங்கள். அவருக்கு முன்னுற் கும்பிட்டுக் கொண்டு அலங்காரச் சித்திரங்களைப் பார்க்கத் தொடங்குங்கள்.

**சித்திரங்கள் பார்ப்போம் வாரீர்**
**முதலாவது அடித்தள வரிசை**

கிழக்கு :

(1) மூஷிகவாகன விக்கினேஸ்வரர்
(2) கம்பாநதி
(3) பாலசுப்பிரமணியர்
(4) நாககன்னிகை இருவருடன் நாகபூஷணி அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) துவாரசக்தி
(6) கனிஷ்டா
(7) வல்லிசுந்தரி

இவை தவிர விக்கினேஸ்வரருக்கு முன்

(அ) வேறு ஆயுதந் தாங்கிய நாக பூஷணி அம்மன்
(ஆ) துவாரசக்தி
(இ) இராஜராசேஸ்வரி
(ஈ) வல்லிசுந்தரி ஆகிய இவர்களின் சித்திர வடிவங்களுமுண்டு.

தெற்கு :

(8) தஷிணாமூர்த்தி
(9) சரஸ்வதி
(10) சிவதுர்க்கை
(11) சங்கு பூதம்
(12) தாரை ஊதும் பூதம்
(13) சங்கு பூதம்
(14) பஸ்மாசுர மோகினி
(15) பூத சம்மாரம்
(16) கோபிகா கிருஷ்ண லீலை

மேற்கு :

(17) வல்லி சுந்தரி
(18) சுப்பிரமணியர் (வள்ளி தெய்வானை சகிதம்)
(19) துவாரசக்தி
(20) காளி
(21) பிராம்மிணி
(22) புவனேஸ்வரி
(23) மஹேஸ்வரி
(24) சேஹாஷணி
(25) துவாரசக்தி
(26) நர்த்தன விநாயகர்
(27) வல்லி சுந்தரி

வடக்கு :

(28) துவாரசக்தி
(29) மோஹினி
(30) சாமுண்டி
(31) கத்தி கேடயம் உடைய பூதம்
(32) இரட்டைத்தாரை ஊதும் பூதம்
(33) கத்தி கேடயம் உடைய பூதம்
(34) மனோன்மணி
(35) சரஸ்வதி
(36) துவாரசக்தி

இவை தவிர ஒவ்வொரு மூலைக்கும் 5 உருவங்கள் சேர்ந்த குதிரை நான்கும் இடையிடையே சிம்மக் கட்டைகளும் அமைந்திருக்கின்றன.

**இரண்டாவது வரிசை**

கிழக்கு :

√(1) தேவி திருஞான சம்பந்தருக்குப் பால் ஊட்டுதல்.
(2) கஜகௌரி
(3) கைலாச வாகினி
(4) சிவபாதகிருதயர், சம்பந்தரைப் பார்த்து, "உனக்குப் பால் கொடுத்தது யார்?" என்று கேட்கும் காட்சி
(5) இலக்குமி அனுக்கிரகம்

தென்கிழக்கு :

(6) சோணங்கி முனிவர்
(7) அன்னபூரணி
(8) கோணங்கி முனிவர்

தெற்கு :

(9) நயினைப்பட்டருக்கு அம்பாள் ஐந்தலை நாகமாகக் காட்சியளித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10) புளியந்தீவில் நாகம் பூக் கொய்தல்.

(11) நாகம் வாயில் பூ எடுத்துக் கொண்டு கடல் கடத்தல்.

(12) கடலில் கருடன் பாம்பைக் கொத்த எத்தனித்தல்

(13) வணிகன் கருடனை வேண்டிக் கொள்ளல்.

இந்தக் கதையின் எஞ்சிய பகுதியை வடக்கு வரிசையில் உள்ள சித்திரங்கள் (26-26) மூலம் பார்க்கலாம்.

தென் மேற்கு :

(14) தும்புரு

(15) நயினாப்பட்டர் மறைந்து நின்று நாகம் செய்வதைப் பார்க்கின்றார்.

(16) நாரதர்

மேற்கு :

(17) தேவி அனுமனுக்கு அனுக்கிரகித்தல்

(18) குண்டோதரன் அன்னம் விழுங்கும் காட்சி.

(19) மீனாட்சி திருமணம்

(20) மது, கைடப சம்மார அனுக்கிரகம்.

(21) சரவணப் பொய்கையில் தேவி ஆறு குழந்தைகளையும் ஒன்றாக அணைக்கும் காட்சி

வடமேற்கு :

(22) அகஸ்தியர்

(23) அம்பாளை ஆலமரப் பொந்தில் ஒளித்து வைத்தல்

(24) வசிட்டர்

வடக்கு:

(25) திரவியத்தை ஆலயத்திற் சேர்க்குமாறு கருடன் வணிகனுக்குக் கட்டளையிடுதல். (தெற்குவரிசையிலுள்ள கதையின் தொடர்ச்சி.

(26) வணிகன் திரவியத்தை ஆலயத்திற்குச் செலுத்தல்

(27) போத்துக்கீசர் பவளத் தேரைக் கண்ணுறல்

(28) போர்த்துக்கீசர் ஆலயத்தைத் தாக்குதல்

(29) செப்புத்தேர், பவளத் தேர்களை கடலே தள்ளுதல்

வடகிழக்கு :

(3ບ) வீரமுஷ்டி

(31) அம்பாள் முருகனுக்குச் சக்திவேல் அளித்தல்

(32) கௌதமர்

இவற்றைத் தவிர எட்டுமூலைகளிலும் எட்டு யாளிகள் அமைக்கப் பெற்றுள்ளன.

மூன்றாவது வரிசை

கிழக்கு:

(1) விஸ்வேஸ்வரர்

(2) இந்திராணி

(3) அட்டலக்குமியில் வீரலக்குமி

(4) அட்டமங்கலத்தில் தர்ப்பணம்-கண்ணாடி (1)

(5) பதஞ்சலி முனிவர் வழிபடும் காட்சி

(6) அட்டமங்கலத்தில் பூரண கும்பம் - நிறைகுடம் (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) அட்டலக்குமியில் தனலக்குமி
(8) அக்கினிதேவி
(9) நவசத்தி உற்பவம்

தென்கிழக்கு :

(10) நாகம், கன்னிகை (அலங்காரச்சித்திரம்)
(11) ஆபுத்திரன் பசுவினிடத்துக் கருணை கொள்ளுதல் – இந்தக் கதை மணிமேகலையில் உள்ளது.
(12) ஆபுத்திரன் தவஞ் செய்தல்
(13) ஆபுத்திரன் அட்சயபாத்திரத்துடன் மணிபல்லவத்துக்கு வருதல்
(14) ஆபுத்திரன் அட்சய பாத்திரத்தைக் 'கோமுகிப் பொய்கையில் இடுதல்.
(15) அட்டநாகபந்தம்
(16) நாகம், கன்னிகை (அலங்காரச் சித்திரம்)

தெற்கு:

(17) நவநாரி குஞ்சரம் ! ஒன்பது பெண்கள் ஒன்று சேர்ந்து நிற்குமிடத்து அவர்கள் எல்லாருடைய நிலையையும் ஒருங்கிணைத்துப் பார்த்தால் ஒருயானை தெரிகிறதல்லவா?
(18) யமதேவி
(19) தனலக்குமி
(20) அட்டமங்கலத்தில் ரிஷபம் எருது (3)
(21) அனுமனுக்கு மைநாகமலை உதவி புரிதல்
(22) அட்டமங்கலத்தில் யுக்மசாமரம் – இணைக்கவரி (4)
(23) அட்டலக்குமியில் தானியலக்குமி
(24) நைருதிதேவி
(25) அருச்சுனன் நாககன்னிகையைத் திருமணம் புரிதல்

தென்மேற்கு :

(26) அலங்காரச் சித்திரம்
(27) அட்டநாகபந்தம்
(28) காளி தாண்டவத்தில் மகாவிஷ்ணு புல்லாங்குழல் வாசித்தல்.
(29) காளிதாண்டவம்
(30) பிரமன் தாளம் போடுதல்
(31) நந்தி மிருதங்கம் வாசித்தல்
(32) அலங்காரச் சித்திரம்

மேற்கு:

(33) திருவானைக்காவில் யானையும் சிலந்தியும் அருள்பெற்ற வரலாற்றுச் சித்திரம்
(34) வருணதேவி
(35) அட்டலக்குமிகளில் ஐசுவரியலக்குமி
(36) அட்டமங்கலத்தில் ஸ்வஸ்திகம் (5)
(37) ஐந்தலை நாகம் நாகரத்தினமளித்தல்
(38) அட்டமங்கலத்தில் ஸ்திரீவற்சம் – தாயும் சேயும் (6)
(39) அட்டலக்குமிகளில் ஆதிலக்குமி
(40) வாயுதேவி
(41) நயினைப்பட்டர் அம்பாளைப் பூசித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமேற்கு :

(42) அலங்காரச் சித்திரம்
(43) சோழ மன்னன் பீலிவளை யைக் காந்தருவ விவாகஞ் செய்தல்
(44) பீலிவளை தன்மகன் ஆதொண்டனைச் சோழதேசம் அனுப்புதல்
(45 புயலில் அகப்பட்டுக் கப்பல் கவிழ்தல்
(46) ஆதொண்டனைச் சோழ மன்னனிடம் ஒப்படைத்தல்
(47) ஆதொண்டனுக்கு மணிமுடி சூட்டுதல்
(48) அலங்காரச் சித்திரம் (நாகமும் கன்னிகையும்)

வடக்கு:

(49) ஹம்சநாரி
(50) குபேரதேவி
(51) அட்டலக்குமிகளில் கஜலக்குமி
(52) அட்டமங்கலத்தில் தீபம் (7)
(53) மீகாமன் நவரத்தினம் பெறுதல்
54) அட்டமங்கலத்தில் சங்கம்(8)
(55) அட்டலக்குமியில் சந்தான லக்குமி
(56) ஈசான்யதேவி
(57) மகிஷாசுரமர்த்தநி

வடகிழக்கு :

(58) அலங்காரச் சித்திரம்
நாகமும் கன்னிகையும்
(59) மீகாமனும் வெடியரசனும் சண்டையிடுதல்
(60) மீகாமன் அம்பாளைப் பூசித்தல்
(61) அப்பர் சுவாமிகள்
(62) சுந்தரமூர்த்தி சுவாமிகள்
(63) மாணிக்கவாசக சுவாமிகள்
(64) அலங்காரச் சித்திரம்

இந்தச் சித்திரக் கட்டைகளுக்கு மேலே தளம் உண்டு. தளத்தில் இடப்பட்ட ஆசனத்திற்றான் அம்பாள் வீற்றிருந்து பக்தகோடிகளுக்குக் காட்சிகொடுத்துத் திருவருள் பாலிப்பாள்.

### அட்டமங்கள தரிசனம்

தெய்வ சந்நிதானத்தையாதல் வேறு எவ்விடத்தையாதல் தரிசிக்கச் செல்வோர் முதலில் அட்டமங்களத்தைத் தரிசனை செய்துகொண்ட பின்னரே தாம் வந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்வது சைவ மரபு. எனவே இந்த சந்நிதானத்தை அடையும் போதும் மங்களங்களைத் தரிசிக்க வேண்டும்; எப்பொழுதும் மங்கள மாகவே வாழவேண்டும் என்ற கோட்பாட்டிற்கியைய கண்ணாடி, நிறைகுடம், எருது இணைக்கவரி ஸ்வஸ்திகம், தாயும் சேயும், தீபம் சங்கு எனப்படும் அட்டமங்களங்கள் பொறிக்கப்பெற்றிருப்பதைக் காணலாம். புடைப்புச் சிற்பங்களில் நவநாரிகுஞ்சரம் மிக அழகாகப் பொறிக்கப் பெற்றுள்ளது. மானிடப் பிறவியின் ஒன்பது தத்துவங்களையும் அடக்கியாள ஒரு பாகன் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைச் சிற்பி பெண்கள் ஒன்பதின்மரின் உருவத்தைக் கொண்டு ஒரு யானை உருவம் சமைத்து அதன் மேல் ஒரு பாகனையும் பொறித்திருப்பது மிக அழகாகவிருக்கின்றது. இதில் சிற்பியின் கைத்திறன் நன்கு பிரதிபலிக்கின்றது. இவ்வாறே அம்சநாரியும் அமைந்திருக்கின்றது. பெண்கள் பலர் சேர்ந்து நடத்தும் லீலா விநோதங்கள் முழுத் தோற்றத்தில் ஓர் அன்னப்பட்சி உருவம் போலக் காட்சியளிக்கும் முறையில் சிற்பி சித்திரித்திருக்கின்றார். ஆறதனில் மணல் குவித்து அரிய பூசை செய்யும் காஞ்சி காமாட்சியைக் கம்பாநதி கோலத்திலும் காசி விசாலாட்சியை அன்னபூரணி திருக்கோலத்திலும் மதுரை மீனாட்சியைத் திருக்கல்யாணத் திருக் கோலத்திலும் அமர்த்தி இருக்கின்றனர். விஷ்ணு புல்லாங்குழல் ஊத பிரமன் தாளம் போட, நந்தி மிருதங்கம் வாசிக்க, நாரதர் தும்புரர் தம்புராக்களுடன் ஆடிப்பாடிக் களிக்க காளி தேவி தாண்டவமாடும் காட்சி களி பேருவகையளிப்ப தொன்றாகும்.

துங்கமிகு பக்குவச் சனகன் முதல்
முனிவோர்கள் தொழுதருகில் வீற்றிருப் [பச்
சொல்லரிய நெறியை
ஒருசொல்லா லுணர்த்தியே சொரூபாநு
பூதிகாட்டிச் செங்கமலபீடமேற்
கல்லாலடிக்குள் வளர்
சித்தாந்த முத்தி முதலே.

எனத் தாயுமான அடிகள் போற்றிய தக்ஷிணாமூர்த்தி திருவுருவத்தின் முன் நிற்கும்பொழுது எங்களையறியாமலே ஒரு அமைதி குடி கொள்கிறது.

இத்தகைய அழகிய திருவுருவங்களை ஆக்கக்கூடிய சிற்பிகள் தமிழ் நாட்டில் இன்றும் இருக்கின்றார்கள் என்பது தமிழர்களுக்கு பெருமையளிக்கக் கூடியதொன்றாகும். பெண்கள் சாதாரணமாகத் தங்களை அழகு இராணிகளாக மதிப்பது வழக்கம் இந்த மனப்பான்மை இலக்குமிக்கும் இருந்ததாம். அழகிற் சிறந்தவள் தன்னைவிட வேறொருவர் இல்லை என்ற இறுமாப்பினால் முனிவர்களின் சாபத்துக்காளாகி மீண்டும் அம்பாளுடைய கடாட்சத்தால் தன் பழைய அழகைப் பெற்ற புராணக் கதையினைப் படியாதவர்களும் இந்தத் தேரிலுள்ள சித்திரத்தின் மூலம் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் சிற்பி அமைத்திருக்கின்றார்.

கோணங்கி முனிவரும், சோணங்கி முனிவரும் கூத்தாடுவதைப் பார்த்தால் யாருக்குத்தான் சிரிப்பு ஏற்படாது. இக் காலத்துக் கோமாளிபோலக் காட்சியளிக்கின்றார் முனிவர். போர்த்துக்கீசர் கோயிலின் மேலே தொப்பிகளுடன் நின்று கோயிலை இடிப்பதும், கோயில் தாறுமாறாக உடைந்து விழுந்தறுவாயில் இருப்பதும் மிக நுணுக்கமாகக் காட்டப்பட்டுள்ள சிற்பத்தைப் பார்க்கும்பொழுது அழுகையும் கோபமும் கலந்து கிளம்புகின்றன. அருச்சுனன் நாக கன்னியைத் திருமணஞ் செய்தல். ஆபுத்திரன் மணிபல்லவத்திலுள்ள கோமுகியில் அட்சயபாத்திரத்தை இடுதல். சோழ மன்னன் பீலிவளையை மணந்து அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடைய மகனுக்கு ஆதொண்டைச் சக்கரவர்த்திப் பட்டம் சூட்டுதல், நயினைப்பட்டர் அம்பாளைப்பூசித்தல், தேவி திருஞானசம்பந்தருக்குப் பால் ஊட்டுதல், அம்பாள் முருகனுக்குச் சக்திவேல் கொடுத்தல். அம்பாளை நயினாதீவு ஆலமரப் பொந்தில் ஒளித்து வைத்தல், மீகாமன் வெடியரசன் சண்டையிடுதல் ஆதியாம் சம்பவங்கள் தேரில் சித்தரிக்கப்பட்டுள்ளன. முறுக்கு மீசையுடனும் ஆயுதங்களுடனும் தோற்றமளிக்கும் வீரமுஷ்டியைப் பார்க்கும் போது எங்களையறியாமலே வீரம் பிறந்து விடுகின்றது.

**அம்பாள் அருள்பாலிக்கும் திறன்**


தென்னிந்தியாவில் மரவேலைக்குப் பேர்பெற்ற இடம் நாஞ்சில் நாடு என்றுதான் சொல்ல வேண்டும். நீலக் கடலோரத்திலே நின்று நித்தம் தவஞ் செய்யும் கன்னியாகுமரியை அடுத்த நாகர்கோயிலில் பரம்பரையாக மரவேலைத் தொழிலில் ஈடுபட்ட குடும்பங்கள் பல உள. அத்தகைய குடும்பமொன்றில் பிறந்த ஆசாரியார்தாம் நயினாதீவுத் தேர்த் திருப்பணியையும் நிறைவேற்றினார். நாகர் கோவிலைச் சேர்ந்த தாழக்குடியில் பிறந்து இளம் வயதிலே கல்விகற்று சித்திரப் பாடங்களிற் சித்தியெய்தினார். சித்திரமும் கைப்பழக்கமாதலால், குரு சிஷ்ய முறையாக இந்த வேலையைக் கற்றுக் கொண்டார். பின்னர் 1924-ம் ஆண்டிலே சென்னைச் சிந்தாதிரிப் பேட்டையில் திரௌபதையம்மன் கோவிலுக்கு ஒரு தேர் செய்தார். இதுவே இவர் முதன் முதலாகச் செய்து நிறைவேற்றிய தேராகும். பின்னர் இந்தியாவில் பல இடங்களில் கோயிற்றிருப்பணி செய்திருக்கிறார். நாகேஸ்வரி அம்பாளின் திருவருளினால் அவள் உலாப் போதற்குரிய சித்திரத் தேர்த் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் போதே அவருடைய சஷ்டியாப்த பூர்த்தி வைபவமும் அம்பாள் சந்நிதானத்திலேயே நிறைவேறியது. அம்பாள் அருள்பாலிக்கும் திறனை யாரறிவர்.

(நன்றி : 1957 செப்டம்பர் மாத 'ஸ்ரீலங்கா'' இதழில் பிரசுரமான திரு. குலசபாநாதன் அவர்களது ''நயினாதீவு'' என மகுடமிடப்பட்ட கட்டுரை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரில்காணும் அற்புதச் சிற்பங்களில் சில

முதலாவது (அடித்தள) வரிசை :



பாலசுப்பிரமணியர், கம்பாநதி, மூஷிகவாகன விக்னேஸ்வரர்



சரஸ்வதி, தக்ஷிணாமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இண்டாவது வரிசை :



நாகம் வாயில் பூ எடுத்துக்கொண்டு கடல் கடத்தல்



கடலில் கருடன் பாம்பைக் கொல்ல எத்தனித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது வரிசை (தொடர்)



மீனாட்சி திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவியத்தை ஆலயத்திற் சேர்க்குமாறு கருடன் வணிகனுக்குக் கட்டளையிடுதல்




வணிகன் திரவியத்தை ஆலயத்திற்குச் செலுத்துதல்



போர்த்[illegible] [illegible] [illegible]ரக் கண்ணுறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது வரிசை (தொடர்) :



போர்த்துக்கீசர் செப்புத் தேர் பவளத் தேர்களைக் கடலிலே தள்ளுதல்



அம்பாள் முருகனுக்குச் சக்திவேல் அளித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது (உச்சதள) வரிசை :




அட்டமங்கலத்தில் தர்ப்பணம் - கண்ணாடி, அட்டலக்குமியில் வீரலக்குமி, இந்திராணி, விஸ்வேஸ்வரர்



அருச்சுனன் நாககன்னிகையைத் திருமணம் புரிதல், நைருதிதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காளிதாண்டவத்தில் மகாவிஷ்ணு புல்லாங்குழல் வாசித்தல்,
அட்டநாகபந்தம், நாகமும் கன்னிகையும்



வருணதேவி, திருவானைக்காவில் யானையும் சிலந்தியும்
அருள்பெற்ற வரலாற்றுச் சித்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது வரிசை (தொடர்):



அட்டமங்கலத்தில் ஸ்வஸ்திகம், அட்டலக்குமிகளில் ஐசுவரிய லக்குமி



அட்டமங்கலத்தில் ஸ்திரீவத்சம் - தாயும் சேயும்
ஐந்தலை நாகம் நாகரத்தினம் அளித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுவது வரிசை (தொடர்) :



வாயுதேவி, அட்டலக்குமிகளில் ஆதிலக்குமி



ஆதொண்டனுக்கு மணிமுடி சூட்டுதல், ஆதொண்டனைச்
சோழமன்னனிடம் ஒப்படைத்தல், புயலில் அகப்பட்டுக் கப்பல் கவிழ்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குபேரதேவி, ஹம்ஸநாரி



மகிஷாசுரமர்த்தநி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது வரிசை (தொடர்) :



மீகாமன் அம்பாளைப் பூசித்தல், மீகாமனும் வெடியரசனும்
சண்டையிடுதல், நாகமும் கன்னிகையும்



புதிய தேர் வெள்ளோட்டம் - 1957

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எழுந்தருளி அம்பாளின் இரு தோற்றங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிரமாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மூலத்தான அம்பாளும், ஐந்தலை நாகமும்





1957 தேர்த் திருவிழாவின் போது அந்நாள் அறங்காவலர் சபைத் தலைவரும், தேர்த்திருப்பணிச் சபையின் தலைவருமான, அமரர் ம. ஸ்ரீகாந்தா அவர்கள் ஒரு அடியாருடன் காணப்படுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" நாடுற்ற பலவளமுமுறையுமெழில் நயினு நகர்க்கண் மருவும் கௌரியாம் "
நாகேஸ்வரியின் திருக்கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு - 7

## அறங்காவலர் - பிராமணர் உடன்படிக்கை - 1856

# இலக்கம் — 341

1856ம் ஆண்டு ஆடி மாதம் 18ம் திகதி நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் பராமரிப்புக் கதிரித்தம்பி சின்னத்தம்பியும், முத்துக்குமாரு ஆறுமுகமும், இராமலிங்கர் சின்னத்தம்பியும், சகோதரன் இராமலிங்கர் கார்த்திகேசனும், அவ்வூர்குடி கணேசஐயர் குமாரசுவாமிஐயரும், சங்கரிஐயர் ஐயாக்குட்டி ஐயரும் என கட்டுப்பாட்டுப் பொருத்த உடன் படிக்கை எழுதிக் கொண்டதாவது.

மேற் குறித்த கோவிற் பூசைக்காரராகிய நாங்களிருவரும், மேற் சொல்லிய பராமரிப்புக்காரராகிய இவர்கள் நாலுபேரும் அந்தந்தக் காலாகாலத்தில் ஒரு நாளொன்றிற்கு இரண்டு படி அரிசியும் அதற் கடுத்த பூசைச் சாமான்களும் இவர்கள் தர நாங்கள் ஏற்றுக் கொண்டு மாதமொன்றிற்கு பதினைந்து பதினைந்து நாள் வீதமாக காலாதிகாலங் களுக்குப் பூசைபண்ணவும் நாங்கள் இந்தக் கோவில் வளவுக்கு உட் பட்ட இடத்தில் பராமரிப்புக்காரர் வைக்கிற குடியுடனே நாங்களும் குடியிருந்து பராமரிப்புக்காரர் வைக்கிற காவற்காரருடனே நாங்களும் எங்களுக்குண்டான பூசை முறையின்படி காவல் வைத்துக்கொள்ளவும் நித்திய பூசைக்கு இவர்களால் தரப்பட்ட வெள்ளி நகை, பொன் நகை களையும், பித்தளைச் சாமான் வெண்கலச் சாமான்களையும் 'விக்கிரகத் தையும் நாங்கள் தானே ஏற்று அதுகளில் ஏதாகிலும் குறைவில்லாமல் நாங்கள் பராமரித்துக் கொள்ளவும், நாங்கள் ஏற்றுக்கொண்ட சாமான் களில் யாதொரு குறைவு வரும் காலத்தில் நாங்களிருபேருமே மேற் சொல்லிய கோவிலுக்குப் பவுண் 7 சிலிங் 10 ஒரு தொகை இறுப்போ மென்றும் பராமரிப்புக் காரராகிய நாங்கள் காவல் வையாமறதவறிய அந்த நாட்களில் இவர்கள்வசம் ஒப்புவித்த சாமான்களில் ஏதாகிலும் சேதம் போனதேயுண்டானால் மேற் சொல்லிய இவர்கள் இறுக்கவேண் டிய தொகையை இவர்களிடத்தில் வாங்குகிறதில்லை என்றும் மேற் சொல்லிய இரண்டுபடி அரிசியும் அதற்குச் சேர்ந்த சாமானும் கொடா மற் தவறும் காலத்தில் மேல் விசாரணை எசமானாகிய கோப்பாய் குருக்கள் பரமசாமிக் குருக்களுடைய எண்ணத்தின்படி நாங்கள் நடந்து கொள்ளவும். பூசைக்கு ஏற்பட்ட ஐயர்மார் தங்களுக்கு நிசமித்த காலத் தில் பூசைபண்ணமல் தவறும் காலத்தில் இராசீகம் தெய்வீகம் நீக்கி மேல் விசாரணை எசமானாகிய குருக்களுக்கு இதை அறிவித்து அவர் விளங்கி சரி என்று கண்டு எங்களைப் பூசையால் விலக்கிப் போடவும் சம்மதித்து இந்தப் பொருத்தம் எழுதிக் கொண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பியும், ஆறுமுகமும், சின்னத்தம்பியும், கார்த்திகேசனும் குமாரசாமி ஐயரும், ஐயாக்குட்டி ஐயரும், ஓம்.

இதற்கு சாட்சியாக ஊரெளுக்குடி இராமலிங்க ஐயர் கார்த்திகேசய்யர் நயினதீவுக்குடி கதிரித்தம்பி இராமச்சந்திரன், வட்டு மேற்குக்குடி மைலப்பு ஆசாரியார் சித்திரவேலு, நயினதீவுக்குடி கதிர்காமர் அம்பலம் இவர்கள் சாட்சியாக இந்த உடன்படிக்கைக்கு மேற்பராமரிப்பு எசமாளுகிய கோப் பாய்க்குடி கார்த்திகேசக் குருக்களய்யா, பரமசாமிக் குருக்களய்யாவும் சம்மதித்து கையெழுத்து வைத்துவிட்டது. இந்த உறுதி மேற்குறித்த கோயி லிலிருந்து பன்னிரண்டாம் பொத்தகம் 341 ம் இலக்கத்தில் எழுதினது காரைதீவு நொத்தாரிஸ்.

| | |
|---|---|
| ( ஒப்பம் ) குமாரசாமி | சாட்சி ( ஒப்பம் ) கார்த்திகேசர் |
| ,, விளங்கவில்லை | ,, ,, விளங்கவில்லை |
| | ,, ,, சித்திரவேலு |
| | ,, ,, அம்பலம் |

நொத்தாரிசாகியநான் மேலே பெயர் கண்டிருக்கிற கணேசய்யாகுமார சாமி ஐயருக்கும், சங்கரிஅய்யா அய்யாக்குட்டி அய்யருக்கும், மேலே நிறை வேறிய உறுதியை வாசித்துக் காட்டியபின் சொல்லப்பட்ட இருவரும், சம்மதகாற ஐயரும், சாட்சிக்காறரும் என்முகதாவிலும், அவர்கள் ஒரு வருக்கொருவர் முகதாவிலும், குறித்தஆண்டு மாதம் தேதி, இடத்திலும் இவ்வுறுதியிற் கையோப்பம் வைத்தார்கள் எனதும் இவர்களை அறிவேன் என்றும் கையொப்பமும், முத்திரையும் வைக்கிறேன்.

seal

( ஒப்பம் ) சி. கந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு – 8

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான அறிவித்தல்.

## நித்திய பூஜை விபரம்.

1 கால சந்தி. காலை 7 மணிக்கு

பூஜை ஆரம்பம் :-
சூரியர், சந்திரர்.
விநாயகர்.
மூலமூர்த்தி.
உற்சவமூர்த்தி.
சுற்றுப்பரிவார மூர்த்திகள் (மாடம்)
சுப்பிரமணியர்.
நவக்கிரகம்.
ஸ்தம்பவிநாயகர்.
நந்தி, பலிபீடம்.
தேர் வைரவர்.
உள் வைரவர்.
சண்டேஸ்வரி.

2 உச்சிக்காலம் பகல் 12 மணிக்கு,

பூஜை ஆரம்பம் ;-
விநாயகர்.
மூலமூர்த்தி.
உற்சவமூர்த்தி.
சுப்பிரமணியர்.
நவக்கிரகம்.
நந்தி பலிபீடம்.
தேர் வைரவர்.
உள் வைரவர்.
சண்டேஸ்வரி.

3 சாயரட்சை மாலை 6 மணிக்கு

பூஜை ஆரம்பம் :-
விநாயகர்.
மூலமூர்த்தி.
உற்சவமூர்த்தி.
சுற்றுப் பரிவார மூர்த்திகள் (மாடம்)
சுப்பிரமணியர்.
நவக்கிரகம்.
ஸ்தப் பவிநாயகர்.
நந்தி, பலிபீடம்.
தேர் வைரவர்.
சந்திரர், சூரியர்.
உள் வைரவர்.
சண்டேஸ்வரி.

4 அர்த்த சாமம் இரவு 8 மணிக்கு

பூஜை ஆரம்பம் :-
விநாயகர்.
மூலமூர்த்தி.
உற்சவமூர்த்தி.
உள் வைரவர்.

5 மார்கழி மாதம் மாத்திரம் அதிகாலை 4.30 க்கு உஷற்கால பூஜை.
வருடாந்த மஹோற்சவம் 15 நாட்கள். ஆனிப்பூரணைத் தீர்த்தத்துடன் 16ம் நாள், தெப்போற்சவத்துடன் பூர்த்தியடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்த உற்சவங்கள்.

| | |
|---|---|
| சித்திரை, | வருடப்பிறப்பு, அபிஷேகம்; |
| ,, | சித்திரா பௌர்ணமி. |
| ,, | சதயம் திருநாவுக்கரசர் குருபூசை. |
| வைகாசி, | விசாகம். |
| ,, | மூலம் திருஞானசம்பந்தர் குருபூசை. |
| ஆனி | மகம் மாணிக்கவாசகர் குருபூசை. |
| ,, | வருடாந்தத் திருவிழா. |
| ஆடி | பூரம். |
| ,, | சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை. |
| ஆவணி | மூலம். |
| புரட்டாதி | நவராத்திரி. |
| ஐப்பசி | கந்தசஷ்டி. |
| ,, | சூரசம்மாரம். |
| கார்த்திகை | சர்வாலயதீபம் |
| ,, | விநாயகர் கதை ( 21 நாட்கள் ) |
| மார்கழி | திருவெம்பாவை ( 10 நாட்கள் ) |
| ,, | திருவாதிரை மகிமை. |
| தை | தைப்பூசம். |
| மாசி | சிவராத்திரி. |
| ,, | மகம். |
| பங்குனி | உத்தரம். |

ஒவ்வொரு பூரணை கூடி நிற்கும் இரவு 7 மணிக்கு ஸ்ரீ சக்கர பூஜை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு - 9

# அறிவித்தல்

இக்கோவிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளின் பெயராலோ, அல்லது விழாக் காலத்தில் கோவிலுக்கு வரும் பல ஆயிரக்கணக்கான இறைபயணி (யாத்திரிகர்) களுக்கு குடிநீர் விநியோகித்தல், அன்னதானம் வழங்குதல், தங்குமிட வசதிகள் அளித்தல் முதலியன ஏற்பாடு செய்வதாக போலிக்காரணம் கூறியோ பொது மக்களிடம் பணம், பொருட்கள் முதலியன கோரிவரும் தனிநபர்களுக்கும், தனிநபர்கள் சிலர் தம் சுயநலம் கருதி தாபித்துள்ள போலி ஸ்தாபனங்களுக்கும் எதுவித உதவியும் செய்ய வேண்டாமென பொதுமக்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். இக் கோவிலின் குருமார்களுக்கும் அறங்காவலர்களுக்கும்கூட அத்தகைய வசூல்களைச் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சில தனிநபர்கள் கோவிலின் பெயரைக் கூறிக் கிராமப்புறங்களில் நிதி சேகரிப்பதாக நாம் அறிய வந்துள்ளோம். இத்தகைய சமூக விரோதிகளை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் பிடித்து ஒப்படைக்கும் படியும், அவர்களைப் பற்றிய விபரங்களை எமக்கு அறியத்தருமாறும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம். கோவிலுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் "பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" என்ற முகவரிக்கு காசோலை / காசுக் கட்டளை / தபாற் கட்டளை மூலமாக தமது நன்கொடைகளை அனுப்பி வைக்கலாம். அல்லது யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் திறக்கப்பட்டுள்ள 12330-ம் இலக்க நடைமுறைக் கணக்கிலோ, அல்லது புங்குடுதீவு மக்கள் வங்கியில் திறக்கப்பட்டுள்ள 1399-ம் இலக்க நடைமுறைக் கணக்கிலோ பணத்தைச் செலுத்திப் பெற்ற வங்கிப் பற்றுச் சீட்டைத் தமது பெயர், விலாசம் முதலிய விபரங்களுடன் பொருளாளருக்கு அனுப்பி, கோவில் அலுவலகத்திலிருந்து உத்தியோகபூர்வமான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். எக்காரணம் கொண்டும் ரூபாய் நோட்டுக்களைத் தபாலில் அனுப்ப வேண்டாம்.

தங்கள் உண்மையுள்ள

**செயலாளர்,**
**அறங்காவலர் சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 10

# அறிவித்தல்

நயினை நாகபூஷணி அம்மன்கோவில் வழிபடுநர் மகாசபை உறுப்பினராகத் தம்மைப்பதிவு செய்து கொள்ள விரும்பும் யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள் வதிபவரும் இருபத்தொரு வயதிற்கு மேற்பட்ட வரும், ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட ஏதேனும் குற்றத்துக்காக நீதி மன்றமெதிலும் தண்டிக்கப்படாதவரும் சைவ சமயத்தவருமான ஆள் எவரும், கீழ்வரும் படிவத்தில் தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பத்துடன் ரூபா பத்துக்குரியதும் "பொருளாளர், நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" என்ற பெயருக்கு எழுதப்பட்டதுமான தபாற்கட்டளையையும் இணைத்து ஆண்டுதோறும் யூன் 30-ம் தேதிக்கு முன் கிடைக்கத்தக்கதாக செயலாளருக்கு அனுப்பி விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

செயலாளர்

அறங்காவலர் சபை

## மாதிரிப் படிவம்

1. முழுப் பெயர் ______________________________
   ______________________________
2. தபால் விலாசம்: ______________________________
   ______________________________
3. சமயம் : ______________________________
4. பிறந்த திகதி: ______________________________

மேற்காணும் விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட குற்றமெதற்கும் நீதிமன்றமெதிலும் தண்டிக்கப்படவில்லை எனவும் உறுதி கூறுகிறேன்.

5. விண்ணப்பதாரர் ஒப்பம்: ______________________________

குறிப்பு: 1. விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரிகள் சொந்தமாக தயார் செய்துகொள்ள வேண்டும்.

2. விண்ணப்பங்கள் கோவில் அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடப்பட வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பத்தைக் கொண்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வழிபடுநர் மகாசபை உறுப்புரிமை விண்ணப்பம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு : 11.

# கோவிலுக்குரிய காணிகள்

| ★இலக்கம் | புத்தக இல. | ஏட்டின் இல. | உறுதி இல. | அத்தாட்சி செய்த திகதி | நொத்தார் பெயர் | உறுதியில் உள்ளபடி காணிப் பெயர் | நில பரப்பா ? நெல் பரப்பா ? | நில அளவை படத்தின் விஸ்திரண | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | பர. | கு |
| 1 | 3 | 84 | — | 29-07-1860 | க, சின்னத்தம்பி | 1. தும்மினித்திடல்<br>2 சட்டன் வளவு<br>3 பொதுச்சட்டன்வளவு<br>4. பப்பரவன் சல்லி<br>5. ஊடுதிடல்<br>6. பெரியையன்சல்லி | நிலப் பரப்பு | 100 | |
| 2 | 1 | 8 | — | 04-02-1847 | ,, | 1. பெருங்குளம் மேற்குக்கரையில் வடக்கு | | | |
| | 1 | 76 | — | 16-10-1847 | ,, | 2. பெருங்குளம் கிழக்குப் பிரிவில் வடக்கு | நெல் | 8 | 4. |
| 3 & 6 | 1 | 9 | — | 04-02-1847 | ,, | பெருங்குளம் மேற்குக் கரையில் வடக்கு | ,, | 5 | 8 |
| 4 | 1 | 14 | — | 18-02-1847 | ,, | பெருங்குளம் வடக்குக் கரையில் மேற்கு | ,, | 4 | 7 |
| 5 | 1 | 14 | — | 18-02-1847 | ,, | பெருங்குளம் கிழக்குக் கரையில் தெற்கு | ,, | 1 | 0 |
| 7 | 1 | 9 | — | 04-02-1847 | ,, | மேற்குக் கரையில் வடக்குப் பெருங்குளம் | ,, | 2 | 0. |
| 8 | — | — | 99 | 07-12-1872 | மு. ஆறுமுகம் | வல்லவராய வயல் | ,, | 1 | 11. |
| 9 | — | — | ,, | ,, | ,, | பிள்ளையார் புலம் | ,, | 4 | 4. |
| 10 | — | — | ,, | ,, | ,, | பெருங்குளம் வயல் பெருங்குளம் கயிலி வயல், ஊமைதட்டு | ,, | 4 | 0. |
| 11 | — | — | 167 | 06-08-1885 | க. சின்னத்தம்பி | நம்மந்த வயல் | ,, | 4 | 11. |
| 12 | — | — | 167 | ,, | ,, | நம்மந்த வயல் | ,, | 2 | 2. |
| 13 & 14 | — | — | 167 | ,, | ,, | நம்மந்த வயல் | ,, | 3 | 4 |
| 15 | — | — | 167 | ,, | ,, | நம்மந்த வயல் | ,, | 1 | 6 |
| 16 | — | — | 167 | ,, | ,, | பெரியபுலம் | ,, | 2 | 01 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப காணிகள் பற்றிய விபரம்

| ..படி ..ர் | நில பரப்பா ? நெல் பரப்பா ? | நில அளவைப் படத்தின் படி விஸ்திரணம் பர. | குளி | நில அளவைப் பட இலக்கம் | நில அளவை செய்த திகதி | நில அளவையாளர் பெயர் முகவரி | குத்த. உறுதி இல. | அத்தாட்சி செய்த திகதி | நொத்தாரிஸ் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ..ல் ..ளவு ..ி ..லி | நிலப் பரப்பு | 100 | | 878 | 09-06-1952 | வி. ஆறுமுகம் பண்டத்தரிப்பு | | | |
| ..மற் ..டக்கு ..மக் ..டக்கு | நெல் | 8 | 4.44 | 281 | 08-04-1961 | சி. சி. குமாரசாமி 170, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம் | 569 | 23-7-1950 | க. வே. முத்துலிங்கம் |
| ..குக் | ,, | 5 | 8·36 | 284 | 08-04-1961 | ,, | | | |
| ..குக் | ,, | 4 | 7·53 | 282 | 08-04-1961 | ,, | 569 | ,, | ,, |
| ..துக் | ,, | 1 | 0.00 | — | — | | 569 | ,, | ,, |
| ..ாம் | ,, | 2 | 0.00 | 283 | 08-04-1961 | ,, | 569 | ,, | ,, |
| | ,, | 1 | 11.9 | 287 | 09-04-1961 | ,, | 569 | ,, | ,, |
| | ,, | 4 | 4.43 | 286 | 09-04-1961 | ,, | 569 | ,, | ,, |
| ..ி | ,, | 4 | 0.45 | 285 | 09-04-1961 | ,, | 569 | ,, | ,, |
| | ,, | 4 | 11.5 | 279 | 18-09-1960 | ,, | | | |
| | ,, | 2 | 2.9 | 278A | 18-09-1960 | ,, | | | |
| | ,, | 3 | 4·26 | 278 B | 18-09-1960 | ,, | | | |
| | ,, | 1 | 6 | — | — | | | | |
| | ,, | 2 | 01.1 | 276 | 18-09-1960 | இ. சி. குமாரசாமி | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | 8 | — | 04-02-1847 | க. சின்னத்தம்பி | அரக்குத் தோட்டம் | நெல் | 2 | 01.1 |
| 18 | — | — | 302 | 14-11-1911 | அ. கந்தையா | கிராய்நின்றபுலம் | நிலப் பரப்பு | 3 | 02 |
| 19 | — | — | | | | நாலாநாட்டான் | நெல் | 24 | 10 |
| 20 | — | — | 4 | 12-01-1864 | கா. தாமோதரர் | பாலா குளம் | | | |
| 21 | — | — | 284 | 31-12-1861 | யாழ். பிஸ்கால் கந்தோர் | பாலாகுளமும் முத்தட்டுப் பொக்கரணியும் | | | |
| 22 | — | — | | | | சத்துரு சிங்கன் பகுதி | நெல் | 19 | 5.6 |
| 23 | — | — | | | | ஆவரங்காட்டுக்கு வடக்கு | நெல் | 10 | |
| 24 | — | — | 2834 | 13-06-1885 | ஆ. முருகேசர் | உதருப்பிட்டி | நிலப் பரப்பு | 05 | |
| 25 | — | — | 61 | 16-06-1875 | மு. கந்தசாமி | சிதாரி | நிலப் பரப்பு | 01 | 04 |
| * 26 | — | — | உறுதி கைவசம் இல்லை | | | ஊடுதிடலும் தும்மினித் திடலும் | நிலப் பரப்பு | 07 | 13. |
| * 27 | — | — | 4171 | 09-06-1969 | ப. கதிரவேலு | வல்லிக்காடும் சூரிய வல்லிக்காடும் | , | 05 | |
| * 28 | — | — | 6403 | 26-03-1973 | ப. கதிரவேலு | முனையிற் சல்லி | ,, | 06 | 1. |
| * 29 | — | — | 7329 | 29-05-1974 | இ. சிவசுப்பிரமணியம் | முனையிற் சல்லி, பெரிய சல்லி, ஆட்டயன் திடல், கொல்லன் திடல், வல்லிக்காடு | ,, | 107 | 1 |
| * 30 | — | — | 248 | 16-11-1975 | கா. சி. செ. முத்துக்குமாரு | வல்லிக்காடும், சூரிய வல்லிக்காடும், கேணிக் குளியும் | ,, | 03 | 0 |
| * 31 | — | — | 1666 | 23-02-1982 | செ. புண்ணியமூர்த்தி | வல்லிக்காடு | ,, | 03 | |

★ யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் 14151-ம் இலக்க வழக்கில் வழங்கப்பட்ட உரித்தாக்கற் கட்டளையிலுள்

* இக்குறியிடப்பட்ட, 26 — 31-ம் இலக்கக் காணிகள் 1949-ம் ஆண்டில் உரித்தாக்கற் கட்டளை வழங்கப்பட்ட

கோவிலுக்குரிய அரச காணிகள் : 32. இராமநாதபுரத்தில் கல்மடுக்குளத்திட்டத்தின் கீழ் மூன்று ஏக்கர்

33. அதேயிடத்தில், (7) ஏழு ஏக்கர் மேட்டுக் காணியும் அரசாங்கத்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | 2 | 01.1 | 277 | 18-9-1960 | சி. சி. குமாரசாமி | 565 | 23-7-1950 | வே. க. முத்துலிங்கம் |
| | நிலப் பரப்பு | 3 | 02 | 280 | 1960/1961 | ,, | 568 | 23-7-1950 | ,, |
| | நெல் | 24 | 10 | 274 | 17-9-1960 | ,, | | | |
| | | | | 186 | | ,, | 583 | 6-8-1950 | ,, |
| 5ட் | | | | 273 | | ,, | 579-85 | 6-8-1950 | ,, |
| ந | நெல் | 19 | 5.64 | 187 | 21-6-1959 | ,, | | | |
| | நெல் | 10 | | | | | | | |
| | நிலப் பரப்பு | 05 | | | | | | | |
| | நிலப் பரப்பு | 01 | 04 | 171 | 11-4-1959 | ,, | | | |
| | நிலப் பரப்பு | 07 | 13.6 | 275 | 18-9-1960 | ,, | | | |
| | ,, | 05 | | 1 | 1983 | க. நாகேஸ்வரன் | | | |
| | ,, | 06 | 1.4 | 224 | 19-7-1964 | K. இராசையா | | | |
| ன் | ,, | 107 | 16 | 516 | 18-4-1974 | P. A. சேனாதிராசா | | | |
| க் ம் | ,, | 03 | 02 | 2 | 1983 | க. நாகேஸ்வரன் | | | |
| | ,, | 03 | 0 | — | — | — | | | |

த்தாக்கற் கட்டளையிலுள்ள அட்டவணையில் உள்ளபடி காணியின் இலக்கம்.
கட்டளை வழங்கப்பட்ட பின்னர், கோவில் நிர்வாகத்தால் கொள்வனவு செய்யப்பட்டவை.
ன் கீழ் மூன்று ஏக்கர் (3) நெற்காணியும்,
காணியும் அரசாங்கத்தால் குத்தகை வழங்கப்பட்டுள்ளன.

183631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு:- 12

# அறங்காவலர் - குருமார் - ஊழியர் விபரம்

அறங்காவலர் சபை :

தலைவர் :

1. வைத்திய கலாநிதி. தியாகர் திருநாவுக்கரசு LL. B. (Cey.)
(சட்டத்தரணி, 2-ம் வட்டாரம், நயினாதீவு)

செயலாளர் :

2. நாகேசு சிவராசசிங்கம்
"ஆனந்த பவனம்" (இல. 3, துரைசாமி ஒழுங்கை, 2-ம் வட்டாரம், நயினாதீவு)

பொருளாளர் :

3. கந்தசாமி கனகசபாபதி
(இளைப்பாறிய ஆசிரியர், முதலாம் வட்டாரம், நயினாதீவு)

உறுப்பினர்கள் :

4. ஆறுமுகம் தியாகராசா
(நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனியா)

5. தி. கந்தையா மகாலிங்கசிவம்
(சமாதான நீதிவான், 33, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்)

6. விசுவலிங்கம் சபாநாதன்
(5A வட்டாரம், நயினாதீவு)

7. வேலுப்பிள்ளை பொன்னம்பலம்
(2-ம் வட்டாரம், நயினாதீவு)

8. சோமசுந்தரம் செல்வரெத்தினம்
(6-ம் வட்டாரம், நயினாதீவு)

9. இரகுப்பிள்ளை தியாகராசா
(விற்பனை முகாமையாளர், இலங்கைக் கனிப்பொருள் கூட்டுத்தாபனம்
167, ஸ்ரீவிபுலசேன மாவத்தை, கொழும்பு-10)

குருமார்கள் :

உற்சவகாலக் குரு: சிவஸ்ரீ முத்துக்குருக்கள் பரமசாமிக்குருக்கள், கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய பூசை உரிமைக்குருக்கள் :

1. சிவஸ்ரீ சாமிநாதக்குருக்கள் பரமேஸ்வரக்குருக்கள்
79, வீடமைப்புத்திட்டம், திருநெல்வேலி, கோப்பாய்

2. சிவஸ்ரீ சாமிநாதக்குருக்கள் பாலசுந்தரக்குருக்கள்
கந்தசாமி கோவிலடி நீர்வேலி.

3. சிவஸ்ரீ சம்புஹேஸ்வரக்குருக்கள் மஹேஸ்வரக்குருக்கள்
நயினாதீவு

4. சிவஸ்ரீ கைலாயநாதக்குருக்கள் வாமதேவக்குருக்கள்
கந்தசாமி கோவிலடி, பெருங்காடு, புங்குடுதீவு.

5. சிவஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் நடராஜக்குருக்கள்
C/o சண்முகரத்தினக்குருக்கள், சிவன்கோவில், திருகோணமலை.

உதவிக்குருக்கள் : சிவஸ்ரீ ந. ராதாகிருஷ்ணக்குருக்கள்

பாகசாலை ஐயர் : சிவஸ்ரீ வெங்கடேசஐயர் நாராயணஐயர்

**ஊழியர்கள் :**

1. நிறைவேற்று அலுவலர் : பொ. திருநாவுக்கரசு
2. கடமைபார்க்கும் கணக்காளர் : மு. இராமலிங்கம்
3. காசாளர் : வே. பாலசுப்பிரமணியம்
4. உதவிக் காசாளர் : சி. சிவசுப்பிரமணியம்
5. கணக்கு எழுதுநர் : செல்வி கி. தெய்வகலா
6. தட்டெழுத்து எழுதுநர் : செல்வி க. கல்யாணி
7. அலுவலக ஊழியர் : சு, விசயராமலிங்கம்
8. தவில்நாதஸ்வரக் குழு : க. மகேஸ்வரன்
9. பண்டாரம் : வீ. இராசலிங்கம்
10. படகுச் சாரதி : க. ஜெகதீஸ்வரன்
11. படகுத் தண்டயல் : இ. பொன்னையா
12. காவலாளி : ஆ. முத்துக்கிருஷ்ணன்
13. தொழிலாளி :: சோ. சிவனடியான்
14. சுத்திகரிப்புத் தொழிலாளி : வே. மாதன்

University of Jaffna
183631
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org